# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, ஆடி (ஜூலை) 27, 2018. இதழ் - 23


## இலங்கையின் இறைமை?



இலங்கையின் உள்நாட்டுப் இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை. அதற்கான முனைப்புகளும் சீரகவில்லை.
உண்மையில் நிலைமை மேலும் மோசமாகிக்கொண்டே செல்கின்ற

பக்கம் - 04



## வடக்குக் கிழக்கின் பிரச்சினைகள் என்ன?

ஈழத்தமிழர்களுடைய பொதுப் பிரச்சினைகள் என்ன? விசேட பிரச்சினைகள் என்ன?

பக்கம் - 04



## சிறுவர் இல்லங்களில் கட்டிளமைப்பருவத்தினர்கள்

மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கை என்பது பெற்றோர் பிள்ளைகள், உறவினர்கள், அயலவர்களுடன் பிணைந்தது.

பக்கம் - 22

## உறக்கம் வராத சுடலைமாடன்



சுடலை மாடன் வில்லுப்பாட்டுப் பார்க்க அன்று பின்னேரம் என்னை அதிபர் ராஜகோபால் வேனில் காகல மடவல

பக்கம் - 18

# ‘வீடமைப்பில் வடக்கு, கிழக்கு புறக்கணிப்பு’




போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் மக்களுக்கு தேவையான வீடுகளை மீளக்கட்டிக் கொடுப்பதில் இலங்கை அரசாங்கம் போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று தேசிய ஒருமைப்பாட்டு, நல்லிணக்க அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கில் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் வீடுகள் தேவையாக இருப்பதாக கூறியுள்ள அமைச்சர், அதில் இந்தியாவினால் மாத்திரம் ஐம்பதினாயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

மீதம் தேவையான ஒரு லட்சம் வீடுகளில், அமைச்சர் சுவாமிநாதன் அவர்களிடன் 40,000 வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று கூறப்பட்டதாகவும், அதில் ஒரு வீட்டைக் கூட இதுவரை கட்டிமுடிக்கவில்லை என்றும் மனோகணேசன் கூறியுள்ளார்.

அதன் பின்னர், தன்னிடம் தற்போதைய அமைச்சுப் பொறுப்பு கொடுக்கப்பட்ட பிறகு, ஐம்பதினாயிரம் வீடுகளை கட்டுவதற்கான பொறுப்பு கொடுக்கப்பட்டதாகவும், ஆனால், தான்கூட இந்தப் பணிகளை செய்வதில் பெரும் இடையூறுகளை எதிர்கொள்வதாகவும் அமைச்சர் மனோகணேசன் கூறியுள்ளார். இந்த நிலையில் இந்த விடயம் குறித்த வடக்கு கிழக்கு மக்களின் கோபம் நியாயமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயங்களை தான் அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதியிடம் வலுவாக கூறியுள்ளதாகவும் மனோ கணேசன் தனது முகநூல் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

வீடுகளைக் கட்டுவது குறித்து பேசத்தொடங்கி மூன்று வருடங்களாகியும் அங்கு இதுவரை உருப்படியாக எதுவும் நடக்கவில்லை

தொடர்ச்சி... (பக்கம் -02 )

## மட்டக்களப்பில் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு விழா



தமிழ் பரா விளையாட்டுப் போட்டிகள் என்னும் பெயரில் மாற்றுத்திறனாளிகளுக்கான இரு நாள் விளையாட்டு விழா ஒன்று மட்டக்களப்பு வெபர் விளையாட்டு அரங்கில் இம்மாதம் (ஜூலை) 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதற்கான அழைப்பை மட்டக்களப்பு மாற்றுத்திறனாளிகள் ஒன்றியம் விடுத்துள்ளது.

இது குறித்த ஊடகங்களுக்கான சந்திப்பு ஒன்றில், பேசிய மட்டக்களப்பு மாற்றுத்திறனாளிகள் சம்மேளனத்தின் தலைவரான கே. ஜீவராசா, அனைவரும்

தொடர்ச்சி... (பக்கம் -02 )







# கதிர்காமம் காட்டுப் பாதையில் காணாமல் போனவர்



கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை பயணத்தின் போது தனது இளைய மகனான நல்லையா குகதாஸ் (குகன், 28 வயது) காணாமல் போய்விட்டதாக அவரது தாயாரான, கொக்கட்டிச்சோலை, முனைக்காட்டைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை யோகநாயகி தெரிவித்துள்ளார்.

நடுக்காட்டில் வைத்து தனது மகன் காணாமல் போனதாகக் கூறும் இவர், கடந்த 10 நாட்களாகத் தேடியும் அவர் இதுவரை கிடைக்கவில்லை என்கிறார்.

இவரை கண்டவர்கள், 0775566052 என்ற தொலைபேசிக்கு அறியத்தருமாறு அவர் கோரியுள்ளார்.

தனது மகனுக்கு வாய் பேச முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே கதிர்காமக் காட்டுப் பாதை மூடப்பட்டு விட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.
(காரைதீவு நிருபர் சகா)

# 'வீடமைப்பில் வடக்கு, கிழக்கு புறக்கணிப்பு'

தொடர்ச்சி...
என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவுடனான ஒப்பந்தம்

இதற்கிடையே, வடக்கில் நாற்பதினாயிரம் வீடுகளை கட்டுவது தொடர்பில் சீனாவுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் இந்தியாவின் கைகளுக்கு மாறுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

ஏற்கனவே வடக்கு கிழக்கில் ஐம்பதினாயிரம் வீடுகளை இந்தியா கட்டிக்கொடுத்துள்ளது. அதுமாத்திரமல்லாமல், வடக்கு கிழக்கில் வீடமைப்பு மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகிய திட்டங்களில் இந்தியா ஈடுபட்டுள்ள நிலையில் அங்கு சீனாவுக்கு இடம் தருவதை இந்தியா விரும்பாது என்று அரசாங்கத்தின் ஒரு பகுதியினர் கருதுகிறார்கள்.

ஆகவே, சீனாவிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டு இதுவரை செயற்படுத்தப்படாத நாற்பதினாயிரம் வீடுகளை இந்திய ஒப்பந்ததாரர்களுக்கு வழங்குவது குறித்து அமைச்சரவை ஆலோசித்துள்ளது.

இந்தியாவின் வீடுகள் சீனாவின் வீடுகளை விட மலிவானவை என்பதுடன், இலங்கை சுற்றாடலுக்கும் உகந்தவையாக இருப்பதாக சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரலெழுப்பியுள்ளனர்.

ஆகவே இந்த விடயத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றுடன் ஆராய்ந்து இது குறித்த மாற்றுத்திட்டத்தை போடுமாறு ஜனாதிபதி பணித்துள்ளதாகவும், அமைச்சரவை வட்டாரங்கள் கூறுகின்றன.

# வருடத்துக்கு 600 க்கும் அதிகமான புலம்பெயர் பணியாளர் மரணம்

இலங்கையில் இருந்து வெளிநாடு சென்று வேலைபார்க்கும் பணியாளர்கள் வருடாந்தம் 600 க்கும் அதிகமானோர், அங்கு எதிர்கொள்ளும் பல்வேறு காரணங்களால் மரணமாவதாக வெளியுறவு இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையை மாற்ற உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வெளிநாடுகளில் வேலைபார்க்கும் இலங்கையரை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# இம்ரன் ஹானின் கட்சி முன்னிடம்

பாகிஸ்தான் தேர்தலில் ஆரம்பகட்ட முடிவுகளின்படி முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரன் ஹானின் பிரிஜ கட்சி முன்னிடம் வகிக்கிறது.



அரைவாசி வாக்குகள் எண்ணப்பட்டுவிட்ட நிலையில், அவர் பிரதமராவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக கூறப்படுகின்றது.

வாக்களிப்பில் மோசடி இடம்பெற்றதாக எதிர்க்கட்சிகள் கூறும் குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ளார்.

எப்படியிருந்தாலும், அவரால் கூட்டணி ஆட்சியையே அமைக்க முடியும் என்று கூறப்படுகின்றது.

# விமானத்தில் இருந்து இறக்கப்பட்ட பிக்கு

கட்டுநாயக்க விமான நிலையத்தில், லண்டன் செல்வதற்காக விமானத்திற்கு ஏறிய உடுவே தம்மாலேக தேரர் விமானத்தில் இருந்து அதிகாரிகளால் இறக்கப்பட்டார்.

வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கும் நீதிமன்ற உத்தரவு காரணமாகவே அவர் இறக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. லண்டனில் இவ்வார இறுதியில் நடைபெற உள்ள சொற்பொழிவுகளில் கலந்து கொள்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அவர் வந்திருந்தார்

# மட்டக்களப்பில் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு விழா

இந்த விழாவில் கலந்துகொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

மாற்றுத்திறனாளிகளின் பல்வேறு நலத்திட்டங்களில் செயற்பட்டுவரும் தமது அமைப்பு, கடந்த 3 வருடங்களாக மாற்றுத்திறனாளிகளுக்காக இந்த விழையாட்டு விழாவை நடத்தி வருவதாக அவர் கூறியுள்ளார்.

அதேவேளை வரும் 29ஆம் திகதி மட்டக்களப்பு நாவற்குடா விளையாட்டு மைதானத்தில் இணை நிகழ்வு ஒன்றையும் தாம் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இந்த நிகழ்வுக்கான ஆதரவினையும் ஒருங்கிணைப்பினையும் சமூக சேவைகள் திணைக்களம் வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த ஊடகச் சந்திப்பில் மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் சாரங்கபாணி அருள்மொழி, அமைப்பின் செயலாளர் ரி. அரிதாஸ், ஆலோசகர் எஸ். பரமானந்தம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஐபிசி தமிழ், டேட்டா, நம்பிக்கை ஒளி மற்றும் அபி டைமண்ட்ஸ் ஆகிய நிறுவனங்கள் இந்த நிகழ்வுக்கான முக்கிய அனுசரணையை வழங்குகின்றன.

# வெலிக்கடைச் சிறை அரசியல் படுகொலை



வெலிக்கடைச் சிறை அரசியல் படுகொலையின் 35வது வருட நினைவு நாள் அஞ்சலி திருகோணமலையிலும் நிகழ்த்தப்பட்டது. திருகோணமலை ஒல்லாந்தர் குடா கடற்கரை முன்றலில் அமைக்கப்பட்டுள்ள வெலிக்கடை தியாகிகள் மண்டபத்திற்கு முன்னால் கடந்த புதன்கிழமை மாலை இது நினைவுகூரப்பட்டது. தமிழீழ விடுதலை இயக்கத்தின் நிர்வாக செயலாளர் நித்தியானந்தன் தலைமையில் இது நடைபெற்றது. திருகோணமலை நகர சபை உறுப்பினர் தி.பவித்திரன், திருகோணமலை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் சி.நவரெத்தினம் மற்றும் ஆர்வலர்கள் இணைந்து 6.35 மணிக்கு நினைவுச்சுடரினை ஏற்றி வைத்தனர்.

கதிரவன் திருகோணமலை

# முன்னாள் கூடைப்பந்து வீரர் கரிகாலன் காலமானார்



1970களின் இறுதியில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் கூடைப் பந்தாட்ட வீரராக

திகழ்ந்த ஆறுமுகம் கரிகாலன் காலமானார். புனித மிக்கேல் கல்லூரிக்கு பல அகில இலங்கைப் போட்டிகளில் வெற்றி வாகை சூடிக்கொடுத்த இவர், மட்டக்களப்பு மண்ணுக்கு புகழ் சேர்த்துக்கொடுத்த ஒரு விளையாட்டு வீரராவார்.

கூடைப்பந்து என்பது உயரமானவர்களுக்கான ஒரு விளையாட்டு என்ற கருத்தை தனது விளையாட்டுத்திறனால் உடைத்தெறிந்த கரிகாலன், தனக்கு பின்னால் கூடைப்பந்து ஆடவந்த பல மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

அவரது இறுதி நிகழ்வுகள் ஜுலை 27ஆம் திகதி நடைபெறும்.

# ஈழ நிலத்தின் பெரும் கலைஞன் வில்லுப்பாட்டு வீரசிங்கம் காலமானார்



ஈழம் தந்த பெரும் கலைஞன் வில்லுப் பாட்டு வீரசிங்கம் கடந்த 25.07.2018 புதன் கிழமை காலமானார். கலா பூசணம் உட்பட உயர் கலை விருதுகளுக்குச் சொந்தக்காரர். பல்கலை விற்பன்னர் நாடகம், கவிதை, காவியம், நடிப்பு, இசை, நடனம், சிற்பம், எழுத்து என எல்லாக் கலைகளும் கைவரப்பெற்ற பன்மைத்துவ ஆளுமை என்ற சொல்லுக்கு அர்த்தம் தந்த அற்புத கலைஞன் .

சேனையூரின் கலைக் காவலன் பல கலைஞர்களுக்கு நடிப்பு, நாடகம், இசை, நடனம் சொல்லிக் கொடுத்த ஆசான்.

மரபும் புதுமையும் புரட்சிகர எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுத்த்த மகா கலைஞன் சேனையூரின் புகழ் பூத்த அறிஞர் விஜயசிங்கம் காளியப்பு அவர்களின் கலா வாரிசாய் கடைசிவரை வாழ்ந்து தான் வாழ்ந்த மண்ணுக்கும் மக்களுக்கும் பெருமை சேர்த்தவர்.

# 'செய்திகளின் மறுபக்கம்' நூல் வெளியீடு




சிரேஷ்ட ஊடகவியலாளரும் முன்னாள் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் தலைவராக இருந்து ஆக்கபூர்வமான பல சேவைகளை செய்த, இரா.துரைரத்தினம் அவர்களின் ""செய்திகளின் மறுபக்கம்"" நூல் வெளியீடு - எதிர்வரும் 29ஆம் திகதி 9.30மணிக்கு மட்டக்களப்பு கல்லடி கல்வி அபிவிருத்தி சபை மண்டபத்திலும், ஓகஸ்ட் 4ஆம் திகதி கொழும்பு தமிழ்சங்க மண்பத்தில் மாலை 4.30 மணிக்கும் நடைபெற உள்ளன.



# வளத்தாப்பிட்டியில் நுண்கடன் தற்கொலை செய்த 24வயது இளம்தாய்!

# மட்டக்களப்பில் 5மாதங்களில் 55நுண்கடன் தற்கொலைகள்!



அம்பாறை மாவட்டத்தில் நுண்கடன் தற்கொலைகள் அதிகரித்துவருகின்றன.

அம்பாறை வளத்தாப்பிட்டி பிரதேசத்திலுள்ள பளவெளிக்கிராமத்தைச் சேர்ந்த இளம்தாய் ஒருவர் நுண்கடனைச் செலுத்த முடியாமல் தற்கொலை செய்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. பளவெளிக்கிராமத்தில் வசிக்கும் 2 பிள்ளைகளின் தாயான 24 வயதுடைய நாகராசா பிரசாந்தினி என்பவரே இவ்விதம் தற்கொலைசெய்துள்ளார்.

இவர் 3க்கும் மேற்பட்ட நுண்கடனைப்பெற்றுள்ளார். அவற்றை மீளச்செலுத்துமுடியாமலும் அறவீடு செய்பவர்களின் அழுத்தம் காரணமாகவும் விரக்தியில் அலரி விதை உட்கொண்டு தற்கொலை செய்துள்ளதாகத் தெரிகிறது.

சம்மாந்துறைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த மாதம் அக்கரைப்பற்றுப் பிரதேசத்திலும் ஒருபெண் தற்கொலை செய்துள்ளார்.

மட்டு.மாவட்டத்தில் மட்டும் கடந்த 5மாதங்களில் 55தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. 2016ஆம் ஆண்டில் 97 தற்கொலைகளும் 2017ஆம் ஆண்டில் 116 தற்கொலைகளும் சம்பவித்துள்ளன.

இப் புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடுகையில் நுண்கடன் தற்கொலைகளின் வீதங்கள் அதிகரித்து வருவதை அவதானிக்கக்கூடியதாயுள்ளது.

(காரைதீவு நிருபர் சகா)

# விளாவூர் விளையாட்டு விழா



கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் மண்முனை மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்திய பாரம்பரிய விளையாட்டு நிகழ்வு, 20. 07. 2018 அன்று விளாவட்டவான் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இந்தப் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வு மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் சி.சுதாகர் தலைமையில் நடைபெற்றது. அதன்போது பிடிக்கப்பட்ட படம்.

(விளாவூர் நிருபர்)

# தம்பலகாமத்தில் ஆடிப்பிறப்பு



தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் ஆடிப்பிறப்பு விழாவும் சமூக விழிப்புணர்வும் ஞாயிற்றுக்கிழமை 2018.07.22 காலை நடைபெற்றது. திருகோணமலை ஹற்றன் நெசனல் வங்கியின் அனுசரணையில் ஆதிகோணநாயகர் ஆலய தேவஸ்தான பரிபாலன சபை, விவசாய அமைப்புகள் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

தம்பலகாமம் பிரதேசத்தில் இயங்கும் அறநெறி பாடசாலை மாணவர்கள் 200 பேருக்கு கற்றல் உபகரணங்களும் வங்கியினால் வழங்கி வைக்கப்பட்டன. ஹற்றன் நெசனல் வங்கி முகாமையாளர் மகேசன் தயாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இவ்விழாவின் நினைவாக ஆலய வளாகத்தில் மரக்கன்றுகளும் நட்டு வைக்கப்பட்டன.

வரலாற்றில் முதல் முறையாக தம்பலகாமத்தில் ஆடிப்பிறப்பு விழா நடத்தப்படுவதாக பிரதேச செயலாளர் அங்கு குறிப்பிட்டார். இனி வருங்காலத்தில் இவ்விழாவினை வருடாந்தம் நடத்துவதற்கு விவசாய அமைப்புகள் சம்மதம் தெரிவித்தன.

(கதிரவன் திருகோணமலை)

# கோவிலுர் செல்வராஜனின் "கொத்துரொட்டி" சிறுகதைநூல் வெளியீடு!



நாடறிந்த எழுத்தாளர் கோவிலூர் செல்வ ராஜனின் 12வது நூலான "கொத்துரொட்டி" சிறுகதைத் தொகுப்பு நூல் கடந்த ஜூலை 22இல் வெளியிட்டுவைக்கப்பட்டது. மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடந்த இந்நூல்வெளியீட்டு விழாவிற்கு பிரதம அதிதியாக மட்டு.மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் கலந்து சிறப்பித்தார்.

வரவேற்புரையை தமிழ்ச்சங்க துணைச்செயலாளர் திருமதி பிரியா கருணாகரன் நிகழ்த்த, அறிமுகவுரையை தமிழ்ச்சங்கச் செயலாளர் வே.தவராசா நிகழ்த்த, வெளியீட்டுரையை சட்டத்தரணி மு.கணேசராசா நிகழ்த்தினார். ஏனைய அதிதிகளாக வீதிஅபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் த.பத்மராசா, குடும்பநல வைத்தியநிபுணர் டாக்டர் க.அருளாநந்தம், ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகரி டாக்டர் கி.ரமேஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

நயவுரையை கிழக்குப்பலக்லைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் ரூபி வலன்ரினா பிரான்சிஸ் நிகழ்த்தினார். முதற்பிரதியை தேசபந்து மு.செல்வராஜா பெற்றுக்கொண்டார்.

நூலாசிரியருக்கு பேராசிரியர் மா.செல்வராஜா பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

மெல்லிசை மன்னர் எம்.பி.பரமேஸ் அவர்களின் 48 பாடல்கள் அடங்கிய இறுவெட்டு கலந்துகொண்ட அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது. இடையிடையே கோவிலுர் செல்வராஜனின் பாடல்களும் மேடையை அலங்கரித்தன.

அழையா விருந்தாளியாக பிரபல எழுத்தாளரும் கல்வியமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளருமான உடுவை தில்லை நடராஜா கலந்துகொண்டு நூலாசிரியருக்கு கௌரவமளித்தார்.

இவ்வெளியீட்டில் கிடைத்த நிதியை நூலாசிரியர் கோவிலூர் செல்வராஜன் தர்மஸ்தாபனத்திற்காக டாக்டர் ரமேசிடம் கையளித்தார்.

(விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா)

# விபுலாநந்தாவில் சுவாமி விபுலாநந்தரது 71வது சிரார்த்ததினம்!



விபுலாநந்தாவில் சுவாமி விபுலாநந்தரது 71வது சிரார்த்ததினம்!
உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரது 71வது சிரார்த்த தினம் கடந்த வியாழக்கிழமை காலை, காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் பிரதி அதிபர் எம்.சுந்தரராஜன் தலைமையில் நடைபெற்றது. அங்கு அவர் சுவாமியின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதையும் ஆசிரியர்கள் அணிவிப்பதையும் ஆசிரியை திருமதி அருந்தவவாணி சசிக்குமார் உரையாற்றுவதையும் மாணவர்களையும் காணலாம்.

(படங்கள் காரைதீவு நிருபர் சகா)

# பிரியாவிடை திருகோணமலை




திருகோணமலை பீனிக்ஸ் கல்வி நிலையத்தில் இருந்து இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு சனிக்கிழமை 2018.7.22 மாலை நடைபெற்றது. கல்வி நிலையத்தின் நிர்வாகி பத்மபிரசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஐக்கிய தேசிய கட்சியின் திருகோணமலை மாவட்ட செயலாளர் சொர்ண குருஹே, பிரதான ஒழுங்கமைப்பாளர் சரத் லோரன்ஸ் ஹேவா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், ஊடகவியலாளரும் ஆசிரியருமான சி.சசிகுமார், திருகோணமலை நகர சபை உறுப்பினர் திருமதி தீபானி லியனகே ஆகியோர் விசேட விருந்திர்களாகவும் கலந்து கொண்டனர். இந்கிழ்வில் சமயப் பணியாற்றிவரும் திருமால் வீதியைச் சேர்ந்த ச.ஸ்ரீஸ்கந்தராஜா பொன்னாடை அணிவித்து, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டது.

(கதிரவன் திருகோணமலை)

# இலங்கையின் இறைமை?

இலங்கையின் உள்நாட்டுப் இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை. அதற்கான முனைப்புகளும் சீரகவில்லை. உண்மையில் நிலைமை மேலும் மோசமாகிக்கொண்டே செல்கின்றது.

ஆனால், அண்மைக்காலமாக இங்கு புதிய ஒரு சிக்கலுக்குள் இலங்கை அகப்பட்டுவருவதாக வரும் செய்திகள் கூறுகின்றன. சில அரசியல்வாதிகளும் அதனை கோடிகாட்டுகின்றனர்.இது வெறும் உள்நாட்டுப் பிரச்சினை அல்ல. வெளிநாட்டுச் சக்திகளும் சம்பந்தப்பட்ட, இலங்கையின் இறைமையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினை.

இலங்கையின் அமைவிடம் காரணமாக சீனா, இந்தியா உட்பட அண்டைய நாடுகளும், ஓரளவு மேற்குலக சக்திகளும் சம்பந்தப்பட்டதான, வணிக, அரசியல், இராஜதந்திரப் போட்டி ஒன்று இங்கு தொடர்ந்துகொண்டிருக்கின்றது. துறைமுகங்கள் உட்பட இலங்கையின் முக்கிய நிலைகள் வேற்று நாட்டு ஆளுகைக்குள் மறைமுகமாகவேனும் செல்லும் ஒரு நிலை எதிர்காலத்தில் இலங்கைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம். ஏற்கனவே இந்த பொறிக்குள் இலங்கை அகப்பட்டுவிட்டதோ என்ற அச்சம் பல இராஜதந்திரிகள், ஆய்வாளர்கள் மத்தியில் ஏற்பட்டுவிட்டது.

ஏற்கனவே உள்ள உள்நாட்டுப் பிரச்சினையே இன்னமும் தீர்க்கப்படாத, பொருளாதாரம் மந்த கதியில் உள்ள ஒரு காலகட்டத்தில் இந்தப் பிரச்சினையும் சேர்ந்து இலங்கையை மேலும் சங்கடத்தில் தள்ளலாம்.

**பூபாலரட்ணம் சீவகன்**

மொழி, இன, மத பேதமின்றி அனைத்து பொதுமக்களும், அரசியல்வாதிகளும் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய பிரச்சினை இது. வெறும் வணிகப் போட்டியாக தென்படும் இந்த நிலவரங்கள் எதிர்காலத்தில் வல்லரசுகளின் மோதல் நிலமாக இலங்கையை மாற்றிவிடக்கூடும். ஏற்கனவே ஒரு போரின் அழிவை ஈடு செய்ய முடியாமல் தடுமாறும் ஒரு நாட்டுக்கு, இப்படியான சூழ்நிலை ஏற்பட்டால், இலங்கை, மீள முடியாத துன்பத்துக்குள் மாட்ட நேரிடலாம்.

அரங்கம் செய்திகள் பத்திரிகை இந்த விடயத்தின் தனது கரிசனையை இங்கு பதிவு செய்கிறது.

# வடக்குக் கிழக்கின் பிரச்சினைகள் என்ன?

## ஈழத்தமிழர்களுடைய பொதுப் பிரச்சினைகள் என்ன? விசேட பிரச்சினைகள் என்ன?

ஏன் இந்தக் கேள்வி என்றால், 1970 கள் வரையில் "தமிழ் பேசும் மக்கள்" என்ற வகையிலேயே அரசியல் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் பேசப்பட்டன. அவ்வாறே நோக்கவும் பட்டது. இதில் முஸ்லிம் மக்களும் ஓரளவுக்கு மலையக மக்களும் உள்ளடங்கியிருந்தனர்.

இலங்கை அரசின் ஒடுக்குமுறையை எதிர்கொள்வதில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்று சேர்ந்து நின்றன. சில சந்தர்ப்பங்களில் மலையகத்தமிழர்களும் சேர்ந்து நின்றதுண்டு.



1980 களுக்குப் பிறகு தமிழ்த்தேசியம் தீவிர நிலைப்பட்டதோடு முஸ்லிம் சமூகத்தின் அரசியல் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளும் தனியாகவும், தமிழர்களுடைய விடயங்கள் தனியாகவும் மாறின.

1990 இல் முற்று முழுதாகவே இரண்டு சமூகத்தின் அரசியல் அடிப்படைகளும் நோக்குகளும் அணுகுமுறைகளும் வேறாகின. மட்டுமல்ல எதிர்நிலையையும் அடைந்திருந்தன. இரண்டு சமூகங்களுக்கும் சமூக நிலைப்பட்ட கட்சிகளும் தலைமைகளும் உருவாகின.

அதாவது, 1970 களில் ஒரே அரசியல் இலக்கில் பயணித்த இரண்டு சமூகங்களும் இருபது ஆண்டுகளில் (1990 களில்) எதிரெதிர் அரசியல் அடையாளச் சமூகங்களாக மாறித் தமக்குள் பகைமை கொண்டன. இப்பொழுது தமிழ்க்கட்சிகள் தமிழர்களுக்கென்றும் முஸ்லிம் கட்சிகள் முஸ்லிம்களுக்கென்றும் தனியாகவே பார்க்கப்படும் நிலை உருவாகிவிட்டது.

இதனால் 1970, 1980 கள் வரையில் "வடக்குக் கிழக்கு இணைந்த தாயகம்" என்றிருந்த கருதுகோள் பிறகு முஸ்லிம்களால் நிராகரிக்கப்பட்டு, வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாகவே இருக்க வேணும் என்று வலியுறுத்தப்படும் அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன.

இப்பொழுது கிழக்குத் தமிழர்களிலும் ஒரு தொகுதியினரும் "கிழக்குத் தனித்தே இருக்க வேணும்" என்று கூறும் அளவுக்கு நிலைமை உருவாகியுள்ளது.

இதற்கு அவர்கள் முன்னிறுத்தும் காரணம், வடக்குத் தலைமைகள் எப்போதும் கிழக்கைத் தமது அரசியல் நலனுக்கும் தலைமைத்துவத்துக்கும் ஏற்றமாதிரியே பயன்படுத்துகின்றன.

இதனால் எப்போதும் கிழக்குத் தமிழர்களே நெருக்கடிகளையும் இழப்புகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. கடந்த கால வரலாற்றுப் படிப்பினைகளும் இதுவே. கிழக்கின் யதார்த்தம் வேறு. வடக்கின் யதார்த்தம் வேறு என்பதை முதலில் வடக்குப் புரிந்து கொள்ள வேணும். அப்படியல்லாத வெறும் இணைப்புக் கோசம் இன்னும் இன்னும் கிழக்குத் தமிழர்களுக்கு நெருக்கடிகளையே ஏற்படுத்தும் என்றுரைக்கப்படுகிறது.

மேலும் கிழக்கிற்குரிய தனித்துவத்தின் அடிப்படையிலும் அதனுடைய அரசியல் பொருளாதார வரலாற்றுப் பண்பாட்டு அடிப்படைகளிலும் கிழக்குப் பிரிந்திருப்பது நல்லது என்கின்றனர் இவர்கள். இதை மறுத்துரைக்கும் தரப்புகளும் உண்டு. அவர்களுடைய வாதம், வடக்கும் கிழக்கும்



இணைந்திருப்பதே தமிழர்களுக்குப் பலமாக இருக்கும். அதுவே பாதுகாப்பாகவும் இருக்கும். தமிழர்களுடைய கூட்டுக் குரலுக்கு இதுவே அதிக சாத்தியங்களைத் தரக்கூடியது. கிழக்கு வேறு, வடக்கு வேறு என்பது தமிழ்த்தேசியத்தின் பலத்தைச் சிதைப்பதாகவே முடியும் என்பதாகும்.

ஆனாலும் பொதுவாக இப்பொழுது வடக்குத் தமிழர்கள் ஒரு வகையிலும் கிழக்குத் தமிழர்கள் ஒரு வகையிலும் எனத் தனித்தனியாகச் சிந்திக்கிறார்கள் என்பது கவனத்திற்குரிய உண்மை.

**கருணாகரன்**

உதாரணமாக வடக்குக்கான முதலமைச் சரைப்பற்றிச் சிந்திக்கின்ற அரசியல் கட்சிகளும் ஊடகங்களும் கிழக்கைப் பற்றிச் சிந்திப்பதேயில்லை.

வடக்கிலே – யாழ்ப்பாணத்தில் மட்டும் எட்டுப்பத்திரிகைகள் வெளியாகின்றன. எட்டும் தமிழ்த்தேசியவாத அரசியலை மையப்படுத்தியே இயங்குகின்றன. குறிப்பாக வடக்கை முதன்மைப்படுத்தி அல்லது வடக்கை மையப்படுத்தி.

கிழக்கில் இவ்வாறான முயற்சிகளோ முன்னெடுப்புகளோ இல்லை. இடையிடையே சில பத்திரிகை வெளியீட்டு முயற்சிகள் நடந்ததுண்டு. ஆனால், அவை வலுவின்றித் தொடர்ச்சியின்றி இடையில் நின்றுவிட்டன. அவற்றை வலுப்படுத்த வேணும் என்ற நோக்கமோ ஈடுபாடோ வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்று சொல்லும் எந்தத் தரப்பிடமும் இருக்கவில்லை.

ஆகவே, வடக்கு வேறாகவும் கிழக்கு வேறாகவுமே பார்க்கப்படுகிறது.

வடக்கிலே உள்ளவர்களுக்கு விக்கினேஸ்வரனின் உரையும் நல்லூர்த் திருவிழாவும் உச்ச திருப்திக்குரிய சங்கதிகள். இது போதவில்லை என்றால், வீரசிங்கம்மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ் பொது நூலகம் ஆகியவற்றில் நடக்கின்ற கூட்டங்களும் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களும் விடுக்கப்படுகின்ற பிரகடனங்களும் மேலதிக திருப்தியைத் தரும்.

கிழக்கில் என்ன நடக்கிறது? அங்கே முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் உள்ள பிரச்சினைகளையும் உறவையும் உறவின்மைகளையும் எப்படிக் கையாளலாம்? இவற்றுக்கு என்ன செய்ய வேணும் என்ற சிந்தனை வடக்கில் உள்ளோரிடம் இருப்பதில்லை. அதைத் தனியே கிழக்கு வாழ் தமிழர்களே எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதைப்போலத்தான் கிழக்கில் உள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகள், நிலைகள் வேறாகவும் வடக்கு வாழ் முஸ்லிம்களின் பிரச்சினைகள், நிலைமைகள் வேறாகவும் உள்ளன.

இவற்றின் விளைவாக கிழக்கில் அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் ஒரு அணியாகச் சேரவேண்டும் என்ற கோரிக்கையோடு கிழக்குத் தமிழர் ஒன்றியம் தோன்றியுள்ளது.

வடக்குத் தமிழ்த்தலைமைகளை எதிர்கொள்வதற்குக் கிழக்கு வாழ் முஸ்லிம்கள் பலமாக இருக்க வேணும். அந்தப்பலமே வடக்கின் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பைப் பெற்றுத்தரும் என்று முஸ்லிம் தரப்பில் யோசிக்கப்படுகிறது.

இப்படிப் பலவுண்டு. தவிர, தமிழர்களின் உரிமைக் கோரிக்கையை முன்வைக்கின்ற தமிழ்த்தேசியத்தரப்புகள் இலங்கை அரசை எதிர்க்கின்றன. அல்லது அரசாங்கத்துக்கு வெளியே நிற்கின்றன. கூட்டமைப்புத் தற்போதைய அரசாங்கத்தை ஆதரித்தாலும் ஆட்சியில் நேரடிப்பங்காளியாகாமல் வெளியே – எதிர்க்கட்சியாகவே இருக்கிறது என்பதைக் கவனிக்கலாம்.
முஸ்லிம் கட்சிகள் அப்படியல்ல. அவை அரசாங்கத்துடன் இணைந்து நின்றே – ஆட்சியில் பங்கேற்றே செயற்படுகின்றன.

அப்படியென்றால், உண்மையில் இன்று "வடக்குக் கிழக்கின் பொதுப்பிரச்சினை என்ன?" "ஈழத்தமிழரின் பிரச்சினை என்று பொதுவாக எப்படி எதைச் சொல்வது?"

இராணுவ நெருக்கடிகளும் பௌத்த விரிவாக்கமும் சிங்கள ஆதிக்கமும் அதிகாரப் பகிர்வற்ற நிலையும் வடக்குக் கிழக்கிற்கும் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கும் பொதுவான பிரச்சினைகள். சிங்கள ஆதிக்கம் என்பது மொழி, தொழில், நிர்வாக அதிகாரம், குடியேற்றம் எனப் பல வகையில் உண்டு. இவை அரசாங்கத்தினாலும் சிங்களப் பெரும்பான்மைவாதச் சிந்தனையினாலும் ஏற்படுகின்றவை.

ஆனால், இதை முன்வைத்து பொது அரசியலை முன்னெடுப்பதற்கு தமிழ்த்தரப்பு வேறாகவும் முஸ்லிம் தரப்பு வேறாகவுமே சிந்திக்கின்றன.

தமிழ் முஸ்லிம் முரண்கள் இன்னொரு வகையான – இன்னொரு தளத்திலான பிரச்சினை. (இன்று இவை வடக்குக் கிழக்கின் பொதுப்பிரச்சினைகளில் ஒன்று).

தொடர்ச்சி... (பக்கம் -20 )



# கதிர்காமம் யாருக்குச் சொந்தம்?

## சீலைக்குப் பின் சிலை? - 'திரை'க்கதை சொல்லும் தெய்வானை!

போனகிழமை "கதிர்காமம் பௌத்தருக்கு சொந்தமாக இருக்கலாம்" என்று சொன்னதில் உங்களில் பலர் கெட்ட கோபத்தில் இருப்பீர்கள் என்று தெரியும். அதில் அர்த்தமே இல்லை. கோபிக்காமல், அந்தக் கட்டுரையை இன்னொரு முறை வாசியுங்களேன். அங்கு, சைவம், பௌத்தம் பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கின்றதே தவிர, தமிழ் – சிங்களம் பற்றியே சொல்லப்படவில்லை. விஷ்ணுவும் முருகனும், மிகப்பழைய தமிழ்த்தெய்வங்கள். இலங்கையில் முருகன் பற்றிக்கிடைக்கும் சான்றுகள் கூட, சோழ – பாண்டிய ஆக்கிரமிப்புகளின் பின்னணியிலேயே பௌத்த நூல்களில் பதிவாகியுள்ளன என்பதை நாம் ஊன்றி நோக்கவேண்டும். முருகன் பௌத்த தெய்வமாக விளங்கிய முக்கியமான ஒரு சான்று, குருநாகலருகே தமிழ் விகாரையொன்றின் இடிபாட்டில் கிடைத்ததைக்கூட அங்கு நாம் பார்த்தோம். இன்று தமிழர் பௌத்தராக இல்லை என்பதற்காக, தமிழுக்கு பௌத்தம் மீதுள்ள தார்மிக உரிமையை நாம் மறுக்கமுடியாது தானே?



வெளிக்காரணிகளால் ஒரு சமூகம் கூட்டாக மதம் மாறும் போது, தன் பழைய பாரம்பரியத்தையோ மரபுகளையோ மறக்காமல், தான் கைக்கொண்ட புதிய சமயத்திலும் அவற்றை அறிமுகம் செய்வது வரலாற்றின் இயல்பான போக்கு தான். தமிழ்ப்பௌத்தர்கள், தமக்கு கடுமையான போட்டியாக நிலவிய சைவத்தின் முழுமுதலான சிவனைத் தவிர்த்து, முருகனையும் விஷ்ணுவையும் தங்களோடு இணைத்துக்கொண்டார்கள். அவர்களை புத்தபிரானின் துணைவர்களாக, இருபுறமும் நிறுத்தி அழகுபார்த்தார்கள். பிள்ளையார், கண்ணகி கூட இப்படி அந்தப்பக்கம் போனவர்கள் தான். தமிழ்ப்பௌத்தம் அழிந்தொழிந்த பிற்காலத்தில், இவர்கள் எல்லோரும் முற்றுமுழுதாக சிங்களத்தெய்வங்களாக மாறவேண்டிய சந்தர்ப்பத்தை சரித்திரம் படைத்தளித்தது.

அதை விடுங்கள். இந்த வாரம், கதிர்காமத்தில் சைவருக்குள்ள வகிபாகம் என்னவென்று பார்ப்போம். கதிர்காமத்தை தமிழ் முருகனின் வழிபாட்டுத்தலமாக இனங்காட்டும் மிகப்பழைய சான்று திருப்புகழ் தான். திருப்புகழை எழுதிய அருணகிரியார் 'பிரபுட தேவராயன்' எனும் அரசனின் காலத்தில் வாழ்ந்தவர் என்பது அவரது "அதல சேடனாராட" எனும் பிரபலமான திருப்புகழின் மூலம் தெரிகின்றது. விஜயநகர மன்னனான இரண்டாம் தேவராயனே (கி.பி 1424 - 1446) அப்பெயரில் குறிப்பாக அழைக்கப்பட்டிருக்கிறான். அந்தப்பெயருடைய வேறு மன்னர்களை ஊகிக்கும் பலரும் அருணகிரியார் 1400களில் வாழ்ந்தவர் என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். எனவே, அருணகிரியார் திருப்புகழ் பாடியது 15ஆம் நூற்றாண்டு. இப்படிப் போனால், திருப்புகழ் ஜினகாலமாலியை விடப் பழைமையானது என்பது தெளிவாகும். கதிர்காமக்கந்தன் பௌத்தத் தெய்வமாக பதிவாவதற்கு நூறாண்டுகள் முன்பேயே அவன் சைவத்தெய்வமாக பதிவாகி விடுகிறான்!

பதினான்குக்கு மேற்பட்ட திருப்புகழ்கள் கதிர்காமத்தின் மீது பாடப்பட்டிருக்கின்றன. அவற்றில் பல அருமையான தகவல்கள் உள்ளன. கருங்குரங்குகள் பலா மரத்தின் சுளைகளைக் கீறி சண்டையிட்டு உண்டபடி, மாமரங்களிலும் வாழை மரங்களிலும் பாயும் அழகிய ஈழநாட்டில் கதிர்காமம் அமைந்திருக்கிறது. அந்தக் கதிர்காமம் மிகப்பழைமையான ஊர். அதனருகே வடக்கிலிருந்து வந்து பாயும் அழகான ஆறு உள்ளது. அதன் அலைகள் கதிர்காமத்தில் வீசுகின்றன. அந்த ஆறு, மாணிக்கங்களை உருட்டியபடி சரிவாக ஓடிவருகின்றது. யானைகள் நிறைந்த மலையில் வள்ளியை மணந்த பெருமான், பொன்மாணிக்க வடிவில் கதிர்காமத்தில் அமர்ந்திருக்கிறான். அவன் வேல் தரித்தவன். அவ்விறைவனை அனுமான் வணங்கியுள்ளான். ஆயிரம் கோவில்கள் இருக்க, கோடி மலைகள் இருக்க அவற்றையெல்லாம் விடுத்து கதிர்காமத்தில் அடியவர்க்கு இரங்கி வருபவன் அவன், என்றெல்லாம் பாடுகிறார் அருணகிரியார். மெய்சிலிர்க்கிறது, அல்லவா?

திருப்புகழில் கதிரகாமம், கதிர்காமம், கதிரகாம மாநகர், கதிரகாம மூதூர், கதிர்க்காமம், கதிரகாமக் கிரி, கதிரகாம வெற்பு என்றெல்லாம் இத்தலம் போற்றப்படுகிறது. மலையைக் குறிக்கும் வெற்பு, கிரி, சைலம் என்ற சொற்கள் வந்துள்ள கதிர்காமத் திருப்புகழ்கள் கதிரமலை மீதே குறிப்பாகப் பாடப்பட்டவை என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. கதிர்காமம் கூட, திருப்புகழில் பெரும்பாலும் கதிரகாமம் என்றே பாடப்படுவதையும் காணமுடியும். அது கதிர்காமத்தின் உண்மையான பெயர்க் காரணத்தைச் சொல்கின்றது. இத்தலத்தின் பழைய பெயர் கதிரை என்பதே. நம்மூர் மூதாட்டிகள் சலிப்பிலும் பயத்திலும் உதிர்க்கும் ஓலம் "எண்ட கதிரைவேலே" என்பது தான். கதிரையின் மலை, கதிரமலை என்று ஆனது. கதிரையின் கிராமம் கதிரகாமம் (காமம் ஸ்ரீ கிராமம்) ஆகி, பின் கதிர்காமம் ஆகியிருக்கிறது.

கதிரை என்பதன் பொருள் என்ன? தமிழில் கதிர் என்பதற்கு சூரியன், வெளிச்சம் என்பவை முதன்மையான அர்த்தங்கள். "கதிர்" என்பதன் சிங்களத்திரிபான "கத்தற" என்ற சொல், வெயிலால் திரிந்த பாலை நிலம் என்று பொருள்படுகின்றது. காடு, ஆறு, மலை என்று காட்சியளித்தாலும் கதிர்காமம் அமைந்துள்ளது வறள்வலயத்தை அண்மித்துத் தான். கதிரை என்பதற்கு வேறு அர்த்தம் சிந்தித்தால், ஆடுதின்னாப்பாலை என்று இன்னொரு பொருளும் கிடைக்கின்றது. அந்தத் தாவரம் மண்டி வளர்ந்த இடமும், கதிரை என்ற பெயரைப் பெற்றிருக்கக்கூடும்.

கதிர்காமம் பற்றிய தொன்மங்களில் அதிகம் நினைவுகூரப்படுபவர் காஷ்மீரை பூர்வீகமாகக் கொண்ட கல்யாணகிரியார். அவர் தெய்வானை அம்மைக்காக முருகனை யந்திரத்தில் அடக்கி இந்தியா கொண்டு செல்லமுயன்று வள்ளியம்மையாரின்

**மைங்கணான் மகிழறிவன்**

கண்ணீரிடம் தோற்றார் என்பது புகழ்பெற்ற தொன்மம். பெரும்பாலும், கதிர்காமப் பாதயாத்திரையை மறுமலர்ச்சிக்கு உள்ளாக்கியவர் என்றோ, காட்டுத்தலமாக இருந்த கதிர்காமத்தை இன்றுள்ளவாறு செப்பனிட்டுக் கட்டியெழுப்பிய முதலாவது வரலாற்று ஆளுமை என்றோ அவரை இனங்காணமுடியும். தட்சிண கைலாய புராணம், கதிர்காமக் கோவிலின் வடக்கே கல்யாண மண்டபம் இருப்பதைத் தெரிவிப்பதால், அதன் காலத்திற்கும் கல்யாணகிரியார் முற்பட்டவர் என்பது பெறப்படுகின்றது. அவர் குருவாக வீற்றிருந்த கல்யாண மடம், அவருக்குப் பின் வரிசையாக நியமிக்கப்பட்ட மடாதிபதிகள் பற்றிய தகவல்கள் தொடர்ச்சியாக நமக்குக் கிடைக்கின்றன. கதிர்காமம் பெரிய கோவிலும் இவர்களாலேயே ஆரம்பத்தில் நிர்வகிக்கப்பட்டுவந்தது என்பதற்கும் சான்றுகள் உள்ளன.

அருணகிரிநாதர், கதிர்காமக் கந்தன் "வனமுறை வேடர் அருளிய பூசையில்" மகிழ்ந்தவன் என்று சொல்கிறார். ஆனால் வாய்கட்டிப்பூசை, திரைமறைத்த கருவறை, அருவ வழிபாடு முதலான இன்றுள்ள தனித்துவமான எந்தப் மரபுகளையும் அவர் பாடவில்லை. பழங்குடிகளான வேடர்களின் வழிபாட்டில் மெய்யியல் கண்ணோட்டத்தில் முதிர்ந்த இந்த வழிபாட்டுக்கூறுகள் காணப்படவும் முடியாது.

ஆனால், கதிர்காமத்தானை "கனகமாணிக்க வடிவம் கொண்டவன்" என்றும், வேல் தரித்தவன் என்றும் அருணகிரிநாதர் பாடுவதால், அங்கு முன்பு முருகனின் விக்கிரகம் இருந்ததா என்ற ஐயம் எழுகிறது. தட்சிண கைலாய புராணம், சில மிகைப்படுத்திய வர்ணனைகளுடன் விவரிக்கும் போதும், "கதிர்காமத்தின் மத்தியிலுள்ள சோதி மண்டபத்தில், இந்திரநீல மாணிக்கத்தால் செய்யப்பட்ட சிம்மாசனத்தில் வள்ளி, தெய்வானை, வேல் என்பன அருகிருக்க கதிர்காம நாதர் வீற்றிருக்கிறார்" என்று சொல்வதை நாம் கவனிக்கவேண்டும்.

இந்த இரு குறிப்புகளையும் விட நம்மை அதிகம் சிந்திக்கவைப்பது ஒரு வெள்ளையரின் குறிப்பு. கதிர்காமத்துக்கு 1819இல் வருகை தந்த "சேர் ஜோன் டோர்வி" எனும் பிரித்தானியர், "கிளர்ச்சிக் காலத்தில் இங்கிருந்த விக்கிரகம் அகற்றப்பட்டு காட்டில் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. எனினும் இன்றும் முன்பு போலவே கருவறையை மிகக் கடுமையாகப் பாதுகாத்து வருகிறார்கள்." என்கிறார். அவர் சொல்கின்ற கிளர்ச்சி, ஓராண்டுக்கு முன் 1818இல் இலங்கையையே உலுக்கிய ஊவா - வெல்லசைக்கலவரம். எனவே, டோர்வி சொல்லும் செய்தியில் தவறு இருக்க சாத்தியம் குறைவு. கலவர காலங்களில் அப்படித்தான் பெரும்பாலான இறையுருவங்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்பது கோணேச்சரம் முதலான கோவில்களிலும் நாம் கண்ட உண்மை.

'முன்பு போலவே' என்று டோர்வி சொல்வதை, முன்பும் கருவறை மறைக்கப்பட்டிருந்தது என்று பொருள்கொள்ளலாம். ஆனால் அங்கு விக்கிரகம் இருந்தது என்றால் ஏன் அது திரையால் மறைக்கப்பட்டிருந்தது? அருணகிரியாரும் தட்சிண கைலாய புராணமும் திரைச்சீலை பற்றியே கதைக்கவில்லையே? தமிழகத்திலோ பிற வேறெந்தச் சைவக்கோவில்களிலோ இல்லாத திரைச்சீலை மூடிய பூசை வழக்கம் கதிர்காமத்திலும், அதைப் பின்பற்றும் உகந்தை, மண்டூர் போன்ற ஓரிரு கோவில்களிலும் மட்டும் கடைப்பிடிக்கப்படுவது ஏன்?

கதிர்காமம் பற்றிய தொடர்ச்சியான வரலாற்றுப்பதிவுகள் நமக்குக் கிட்டாத நிலையில் இக்கேள்விக்கு விடை காண்பது கடினம். ஆனால் இந்தத்திசையில் போனால் விடை காணலாம் என்று சொல்லிச் சிரிக்கிறாள் ஒருத்தி. மூத்தவள் தேவகுஞ்சரி அம்மை. அவன் நிறையவே மாறிவிட்டான், அவள் மாறவில்லை!

ஏனென்றால், கதிர்காமம் பெரியகோவிலில் ஏற்பட்ட எந்த வழிபாட்டு மாற்றங்களும் தெய்வானை அம்மன் கோவிலைப் பாதிக்கவில்லை என்று நாம் ஓரளவு உறுதியாகச் சொல்லலாம். பெரிய கோவிலைப் பற்றிக் கவலைப்படாது ஐந்து நாட்கள் பிந்தியே தெய்வானை அம்மனுக்குக் கொடியேறுவதும் இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக பதிவுசெய்யப்பட்ட குரு பரம்பரையும் என்று பல தனித்துவங்களைக் கொண்டது, அக்கோவில். (இன்று கதிர்காமப் பள்ளிவாசலின் கொடியேற்ற தினமே திருவிழா தொடங்குகிறது. தெய்வானை அம்மன் கோவிலில் கொடியேறும் நாளைக் கணக்குப் பார்த்தால், அங்கு பத்து நாட்கள் விழாக்கோலம். அது தான் கதிர்காமத்தின்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# தமிழ்-முஸ்லிம் சமூகத்தவரிடையே நல்லிணக்கத்திற்கான வகிபாகம் பகுதி 3

*(அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ஏற்பாட்டில் மெல்பனில் நடைபெற்ற நிகழ்வில் சமர்ப்பிக்கப்பட்ட உரை)*

## எழுத்தாளர்களின் பங்களிப்பும் பணிகளும்

எழுத்தாளர் என்பவர்கள் ஒரு சமூகத்தின் புத்திஜீவிகள் என்ற வட்டத்துக்குள் அடங்குவர். தற்கால அரசறிவியல் எழுத்தாளர்களை ஒரு சமூகத்தின் ஆறாவது பிரிவுக்குள் அடக்குகின்றது. இந்தப் பிரிவுகளின் வரலாற்றை இங்கே சுருக்கமாக விளக்குவது இவ்வுரையின் தலையங்கத்துக்கு அவசியமாகின்றது. பிரஞ்சுப் புரட்சிக்காலத்தில் மூன்று சமூகப் பிரிவுகளையே அரசறிவியல் வகுத்திருந்தது. முதலாம் பிரிவில் மதபீடத்தையும் இரண்டாம் பிரிவில் பிரபுத்துவத்தையும் குறிப்பிட்டு இவ்விரண்டினதும் மேலாதிக்கத்தினுக்கு எதிர்பலமாக பொதுமக்களை மூன்றாம் பிரிவில் அடக்கியது.

ஆனால், காலவோட்டத்தில் பொதுமக்களின் பலம் சந்தைச் சரக்காக மாறத்தொடங்கவே பிரதான ஊடகத்துறையை நான்காவது சக்தியாக அரசறிவியல் கருதியது. இத்துறை சமூகப்பிணிகளை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டி அதற்குப் பரிகாரந்தேடும் பொறுப்பை ஆட்சியாளர்களுக்கு வலிந்துரைத்து ஒரு பயனுள்ள, அதேவேளை பலமுள்ள சக்தியாக சமூகத்தில் இயங்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதுவும் ஆட்சியாளர்களின் கைப்பிள்ளையாக மாறத் தொடங்கியதனால் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி சமூக ஊடகத்துறையை சமூகத்தின் ஐந்தாம் பிரிவாக மாற்றி, அது ஒரு மாற்றுப்பலமுள்ள சக்தியென இயங்குமென அசறிவியல் எதிர்பார்த்தது.

ஐயோ! அதுவும் நான்காவது பிரிவின் மேலாதிக்கத்துக்கு அடிமையாகக்கூடிய வாய்ப்பிருப்பதனால் ஓர் ஆறாம் பிரிவை அரசறிவியல் இன்று இனங்கண்டுள்ளது. இந்த ஆறாவது பிரிவுக்குள் சமூகத்தின் நிலபரங்களையும் அங்கே நடைபெறும் மாற்றங்களையும் கூர்மையாக நோக்கி அவற்றுள் நல்லதைப் போற்றி அல்லதைத் தூற்றி அறிவுபூர்வமாகத் தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் புத்திஜீவிகள் அடங்குவர். எழுத்தாளர்களும் இந்தப் பிரிவின் முக்கிய அங்கத்தவர்களே.

தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே உயர் மட்டத்தில் அதாவது இலக்கிவாதிகளிடையேயும் அறிவு ஜீவிகளிடையேயும் நல்லிணக்கம் வளர்ந்திருக்கிறது, வளர்கிறது, இன்னும் வளரும். ஆனால், கண்ணாடிச் சாளரத்தினூடாகக் கண்ணைக் கவரும் வண்ண ரோஜாக்களைப் பார்த்துவிட்டு வெளியிலே வசந்தம் பிறந்துவிட்டதென்று கூறமுடியுமா?

எனவே பிரச்சினை உயர்மட்ட மக்களுக்கிடையே இல்லை. ஆய்வாளன் அப்துல் கரீமும் இலக்கியவாதி இராமலிங்கமும் அரங்குகளிலும் அங்காடித் தெருவிலும் அகந்திறந்து பேசி உறவாடி உண்டு களித்திருக்கலாம். ஆனால், இரு சமூகங்களினதும் அடிமட்டத்தில் வாழும் கந்தசாமியும் கச்சி முகம்மதுவும் அவ்வாறு உறவாடுகிறார்களா? அவர்களின் உறவைப் பிரித்துத்தானே அரசியல்வாதி தன்கோட்டையைக் கட்டுகிறான். அவனின் கோட்டையைத் தகர்த்தெறிந்து இன நல்லிணக்கத்தை வளர்க்க எழுத்தாளர்கள் என்ன செய்யவேண்டும்? இதுதான் இன்று எம்மை எதிர்நோக்கும் வினா.

புத்திஜீவிகளுக்கேயுரிய ஒரு முக்கிய பண்பு உண்மையை அதாவது யதார்த்த நிலையை ஒளிவுமறைவின்றித் துணிவுடன் கூறுதல். "அச்சமுடையார்க்கு அரணில்லை" என்று எச்சரிக்கிறது குறள். ஆகவே எழுத்தாளர்கள் யதார்த்தத்தைத் தமது எழுத்துக்கள் மூலம் பக்கச்சார்பின்றி வெளிப்படுத்தவேண்டும். அவ்வாறு வெளிப்படுத்தும் படைப்புகளின் வடிவங்கள் மாறுபடலாம். அவர்கள் எழுதுவது நாவலாகலாம், சிறுகதையாகலாம், கவிதையாகலாம், நாடகமாகலாம் அல்லது கட்டுரையாகலாம். ஆனால் யதார்த்தம் திரிபடையக்கூடாது. அதிகாரத்துக்குப் பயந்தும், அது வழங்கும் சலுகைகளில் மயங்கியும், உண்மையை எழுத ஓர் எழுத்தாளன் தயங்குவானாயின் அல்லது உண்மையைத் திரிபுபடுத்தி எழுதுவானாயின் அவனுடைய எழுத்துக்களுக்கு சமூக மாற்றத்தையேற்படுத்தும் சக்தியிருக்காது. ஒரு போர்வீரனின் வாளைவிட எழுத்தாளனின் பேனா வலுவானதென்ற முதுமொழி அவனுக்குப் பொருந்தாது. அவனுடைய எழுத்தால் சுயலாபம் பெருகலாம், ஆனால், பொதுநலன் பெருகமுடியாது. ஆகவே முஸ்லிம் தமிழ் எழுத்தாளர்களின் இன்றைய மகத்தானதொரு பணி தமது சமூகங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படுவதற்குத் தடையாக விளங்கும் காரணிகளைப்பற்றிய உண்மைகளையும், அதே சமயம் நல்லிணக்கம் வளர்வதற்குச் சாதகமாக விளங்கும் வரலாற்றுச் சம்பவங்களையும் துணிவுடன் பொதுமக்கள் அறியுமாறு செய்தலாகும். அவ்வாறான இரண்டொரு உதாரணங்களை இங்கே சுருக்கமாக விளக்குவது பொருந்துமென நினைக்கிறேன். நான் கிழக்கிலங்கையிலே பிறந்து வளர்ந்தவனாகையால் கிழக்கை மையமாகக் கொண்டே இந்த விளக்கத்தைத் தரவிரும்புகிறேன்.

தமிழ்த் தேசியவாதம் என்ற போர்வையின்கீழ் இந்துத்துவ வாதமும் முஸ்லிம்களின் உரிமைகள் என்ற போர்வையின்கீழ் அடிப்படைவாத இஸ்லாமியமும் இவ்விரு சமூகங்களையும் இன்று பிரித்தாளப்பார்க்கின்றன. இப்பிரிவினைக்குத் தூபம்போடுவதுபோல் தமிழ் - முஸ்லிம்



> *'தமிழ்த் தேசியவாதம் என்ற போர்வையின்கீழ் இந்துத்துவ வாதமும் முஸ்லிம்களின் உரிமைகள் என்ற போர்வையின்கீழ் அடிப்படைவாத இஸ்லாமியமும் இவ்விரு சமூகங்களையும் இன்று பிரித்தாளப்பார்க்கின்றன.'*


அரசியல்வாதிகள் செயற்படுகின்றனர். ஒரு பக்கம் போலி மதவாதிகளின் முகமூடியைக் கிழித்தெறிந்து மறு பக்கம் இன வெறிபிடித்த அரசியல்வாதிகளையும் இனங்கண்டு உண்மையின் யதார்த்தத்தைப் பொதுமக்களுக்கு எடுத்துரைக்க வேண்டியது எழுத்தாளர்களின் இன்றையப் பணி. இன்றைய சூழலில் இந்த ஒன்றைச் செய்தாலே நல்லிணக்கம் வளர எழுத்தாளர் ஆற்றும் வகிபாகம் பூரணமாகிவிட்டதென்று கருத இடமுண்டு.

மட்டுநகருக்குத் தெற்கே சுமார் பதினைந்து கிலோமீற்றர் தூரத்திலுள்ளது குருக்கள்மடம் என்னும் தமிழ்க் கிராமம். சுமார் நான்கு வருடங்களுக்குமுன் அங்கே அமைந்துள்ள கோயிலுக்கு நான் சென்றபோது அக்கோயிலின் நடுவே தலையில் தொப்பியுடன் செதுக்கப்பட்ட ஒரு கற்சிலையைக் கண்டு வியந்து அச்சிலையைப்பற்றிய தகவல்களை அறிய முயன்றேன். அது பட்டாணியர் சிலையென்றும் வருடாவருடம் பட்டாணியர் பூசை அந்தச் சிலைக்காக நிகழ்வது வழக்கமென்றும் அவ்வூர் மக்கள் கூறினர். யார் அந்தப் பட்டாணியர் என்று ஆராய்ந்தபோது அவர்கள் முஸ்லிம்களென்றும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் திமிலர்களுக்கும் முக்குவர்களுக்குமிடையே அங்கு நடந்த ஒரு போரில் முக்குவர்களுடன் பட்டாணியர் சேர்ந்து போரிட்டு வென்றதால் அந்த முஸ்லிம் போராளிகளுக்கு நன்றி செலுத்தும் முகமாகவே அந்தச் சிலையென்றும் வருடந்தோறும் அதற்கொரு பூசை நடைபெறுவதென்றும் அறிந்தேன். ஓர் இந்துக் கோயிலில் முஸ்லிம்களுக்காக ஒரு பூசையா என்று ஆச்சரியப்பட்டுச் சந்தோஷப்பட்டேன். பின்னர் எப். எக்ஸ். சி. நடராசாவின் "மட்டக்களப்பு மான்மியம்" நூலைப் புரட்டியபோதுதான் மட்டக்களப்புக்குத் தெற்கேயுள்ள அத்தனை இந்துக் போயில்களிலும் வருடந்தோறும் நடைபெறும் முதற் பூசை பட்டாணியர் பூசை என்ற அந்த வியப்பான உண்மையை உணர்ந்தேன்.

இன நல்லிணக்கம் வளர இதைவிடவும் ஒரு சிறப்பான உதாரணம் தேவையா? என்ன பரிதாபம்? கடந்த வருடம் நான் மீண்டும் குருக்கள்மடம் கோயிலுக்குச் சென்றபோது அந்தச் சிலை அங்கில்லை. அதை கோயிலுக்குள்ளிருந்து நீக்கி வெளியே ஒரு கூட்டுக்குள் வைத்திருப்பதாக அறிந்தேன். ஏன்? இந்துத்துவம் தலையிட்டுவிட்டதா? தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்களே! ஏன் இதுவரை உங்கள் பேனாவுக்கும் கணினிக்கும் இந்த உண்மை எட்டவில்லை? ஒரு வேளை எட்டியிருந்தும் எடுத்துச் சொல்லத் தயங்கினீர்களோ?

மிக அண்மையில் நடைபெற்ற இன்னுமொரு அசம்பாவிதமான நிகழ்வு. திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கடமைபுரிந்த ஓரிரு முஸ்லிம் ஆசிரியைகள், முஸ்லிம்களின் உரிமை என்ற பெயரால் இன நல்லிணக்கத்தைக் குலைப்பதற்காக அரங்கேற்றிய ஒரு விஷப் பரீட்சை. அக்கல்லூரியின் சட்டதிட்டங்களுக்கமைய வழமைபோல் சேலை உடுத்துவந்த முஸ்லிம் ஆசிரியைகள் சடுதியாக, யாரோ சில அடிப்படைவாதிகளின் அச்சுறுத்தலால், நாட்டுக்கொவ்வாத அபாயா உடையை அணிந்து சென்றதாலும் அவர்களுக்கெதிராகக் கல்லூரி நிர்வாகம் ஒழுங்கு நடவடிக்கையெடுத்ததாலும் தமிழ் முஸ்லிம் கலவரமொன்றே திருகோணமலையில் வெடிப்பதற்கு ஏதுவாயிற்று.

ஒரு நிறுவனத்திற் பணிபுரிய வேண்டுமாயின் அந்நிறுவனத்தின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டாக வேண்டும். அதற்கு விருப்பமில்லையென்றால் அங்கே பணிபுரிய முடியாது. ஒரு பள்ளிவாசலுக்குள் யாராவது நுழையவேண்டுமென்றால் பாதணிகளுடன் நுழைய முடியாது. அந்த நிபந்தனைக்குக் கட்டுப்பட விருப்பமில்லையென்றால் பள்ளிவாசலுக்குள் நுழையக்கூடாது.



கலாநிதி அமீர் அலி

*( பொருளியல்துறை - மேர்டொக் பல்கலைக்கழகம், மேற்கு அவுஸ்திரேலியா)*

எனது கேள்வி இதுதான்: ஏன் அங்குள்ள முஸ்லிம் எழுத்தாளர்கள் இந்த உண்மையை எடுத்துக் கூறி தங்கள் எழுத்தின்மூலம் அவ்விஷமிகளின் செயலைக் கண்டிக்கவில்லை? இதுவரை அவர்கள் இச்சம்பவம்பற்றி மௌனியாகவே இருக்கின்றனர். இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கங்களை எதிர்க்க முடியாத கோழைத்தனமே இதற்கு முக்கிய காரணம். இதே கோழைத் தனத்தைத்தான் முஸ்லிம் பெண்களின் உரிமைப்போராட்டத்திலும் நான் இலங்கையிலே காண்கிறேன். அதேபோன்று முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளைத் தமிழியக்கங்கள் கையாண்டபோது தமிழ் எழுத்தாளர்களின் பேனாக்கள் ஏன் அவற்றைக் கண்டிக்க மறுத்தன? எழுத்தாளர்கள் கோழைகளானால் சமூகமாற்றம் ஏற்படமுடியுமா? இன நல்லிணக்கந்தான் வளரமுடியுமா? நான் சுருக்கமாகக் கூறுவதென்னவெனில் எழுத்தாளர்களுக்கு உண்மையைக் கூறும் துணிவு வேண்டும். ஒவ்வோர் எழுத்தாளனும் ஏதோ ஓர் இனத்தைச் சேர்ந்தவனே. இலங்கையைப் பொறுத்தவரை ஒரு தமிழ் எழுத்தாளன் இந்துவாகவோ முஸ்லிமாகவோ கிறித்தவனாகவோ ஏன் பௌத்தனாகவோ இருக்கலாம். ஆனால், தனது இனம் தவறிழைக்கின்றபோது அதைச் சுட்டிக்காட்டிக் கண்டிக்க அவனது பேனாவோ கணினியோ தயங்கக்கூடாது. இந்தச் சந்தர்ப்பத்தில் அண்மையில் சிவ சேனை இயக்கம் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களுக்கெதிரான மாட்டிறைசி பற்றிய பிரச்சாரமொன்றை அவிழ்த்துவிட்டபோது அதனைத் துணிவுடன் எதிர்த்துக் கருத்து வழங்கிய பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு அவர்களை என்னால் பாராட்டாமல் இவ்வுரையைத் தொடர முடியாது.

(தொடரும்)


வெள்ளி, ஆடி (ஜுலை) 27, 2018.
இதழ் - 23

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 12

இந்தக் கட்டத்திலேயே 1989 பெப்ரவரி மாதம் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் வந்துற்றது. 1987 ஜுலையில் இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் 13வது சட்டத்திருத்தத்தின் கீழான மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெற்று வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பெற்ற வடக்கு கிழக்கு மாகாண அரசும் நிறுவப்பெற்றிருந்தது. 1988இன் இறுதிப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று ஆர்.பிரேமதாச அவர்கள் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டும் இருந்தார். இத்தகையதோர் அரசியல் சூழ்நிலையில் தான் 1989ம் ஆண்டின் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெற்றது.



1989ம் ஆண்டின் பொதுத்தேர்தலுக்கு வருமுன்னர் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் அரசியல் வெட்டுமுகத்தை இதற்கு முன்னர் 1981இல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் பற்றியும் 1988இல் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல் பற்றியும் கூறாமல் கடந்துசெல்ல முடியாது.

1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர் ஜயவர்த்தனா தலைமையிலான ஐ.தே.க அரசாங்கம் 1978 இல் புதிய நிறைவேற்று ஜனாதிபதி முறையிலமைந்த புதிய அரசியலமைப்பை அறிமுகம் செய்தது. அப்போது தேர்தல் முறையிலும் மாற்றம்



செய்யப்பெற்றது. தொகுதிவாரித்தேர்தல் ரத்து செய்யப்பெற்று விகிதாசாரத் தேர்தல் முறை புதிதாக அறிமுகம் செய்யப்பெற்றது. அதனைத் தொடர்ந்து 1981 இல் மாவட்ட அபிவிருத்திச் சபை அறிமுகம் செய்யப்பெற்றது. தமிழ் இளைஞர்களின் பலத்த எதிர்ப்பையும் மீறி, அமரர் அ.அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக் குழு மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்ட மூலத்தைப் பாராளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்தது. அப்போது அமிர்தலிங்கம் அவர்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்தார். நாடளாவிய ரீதியில் 1981 இல் விகிதாசார தேர்தல் முறையின் கீழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஐ.தே.க வேட்பாளர் பட்டியலில் இருந்து காலஞ்சென்ற இ.வினாயகமூர்த்தி (காரைதீவைச் சேர்ந்தவர் - ஓய்வு பெற்ற அதிபர் - முன்னால் காரைதீவு கிராமசபை தலைவர் - 1977 தேர்தலில் பொத்துவில் தொகுதியில் அமரர் எம்.கனகரட்ணம் அவர்களின் வெற்றிக்காகப் பாடுபட்டவர்) அவர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் பட்டியலிலிருந்து காலஞ்சென்ற வேல்முருகு மாஸ்ரர் (பாண்டிருப்பைச் சேர்ந்தவர் - ஆசிரியர் - தமிழரசுக்கட்சியின் நீண்டநாள் தொண்டர்) அவர்களும் ஆகிய இரு தமிழர்களும் தெரிவானார்கள்.

வேல்முருகு அவர்கள் அவ்வப்போது தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தபோதும் அது எடுபடவில்லை. அது தனிக்குரலாகவே இருந்தது. அவரது கடசியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடம் அவருக்குப் பின்புலமாக இருந்து ஊக்கமாகச் செயற்படவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாகத் திகழ்ந்த கலஞ்சென்ற அ.அமிர்தலிங்கம் அவர்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தியும் - மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்ட மூலத்தை தமிழ் இளைஞர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் பாராளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்ததன் மூலம் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவுடன் ஏற்படுத்தியிருந்த நல்லுறவையும் - நெருக்கத்தையும் பயன்படுத்தியும் தமிழர் விடுதலைக்கூட்டணி நினைத்திருந்தால் கல்முனைத் தமிழர்களுக்கெனத் தனியான நிர்வாக அலகையும் (உதவி அரசாங்க அதிபர் பிரிவு) உள்ளூராட்சி அலகையும் அப்போதே அதாவது 1983 க்கு முன்னமே ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அதில் அக்கறை இருக்கவில்லை. ஆனால் பொத்துவில் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரான திருமதி ரங்கநாயகி பத்மநாதன் தனது தொகுதிக்கு அப்பாலும் கல்மனை விடையத்தில் அக்கறையோடு செயற்பட்டார்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினரான காலஞ்சென்ற இ.விநாயகமூர்த்தி அவர்கள் திருமதி ரங்கநாயகி பத்மநாதனுடன் இணைந்து அவருக்கு அனுசரனையாகச் செயற்பட்டார். பின்னாளில் வேல்முருகு அவர்கள் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தினை அடுத்த காலப்பகுதியில் ஆயுதம் தரித்த தமிழ் இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார்கள். ஆரம்பத்தில் தமிழ் தேசிய விடுதலைக் கூட்டணிக்கான போராட்டமாக முன்னெடுக்கப்பெற்ற தமிழ் இளைஞர்களின் சிங்களப்பேரினவாத அடகு முறைக்கு எதிரான ஆயுதப்போராட்டம், அதன் அடிப்படைத் தளத்திலிருந்து தடம் மாறி போராளி இயக்கங்கள் ஒருத்தரை ஒருத்தர் பழிதீர்த்துக்கொள்ளும் வெறும் ஆயுதக் கலாச்சாரமாக உருவெடுத்த போது, அந்த நிலைமை துரதிஸ்டவசமாக வேல்முருகு அவர்களின் உயிரையும் காவுகொண்டது.

தமிழரசுக் கட்சியின் நீண்டகாலத் தொண்டனாக விளங்கிய அமரர் வேல்முருகு அவர்கள் அரசாங்கத்தின் ஆசிரியர் தொழிலில் இருந்து கொண்டே

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்**

இன உணர்வுடன் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் நலனுக்காக ஓடியோடி உழைத்தவர். உயிரோடு இருக்கும் வரை ஓய்வு ஒழிச்சல் இன்றி மக்களுக்காகப் பாடுபட்டவர். தமிழரசுக் கட்சியோ அல்லது அதன் பின்னரான தமிழர் விடுதலைக் கூட்டணியோ அல்லது தற்போதுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்போ அம்பாறை மாவட்டத் தமிழர்களின் சமூக பொரளாதார அரசியல் மேம்பாட்டின் மீது அக்கறையுடன் செயற்படவில்லை என்பது ஒருபுறம் இருக்க, அமரர் வேல்முருகு அவர்கள் தமிழரசுக்கட்சியை தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவராயிருந்த போதிலும் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான அவரது ஆட்டோட்டத்தையும் ஓய்வு ஒழிச்சல் அற்ற உழைப்பையும் அவரது அரசியல் எதிரிகள் கூட மறுதலிக்க முடியாது. அவர் கொல்லப்பட்டமை அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குக் குறிப்பிடத்தக்க இழப்பாகும்.

பொத்துவில் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரான அமரர் எம். கனகரட்ணத்துடனும் பின்பு அவரது மரணத்தின் பின்னர் அப்பதவியில் நியமிக்கப்பெற்ற திருமதி ரங்கநாயகி பத்மநாதன் அவர்களுடனும் கட்சி அரசியலுக்கு அப்பால் அமரர் வேல்முருகு அவர்கள் நல்ல உறவைக் கொண்டிருந்தமை மக்கள் நலன் சார்ந்த அவரது சிந்தனையின் வெளிப்பாடேயாகும்.

1981இல் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அறிமுகம் செய்யப்பெற்ற போது அச்சபைகள் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கலாம் என்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்யலாம் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியால் தமிழருக்குக் கூறப்பட்டது. ஆனால் அது நடைபெறவில்லை. எந்தவிதமான நன்மையும் தமிழருக்குப் பெற்றுத்தராமல் அச்சபைகள் பின்னாளில் செயலிழந்து போயின. அது பற்றி விரித்துக்கூறுதல் இப்பந்தியின் தலைப்புக்குப் பொருந்தாது என்பதாலும் விரிவஞ்சியும் அதனை விடுத்து, இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்திற்கிணங்க நிறைவேற்றப் பெற்ற 13 வது அரசியல் சட்டத்திருத்தத்தின் கீழ் 1988 இல் நடைபெற்றதுமான வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பெற்ற மாகாணசபைத்தேர்தல் பற்றி நோக்கலாம். மாவட்ட ரீதியாகவே தேர்தல் நடைபெற்று மாகாணசபை உரவாக்கப்பெற்றது. மாகாணசபைகள் சட்டத்தின் படி அம்பாறை மாவட்டத்திற்கு 14 ஆசணங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. விகிதாசார முறையில் தான் தேர்தல் நடைபெற்றது. அம்பாறை மாவட்டத்திலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் பட்டியலிலிருந்து இரு தமிழர்கள் மாகாணசபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பெற்றனர். ஒருவர் இரா. துரைரட்ணம் மற்றவர் ஞா.பத்மநாதன் (இவர் பின்னாளில் 1990 ஜுன் மாதம் சென்னையில் வைத்து பத்மநாபாவினதும் ஏனையோரினதும் படுகொலையின் போது கொல்லப்பட்டுவிட்டார்). அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கிருபாகரன் மட்டக்களப்பில் போட்டியிட்டு, அம்மாவட்டத்திலிருந்து மாகாணசபைக்குத் தெரிவாகி, வடக்கு கிழக்கு இணைந்தும் - முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாளின் தலைமையிலானதுமான அரசில் நிதி அமைச்சராகப் பதவி வகித்தார். இவரும் 1990 ஜுன் மாதம் சென்னைப் படுகொலையில் பலியானவர்களில் ஒருவர். இவர் நிதி அமைச்சராக பதவி வகித்த காலப் பகுதியில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பல தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு மாகாணசபை நிர்வாகத்தில் பலதரப்பட்ட வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பெற்றன.

வடக்கு கிழக்கு இணைந்த இந்த மாகாண சபைக்காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் அபிவிருத்திப்பணிகள் எதுவும் பெரிதாக மேற்கொள்ளப்பெறவில்லை. இது முழு வடகிழக்கு மாகாணத்திற்கும் பொருந்தும். காரணம் வடகிழக்குக்குமான அரச நிர்வாகத்தைக் குழப்புவதில் புலிகள் முன்முரமாயிருந்தனர். மாகாணசபை நிர்வாகத்திற்கு இந்திய சமாதானப் படையினர் பாதுகாப்பு வழங்கியிருந்த போதிலும் மாகாணசபை நிர்வாகத்திற்கு எதிராகப் புலிகளால் மேற்கொள்ளப்பெற்ற ஆயத நடவடிக்கைகள் மற்றும் ஆயத அச்சுறுத்தல் காரணமாக அபிவிருத்திப் பணிகள் சுமுகமாக மேற்கொள்ளப்படுவதில் தடைகள் இருந்தன. இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாகவேனும் இணைக்கப்பெற்ற ஓர் மாகாணக்கட்டமைப்பு – அதிகாரப் பகிர்வு அலகு ஏற்படுத்தப்பட்டதே தவிர அதன் ஏனைய அனுகூலங்களை வடகிழக்குத் தமிழர்கள் பெற்றக்கொள்ளப் புலிகளின் ஆயுதங்கள் தடையாயிருந்தன. மாணகரசபைத் தேர்தலை பகிஸ்கரிக்கும்படி புலிகள் தமிழ் மக்களை அச்சுறுத்திய போதிலும் மக்கள் தேர்தலில் பங்கேற்று வாக்களித்திருந்தனர். 1988 நவம்பர் 19 ம் திகதி நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் தெரிவுசெய்யப்பெற்ற உறுப்பினர்களால் சபை உருவானது. 1988 டிசம்பர் மாதம் வடகிழக்கு மாகாணசபை பதவியேற்றது. இச்சபை ஆக 15 மாதங்களே பதவியில் நீடித்தது. அதற்கு முன்னர் 1988 ஒக்டோபரில் நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தலில் ஆர்.பிரேமதாச அவர்கள் வெற்றியீட்டியிருந்தார். 1989 பெப்ரவரியில் பாராளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெற்றது.

--தொடரும்--



# பட்டறிவு

## ஜே.வி.பி: 83 கலவரத்தின் பலிக்கடா

83 கலவரம் ஒரு கலவரத்தை மாத்திரம் நடத்தவில்லை. இன்னும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் இன்னொமொரு பேரழிவுக்கான அத்திவாரத்தையும் இட்டது. இங்கு வடக்கைக் குறிப்பிடவில்லை. தெற்கைத் தான் குறிப்பிடுகிறேன்.

83 இனப்படுகொலை தொடர்பாக உலகக் கண்டனங்களிலிருந்து தப்புவதற்கு ஜே.ஆருக்கு ஒரே வழி வேறு சக்திகளிடம் பழியைப் போட்டுவிடுவதே. இதன் மூலம் அரசாங்கம் தமது அரசியல் எதிரிகளை நசுக்கி ஓரங்கட்டி, அரசியல் எதிரிகளை அரசியல் அரங்கிலிருந்து துடைத்தெறிய முயற்சித்தார் ஜே.ஆர்.

77க்குப் பின் அப்போது தான் மீளவும் ஜனநாயக அரசியலுக்கு பிரவேசித்து மக்கள் மத்தியில் பணியாற்றத் தொடங்கிய ஜே.வி.பியையும், பலவீனமுற்றுகொண்டிருந்த பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளான இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் வெறும் சின்னக் கட்சியாக இருந்த ந.ச.ச.கவையும் சேர்த்து தடை செய்தது அரசாங்கம்.

83 காலப்பகுதியை எடுத்துக் கொண்டால் இடதுசாரிக் கட்சிகளின் பொதுப் போக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிரானதாகவும், தமிழ் மக்களின் உரிமைகளைப் புரிந்துகொள்ளாத போக்கும் தலை தூக்கியிருந்த போதும் நேரடியாக தமிழர் எதிர்ப்பு போக்கை அவர்கள் கைகொள்ளவில்லை. அப்படியிருக்க இந்தக் கலவரத்திற்கு அக்கட்சிகள் தான் காரணமென பழிபோடுமளவுக்கு சான்றுகள் இல்லாதபோதும் ஜே.ஆர் அதைச் செய்யத் துணிந்தார் என்றால் 83 கலவரம் அவரை எந்தளவு அரசியல் குருட்டுத் தனத்துக்கு இட்டுச் சென்றிருந்தது என்பதை விளங்கிக் கொள்ளலாம். அரசாங்கத்தால் எந்த சாட்சியத்தையும் முன்வைக்க முடியவில்லை. எழுந்தமானமான குற்றச்சாட்டை சுமத்தி ஜே.வி.பி உள்ளிட்ட கட்சிகளின் மீது இன அழிப்புப் பழியைப் போட்டு, தாம் தப்புவிக்கும் முடிவுக்கு வந்தது ஜூலை 29ஆம் திகதி தான்.

### தடை அறிவிப்பு

1983 யூலை 30 அன்று வெளியான வரத்தமானியின் மூலம் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), நவ சம சமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளுமே, நடைபெற்ற கலவரங்களுக்குக் காரணமென்றும், அவற்றை அவசரகால நிலை நிறைவடையும் வரை, தடை செய்வதாகவும், குறித்த கட்சிகளோடு எவ்வகையான தொடர்பையேனும் பேணுவோர் அல்லது குறித்த கட்சியினர் பற்றித் தகவல் வழங்காது மறைப்போர், மரண தண்டனை, ஆயுள் தண்டனை, சிவில் உரிமைகளைப் பறித்தல் உள்ளிட்ட கடுந்தண்டனைகளுக்கு ஆளாவார்கள் என்று அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்தது.

இந்தத் தடை வெளியானதோடு அன்றைய அமைச்சரவை பேச்சாளரான ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தொலைக்காட்சியிலும், வானொலியிலும் அறிவித்தலை விடுத்தார். அதன் படி; யூலை கலவரத்திற்கு சிங்கள தமிழ் கலவரத்தை விட பாரதூரமான சதித்திட்டம் பின்னணியில் இருந்தது என்றும் நான்கு கட்டங்களாக அவை நிறைவேற்றப்பட திட்டமிடப்பட்டிருந்தது என்றும் அறிவித்தார்.

முதலாவது கட்டம்; தமிழ் – சிங்கள மக்களுக்கிடையில் இனக்கலவரத்தை உண்டுபண்ணி பரஸ்பர ஆத்திர உணர்ச்சியை ஏற்படுத்துவது. இரண்டாவது கட்டமாக சிங்கள-முஸ்லிம் மக்களுக்கிடையே கலவரத்தை உண்டுபண்ணுவது, மூன்றாவது கட்டம் பௌத்த – கிறிஸ்தவ முரண்பாடுகளை விளைவித்து சிங்கள மக்களுக்குள்ளேயே சிக்கலை ஏற்படுத்துவது, நான்காவது கட்டம் பாதுகாப்புத் துறைக்குள் பிளவுகளை உருவாக்கி அதிகாரத்தைக் கைப்பற்றுவது. இந்த சதித் திட்டத்தின் பின்னணியில் அந்நிய நாட்டுச் சதியும் உண்டு என்றும், அவர்கள் வடக்கிலுள்ள தமிழ் பயங்கரவாதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள் என்றும் அவரது ஊடகப் பேச்சில் வெளிப்படுத்தினார். வதந்திகளை நம்பாமல், பரப்பாமல், இந்த நேரத்தில் அரசாங்கத்தை ஆதரித்து நிற்குமாறு நாட்டு மக்களை கேட்டுக் கொள்வதாக இறுதியில் வேண்டுகோள் விடுத்தார் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ்.

**என்.சரவணன்**

அரச பயங்கரவாத வன்செயலை மூடி மறைத்து கற்பனா பூர்வமான குற்றச்சாட்டுக்களையும், வதந்திகளையும் பரப்பிய அரசு வதந்திகளை பரப்புவதையும், அட்டூழியங்களையும் புறச்சக்திகள் மீது சுமத்திவிட்டு பொறுப்புள்ள அரசாங்கமாக காட்ட பிரயத்தனப்பட்டது.

அதுவரை சுதந்திரக் கட்சிக்கு ஆரம்பத்திலிருந்தே பக்க துணையாக இருந்து வந்த இடதுசாரிக் கட்சிகளையும் அதே போல ஏதாவது வழியைக் கையாண்டு அழிக்க சந்தர்ப்பத்தை பார்த்துக் கொண்டிருந்தது அரசாங்கம். 83 கலவரத்தை அதற்காகப் பயன்படுத்திக் கொண்டது. அந்த வகையில் கொம்யூனிஸ்ட் கட்சியையும் ஒரு வழி பண்ணியது.

அன்றைய கெடுபிடிப்போரில் அமெரிக்க மற்றும் மேற்குல முதலாளித்துவ சார்பை வெளிக்காட்டுவதற்காகவும், சர்வதேச ரீதியில் தம்மை ரஷ்ய சார்பு சக்தியில்லை என்பதைக் காண்பிப்பதற்கான வாய்ப்பாகவும் இதனைப் பயன்படுத்திக் கொண்டது அரசாங்கம். இடது சாரிக் கட்சிகளின் மீதான தடையைக் காண்பித்து அமெரிக்கா, பிரித்தானியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற ஏகாதிபத்திய முகாமிடம் உதவி கோரியதும் இந்த வகைப்பட்டது தான். இடதுசாரிகள் மீது நெடுங்காலமாக ஜே.ஆருக்கு இருந்து வந்த ஒவ்வாமைக்கு உடனடி-தற்காலிக மருந்தாக இந்தத் தடையைப் பயன்படுத்திக் கொண்டார் என்றே இன்னொருவகையில் கூறவேண்டும்.

### ஜே.வி.பி நிரபராதி!?

குறைந்தபட்சம் இந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து பழி சுமத்தப்பட்டிருந்த அந்த மூன்று இடது சாரிக் கட்சிகளின் மீதாவது முறைப்படி விசாரணை செய்து சாட்சியங்களுடன் அம்பலப்படுத்தியிருக்க வேண்டும் ஆனால் அதெப்படி செய்ய முடியும்.




இடதுசாரிக் கட்சிகளை தடை செய்ததோடு கலவரத்துடன் தொடர்புடையவர்கள் என்று 31 பேரின் பெயர்ப்பட்டியலை வெளியிட்டதுடன், அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் இறங்கியது அரசாங்கம். ஜே.வி.பி.யின் அன்றைய பொதுச் செயலாளர் லயனல் போபகே, உட்பட 30 பேர் கைதானார்கள். கொம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பல முக்கிய தலைவர்களும் கைதானார்கள். ரோகண விஜேவீர, கமநாயக்க போன்றரின் தலைகளுக்கு வெகுமதி அறிவிக்கப்பட்டது.

பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த கட்சிகளின் தலைவர்கள் பலர்



சரணடைந்தனர். இந்த நடவடிக்கைகளால் இந்த மூன்று கட்சிகளும் தலைமறைவு அரசியலுக்குத் தள்ளப்பட்டன. 6 மாதங்களின் பின்னர் ந.ச.ச.க., கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சரணடைந்தார்கள். வாசுதேவ நாணயக்கார, விக்கிரமபாகு கருணாரத்ன ஆகியோர் தலைமறைவாக மறைந்து வாழ்ந்து பின்னர் விஜய குமாரதுங்கவுடன் சென்று பொலிசில் சரணடைந்தார்கள்.

இந்தத் தடை பற்றிய அரசின் நியாயங்கள் வெற்றியளிக்காது போகவே ந.ச.ச.க. மற்றும் கொம்யூனிஸ்ட் கட்சி ஆகியன மீதான தடைகள் நீக்கப்பட்டன. அப்படி நீக்கப்பட்டமைக்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது அக் அக்கட்சிகளுக்கு கலவரத்துடன் தொடர்பில்லை என்பது நிருபிக்கப்பட்டிருப்பது போலவும் ஜே.வி. பிக்கு நிருபிக்கப்படவில்லை என்பது போலவும் அரசாங்கம் காட்டிக்கொண்டது. ஆகவே ஜே.வி.பி. மீதான தடையை மட்டும் அரசாங்கம் நீக்கவில்லை.

தமது கட்சியின் மீதான தடையை நீக்கக் கோரி விஜேவீர பல முறை ஜே.ஆருக்கு கடிதம் எழுதியிருந்த போதும் அது தொடர்ந்து நிராகரிக்கப்பட்டது. இதன் காரணமாக ஜே.வி. பி தலைமறைவு அரசியலுக்கு தள்ளப்பட்டது. காலப் போக்கில் ஜே.வி.பியினர் மீதான அடக்குமுறையும் கட்டவிழ்க்கப்பட்டது. இதன் காரணமாக ஜே.வி.பி.யினர் தமது தற்காப்புக்காக ஆயுதபாணிகளாக வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டனர்.

சர்வஜன வாக்கெடுப்பு முறைகேடானது என்று ஜேவிபி தொடுத்த வழக்கு ஜே.வி. பிக்கு சாதகமாக சென்று கொண்டிருந்தது. அந்த வழக்கில் ஜே.வி.பி வெற்றிபெற்றால் அரசாங்கத்துக்கு அது மிகப் பெரும் அவமானமாகவும், தோல்வியாகவும் முடியும். அரசாங்கம் கலைக்கப்பட்டு மீண்டும் பொதுத்தேர்தலுக்குப் போக நேரிடும். ஆக, ஜே.வி.பி தடை செய்யப்பட்டதன் மூலம் அவர்களை தலைமறைவுக்கு அனுப்பி வழக்கிலிருந்து தப்பியது அரசாங்கம்.

ஒரு வருடத்துக்குப் பின்னர் அத்தேர்தல் பற்றி தேர்தல் ஆணையாளரால் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ அறிக்கையில் விஜேவீர முன்வைத்திருந்த பல குற்றச்சாட்டுக்கள் உறுதிசெய்யப்பட்டிருந்தன என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இறுதியில் இரண்டாவது ஜே.வி. பி கிளர்ச்சிக்கு வித்திட்டு, 60,000கும் மேற்பட்ட இளைஞர்களை காவு கொடுத்தது அரசாங்கம்.




# மலைகளைப் பேசவிடுங்கள்

## மலைநாடும் - மலையகமும்



மலையக மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினை என்பது பெரியது நீண்டது. இந்த உரையின்(திருநெல்வேலி) தலைப்பே .. அதனை அடி ஒற்றியதுதான். " இலங்கையில் தமிழர்களின் நாட்டுரிமைக்கான போராட்டங்கள்" எனும்போது, இலங்கைத் தமிழர்களின் (தனி) நாட்டுரிமைப் போராட்டத்தைப்பற்றி பேசுவோர் மலையகத் தமிழர்களின் நாட்டுரிமைப் போராட்டம் பற்றிப் பேசத் தவறுகின்றனர்.

இலங்கைத் தமிழர்களின் (தனி) நாட்டுக்கான போராட்டம் அகிம்சை வழியில் ஆரம்பித்து ஆயுதப்போராட்டமாக மாறிய காலகட்டத்தில் அதாவது 1970 களின் பிற்கூறுகளில் மலையகத் தமிழர்களின் நாட்டுரிமைக்கான போராட்டம் தீர்வை நோக்கி நகர்ந்தது.




1948 ஆண்டு சுதேச இலங்கை அரசு மலையக மக்களின் குடியுரிமையைப் "பறித்தது". அந்த உரிமை பிரித்தானிய ராஜ்ஜியத்தின் கீழ் 1932 ல் வழங்கப்பட்டிருந்தது. 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்துடன் அமைந்த சுதேச அரசு யார் இலங்கைப் பிரஜைகள் என்பதை தீர்மானிக்க பிரசாவுரிமைச் சட்டத்தை கொண்டுவர அதில் ஏற்படுத்தப்பட்ட நியமங்களை (criteria) இந்தியவம்சாவளிகளானவர்கள் இலங்கைப் பிரசைகள் இல்லை என்பதுபோல இயல்பாக அமையுமாறு பார்த்துக்கொண்டனர். ஒரு நூதனமான முறையில் கொண்டு வரப்பபட்ட இந்தச் சட்டம் இந்திய வம்சாவளியினரை மட்டுமல்ல பாகிஸ்தான் பிரிந்து செல்வதற்கு முன்னராகவே இலங்கை வந்த இந்தியர்களினதும் இலங்கை குடியுரிமையையும் பறித்தது.

1947-1952 கால முதலாம் பாராளுமன்றில் மலையகத் தமிழ் மக்களின் பிரிதிநிதியாக இருந்த ஏ.அஸீஸ் ஒரு பாகிஸ்தானியர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் இலங்கை இந்திய காங்கிரஸில் இருந்து பின்னர் அதுவே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆனதன் பிறகு சில காலம் இருந்துவிட்டு "ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்" கட்சியைத் தோற்றுவித்தவர். அதுவே இன்று மனோகணேசன் தலைமையிலான " ஜனநாயக மக்கள் முன்னணி" எனும் அரசியல் கட்சியாகவுள்ளது. அதேநேரம் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் இன்றுவரை அவரது தலைமையிலான தொழிற்சங்கமாக செயற்படுகின்றது.

ஏ. அஸீஸ் அவர்களுடன் மனோ கணேசன் அவர்களின் தந்தை வி.பி.கணேசன் இணைந்து அரசியல் பணியாற்றியிருந்தார். கேகாலை மாவட்டத்தை தளமாகக் கொண்டே ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் செயற்பட்டது. இடதுசாரி சார்புடையதான தாக்கம் அதற்கு இருந்தது. இந்திய வம்சாவளி என்ற கோதாவில் இந்திய வர்த்தகர்களும் பாகிஸ்தான் வம்சாவளியினரும்கூட பாதிக்கப்பட்டதனால் 1948 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தில் 1954 ஆம் ஆண்டு திருத்தம் கொண்டுவரப்பட்டது. இது " இந்திய பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டம்" என பேசப்படுவதுண்டு. இதில் ஏற்படுத்தப்பட்ட சில தளர்வுகள் இந்திய வர்த்தகர்கள்,

மேட்டுக்குடி குடியினர், பாகிஸ்தானியர்கள் ஆகியோருக்கு இலங்கை குடியுரிமை கிடைக்க வழி செய்தது. தொழிலாளர் வர்க்கமான மலையகத் தமிழர்களுக்கு இதன் மூலம் விடுதலை கிடைக்கவில்லை. ஆங்காங்கே ஒரு சிலருக்கு குறிப்பாக பெரியகங்காணி வழிவந்தவர்களுக்கு கிடைத்தது.

எனவே அப்போதிருந்தே மலையகத் தமிழர்கள் தமது "நாட்டுரிமைக்கான" போராட்டத்தை ஆரம்பித்தனர். "எங்களுக்கு இலங்கை பிரஜாவுரிமைக் கொடு " எனும் கோரிக்கையை வலுவாக முன்வைத்தே மலையகத் தமிழர்களின் அத்தனை அசைவுகளும் அமைந்திருக்கின்றன.

1948முதல் 1964 வரையான அத்தனை மலையக இலக்கிய படைப்புகளையும் எடுத்து ஆராய்ந்தால் இதற்கு ஏராளமான ஆதாரங்களைக் காணலாம். சி.வி. வேலுப்பிள்ளையின் " இலங்கைகைத் தேயிலைத் தோட்டத்திலே..." (" in Ceylon tea garden") நெடுங்கவிதைத் தொகுப்பில்முன் பகுதியான அவலச் சுவை பக்கமே அதிகம் பேசப்பட்டதனால் பிற்பகுதி பிரபலமாகவில்லை. மலையக மக்களின் நாட்டுரிமை கோரிக்கையை வலுவாக முன்வைக்கும் அது சார்ந்த கனவைமக்களுக்கு வழங்கும் அற்புதமான காவியம் அது. அதனால் தான் எமது பாக்யா பதிப்பகத்தின் முதல் வெளியீடாக

**மல்லியப்புசந்தி திலகர்**

அந்த தொகுப்பை மூலமொழியான ஆங்கிலத்தையும் சக்தீ பால அய்யாவின் தமிழாக்கத்தையும் ஒன்றாக சேர்த்து ஒரே தொகுப்பாக வெளியிட்டோம் (2007).

இந்த நெடுங்கவிதையை மலையக மக்களின் நாட்டு உரிமை கோரிக்கையை முன்வைத்து கொழும்பு காலிமுகத்திடலில் நடாத்திய சத்தியாக்கிரக போராட்டத்தில் அமர்ந்தவாறே சி.வி.வேலுப்பிள்ளை எழுதியதற்கான ஆதாரங்கள் உண்டு.

அவரது நாடற்றவர் கதை, வீடற்றவன் நாவல் என அடுக்கிக் கொண்டே போகலாம். இது பற்றிய தகவல் தொகுப்பு சி.வி. நூற்றாண்டுவிழாவில் தொழிலாளர் தேசிய சங்கம் வெளியிட்ட "மாவலி" சிறப்பிதழில் (2014 செப்டெம்பர்) சேர்க்கப்பட்டுள்ளது. இவர்போல பல எழுத்தாளுமைகள் தங்களது காலத்து நாட்டுரிமைப்போராட்ட களங்களைப் பதிவு செய்து உள்ளனர். இந்த காலப்பகுதியிலேயே " மலைநாடு " என்ற சொல்லாடல் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

1964 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தக் கோரிக்கை பிளவுபட்டதோடு இன்னும் கூர்மைப்பட்டது என்றும் கூட சொல்லலாம். அதுவரை "இலங்கை எங்கள் நாடு .. அதில் இருந்த எங்கள் குடியுரிமையை திரும்ப வழங்கு" என்று இருந்த கோரிக்கையை 1964 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தமான இலங்கை - இந்திய ஒப்பந்தம்கேள்விக்குள்ளாக்கியது. ஒப்பந்தப்படி இந்தியாவுக்கு ஒரு பகுதியினர் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற நிலைவர 'மலையக மக்களின் இலங்கைக்கான நாட்டு உரிமைப்போராட்டம்' நசுக்கப்பட்டது. லட்சக்கணக்கானோர் இந்தியா திரும்பிச் செல்லகட்டாயமாக்கப்பட்டனர். இந்திய பிரதமர் ஜவகர்லால் நேரு இறக்கும்வரை இத்தகைய ஒரு ஒப்பந்தத்திற்கு அவர் உடன்படவில்லை எனச் சொல்லப்படுகின்றது. அதற்கான ஆதாரங்களைக்கொண்ட ஒரு ஆங்கில நூல் அண்மையில் வெளிவந்துள்ளது. ( அதுபற்றி பிரிதொருசந்தர்ப்பத்தில் பார்க்கலாம் ) எனினும் நேரு இறந்தவுடன், அடுத்து பிரதமரான லால் பகதூர் சாஸ்திரி பதவியேற்றதும், அப்போதைய இலங்கைப் பிரதமராக தெரிவாகியிருந்த சிறிமா பண்டாரநாயக்காவும் "ஏதோ பேசிக்கொண்டு" இந்த ஒப்பந்தத்தை செய்திருக்கிறார்கள். (இந்த ஒப்பந்தத்தையும் விரிவாக தெரிந்து கொள்ள வேண்டியது என்ற வகையில் அடுத்து தனியாக நோக்கலாம்) எது எவ்வாறெனினும் 1964 ஆம் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம்1970 களில் நடைமுறைக்குவந்தது. விளைவு 1961 ஆம் ஆண்டு இலங்கையின் சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி இரண்டாவது அதிகூடிய சனத்தொகையினராக இருந்த மலையகத் தமிழர் 1981 ஆம் ஆண்டு நான்காம் இடத்திற்கு தள்ளப்பட்டனர். அது அவர்களின் நாட்டுரிமைக் கோரிக்கையின் சக்தியை நலிவடையச் செய்தது. தவிரவும் இலங்கையா ? இந்தியாவா? என தீர்மானம் எடுக்க வேண்டிய நிலையில் பல லட்சம் பேர் இந்தியா என விண்ணப்பித்து காத்திருக்க "அந்த கண்காணா தேசத்தில் என்ன செய்யவென்று " மலையகப் பகுதிகளில் இருந்து வெளியேறி, இலங்கையின் வடக்கு பகுதியான "வன்னியில்" மலையக மக்கள் குடியேறினர் அல்லது குடியேற்றப்பட்டனர்.

இனவாதமும் இலங்கை மறுப்பும் மலையக மக்களை "தள்ளும் காரணியாக" அமைய, அங்கிருந்து வந்த அழைப்புகளும் குடியேற்ற வாய்ப்புகளும் பிரச்சாரங்களும் வன்னிக்கு "இழுக்கும்" காரணிகளாயின. அங்கே தயாரான தனி நாட்டு கோரிக்கைக்கான உள்நாட்டு யுத்த ஏற்பாடுகள்தான் அந்த இழுக்கும் காரணியானது என்பதை அப்பாவி மலையக மக்கள் அறிந்த இருக்க வாய்ப்பில்லை.அனுராதபுரம் - வவுனியா எல்லைகளில் அரணாக அவர்கள் குடியேற்றப்பட்டதும் வன்னிக்காட்டை வாழ்க் கைக்கு ஏற்ற நிலமாக மாற்றியதிலும் மலையக மக்களின் உழைப்பும் உதிரமும் உயர்வானது. பின்னாளில் உள்நாட்டில் பெருமளவில் உயிரை இழந்ததும் இவர்கள்தான். இவை எதுவுமே தற்செயல் நிகழ்வுகள் அல்ல.

இதே காலப்பகுதியிலேயே தனிநாட்டுக்கான வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.அப்போது தமிழர் (ஐக்கிய) விடுதலை கூட்டணியாக செயற்பட்ட அமைப்பே அந்த தீர்மானத்தை எடுத்தது. அதில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழரசு கட்சி ஆகியவற்றோடு இலங்கைதொழிலாளர் காங்கிரஸ் கட்சியும் மலையக தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருந்தது. வட்டுக்கோட்டை தீர்மானம் முன்வைக்கப்பட்டதோடு தமிழர் விடுதலை கூட்டணியில் இருந்து வெளியேற இ.தொ. கா தலைமை எடுத்த முடிவு சரியானது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால், அன்று முதல் முன்கொண்டு சென்ற அமைச்சுப் பதவி அரசியல் செல்நெறியே மலையகம்சார்ந்து செயற்படவேண்டிய அரசியல் செல்நெறியை தீர்மானிக்க வேண்டிய தேவையை உருவாக்கியது.

வடக்கு, கிழக்கு ( இலங்கைத் ) தமிழர்களின் நாட்டுரிமைக் கோரிக்கையை முன்வைத்த அதே காலப்பகுதியில் அதற்கு நிகரான "ஹட்டன் தீர்மானம் " ஒன்றை மலையக அறிவுஜீவிகள் நிறைவேற்றியுள்ளனர். அது "இந்தியாவும் வேண்டாம், வன்னியும் வேண்டாம் 'மலையகமே' எமதுமண். இலங்கையே எங்கள் தேசம்" என்பதுவே அந்த தீர்மானமாக அமைந்துள்ளது. அந்தத் தீர்மான நிறைவேற்ற பங்கேற்றலில் பலர் இருந்ததாக அறிந்தபோதும் பகிரங்கமாக அதனை வெளிப்படுத்த பலரும் தயங்கியே நின்றனர். எனினும் , கடந்த ஆண்டு கனடாவில் வருடாந்தம் வெளிவரும் 'குறிஞ்சி மலர்' இதழில் முன்னாள் மலையக மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் பி.ஏ. காதர் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அவரது லண்டன் இல்லத்தில் அது தொடர்பாக ஆவணங்கள் கிடைக்குமா எனத் தேடினோம். எனினும். அவரது நினைவலைகள் ஊடாக அதனை அவர் ஆவணமாக்கியுள்ளமை வரவேற்கத்தக்கது.

1964 அக்கு பின்னான இத்தகைய நிலைமைகளே "மலையகம்" என்ற சொல்லை வலிமைபடுத்தியது. இந்திய வம்சாவளியினரான மலைப்பாங்கான பிரதேசத்தை பிரதானமாக தங்கள்வாழும் மண்ணாக கொண்ட மக்கள் தம்மை மலையகத்தமிழ் மக்கள் என அழைக்கத்தொடங்கினர். இன்று, மலையகத்துக்கு வெளியே வாழும் இந்திய வம்சாவளியினரும் தம்மை"மலையகத் தமிழர்கள்" என்றே உணர்கின்றனர். 1970 களில் வன்னியில் குடியேறியவர்களும் அவர்களது குடியுரிமைப் பிரச்சினை தீர்க்கப்பட்டதும் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதுமான ஆண்டே "2009".

(தொடரும்)

# படுவான் திசையில்

## படுவான்கரை வீதிகள் : மாற்றான் தாய் மனப்பாங்கு ஏன்?

படுவான் பாலகன்



முன்னால் சென்றால் பின்னால் வருபவர் தெரிவதில்லை. புளுதியினால் கண்விழிக்க முடியாத நிலையும் பள்ளங்களில் விழுந்து எழுந்து அடிப்பட்டு செல்வதுமே வேதனையாச்சு என நாற்பதுவட்டை சந்தியில் நின்று மகேசனும் சுதாவும் பேசிக்கொண்டனர். "தாந்தாமலை பிரதான வீதியின் நிலை பற்றி", வீதியினால் பயணித்த களைப்பில் சந்தியில் நின்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டிருந்தனர்.

தாந்தாமலை முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் ஆரம்பித்தால், 21நாட்களும் 24மணி நேரமும் தாந்தாமலை பிரதானவீதியால் பயணம் செய்பவர்கள் ஆயிரக்கணக்கானோர். தோய்த்துலர்ந்த ஆடைகளுடனும், நீராடி புனிதமாக இறைவனை வணங்குவதற்காக வீட்டிலிருந்து புறப்படுபவர்கள், தாந்தாமலை முருகன் ஆலயத்தினை அடையும் போது, தலை, முகம், ஆடை, கை, கால் என எல்லா அங்கங்களிலும் புளுதி படிந்து, யாரென்று மதிக்க முடியாதவர்களாகின்றமை பலவருட தொடர்கதையாச்சு.

மணற்பிட்டி சந்தியிலிருந்து, மாவடிமுன்மாரி சந்திவரை காப்பட் வீதியும், மாவடிமுன்மாரி சந்தியிலிருந்து தாந்தாமலை வரை கிறவல் வீதியுமே அமைக்கப்பட்டுள்ளன.



இவ்வீதியின் சிறிய பகுதியில் கொங்கீறிட் வீதியும் அமைந்து நாட்டில் அமைக்கப்படும் வீதிகளின் அமைவுக்கு கட்டியங் கூறுகின்றன. நாளாந்தம் பலர் பயணம் செய்யும் இவ்வீதியில் இருக்கின்ற குன்றுகளுக்கும் குழிகளுக்கும் கணக்கில்லையென சாமித்தம்பியும் அடிக்கடி பேசிக்கொள்வதுண்டு. பலரின் முள்ளந்தண்டு பிரச்சினைக்கு இவ்வீதி காரணமானதை மறுக்கவும் முடியாது. மோட்டார் சைக்கிளில் பயணித்தால் இருக்கையிலிருந்து எழுவதும், விழுவதுமே பலரின் அனுபவமாச்சு.

வாகனமொன்று முன்னால் சென்றால், மற்றவர் பின்னால் செல்ல முடியாது. கிறவல் வீதியென்பதினால் வீதியில் படிந்துள்ள தூசிகள் மேலெழுகின்றன. அவை பின்னால் செல்கின்றவர்களின் கண்களிலும், மூக்கிலும், வேறு அங்கங்களிலும் ஒட்டிக்கொள்கின்றன. இதனால் பின்னால் வருபவர்கள், சுவாச ரீதியான பிரச்சினைகளுக்கும் உள்ளாகின்றனர். இவ்வாறான பிரச்சினைகளுக்கு நாளாந்தம் பயணம்செய்கின்றவர்கள் உள்ளாகின்றமை கவலையானதொன்றே.

புளுக்குணாவை, கச்சக்கொடிசுவாமிமலை, 39ம் கிராமம், தாந்தாமலை, நெல்லிக்காடு, ரெட்வாணா, 40வட்டை, மாவடிமுன்மாரி, வாழைக்காலை, பனிச்சையடிமுன்மாரி என பல கிராமங்களைச்சேர்ந்த மக்கள் அன்றாடம் இவ்வீதியினால் பயணத்தினை மேற்கொண்டு, நோய்களுக்கும் உள்ளாகின்றனர்.

குன்றுகளும், குழிகளும் நிரம்பிய இவ்வீதியில் மழைபெய்தால், குழிகள் யாவும் நிரம்பி நிற்பதையும் மறைக்க முடியாது. அதிக மழைபெய்தால் வீதியில் அதிக வெள்ளமேற்பட்டு போக்குவரத்து தடைப்படுவதும் வருடாந்த செய்திகளாச்சு. இவ்வாறு வீதியால் போக்குவரத்து செய்து சிலர் நீரில் மூழ்கி இறந்தமையும் பதிவாச்சு. என சுதா முணுமுணுத்துக்கொண்டான்.

மகேசனது வாழ்நாளில் பல நாட்களை இவ்வீதியில் கழித்தமையினால், அவனுக்கு இவ்வீதியினூடான போக்குவரத்து பழக்கிப்போனதொன்று. ஆனால் வருடாந்த மகோற்சவத்தினை காண்பதற்காக வருகின்ற மக்களுக்கு வீதியின் நிலை புதியதொன்றே. இதனால் இவர்களுக்குள் எழும்பும் வினாக்கள் அதிகமானதே. அரசியல்வாதிகளின் கண்களுக்கு தெரிவதில்லையா?, இங்குள்ள மக்கள் ஒதுக்கப்பட்டுள்ளனரா?, நாளாந்தம் எவ்வாறு பயணிப்பதென? வினாக்களையும், தங்களின் மேல் படியும் புளுதியின் வேகத்தில், சினத்தினையும், கவலையையும் வெளிப்படுத்தி நிற்பதுவும் நடந்தேறும் உண்மைகளே.

வீதியினை புனரமைப்பு செய்து வழங்குங்கள் என இப்பகுதி மக்களும் அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் வேண்டாத நாள் இல்லை. மாகாணசபையினால் புனரமைப்பு செய்யப்படும், நிதியொதுக்கப்பட்டுள்ளது. வேலை தொடங்கப்படும் என்று பதில்கள் மட்டுமே பலரிடமிருந்து இதுவரை வந்துள்ளன. இவை மக்களை ஏமாற்றும் வார்த்தைகள் போல தென்படுவதாக பலவருட காத்திருப்பின் வேதனையால் சுதாவும் பேசிக்கொண்டான்.

தாந்தாமலை முருகப்பெருமானின் மகோற்சவம் ஆரம்பித்தால், மக்களின் ஆதங்கத்திற்கு, யானைப்பசிக்கு சோளம் பொரி போடுவதுபோன்று, குன்றுகளையும், குழிகளையும் சமப்படுத்த வாகனங்களைக்கொண்டு பள்ளங்களுக்கு ஏற்ப மேடுகளை தகர்ப்பது நடந்தேறும். இதனால் வருடாந்தம், அருகில் உள்ள வயல்நிலங்களைவிட, வீதிகள் பள்ளங்களாக மாறிவருகின்றதாகவும் கூறி, மகேசன் தனது கவலையையும் வெளியிட்டான்.

40வது வட்டை சந்தியில் நின்று பேசிக்கொண்டு நின்றபோது, யானை வரும் நேரமாச்சு வீடுசெல்கின்ற எண்ணமில்லையா? என அருகால் சென்றுகொண்டிருந்த சாமித்தம்பியும் குறிப்பிட, அவ்விடத்தினை விட்டு மகேசனும், சுதாவும் அகன்றனர். அப்போதும் கூட நான் இறப்பதற்கு இடையில், கிறவல் வீதி! காப்பட் வீதியாக காட்சியளிக்குமா என்ற சந்தேக வினாவுடன் அவ்விடத்திலிருந்து சுதா புறப்பட்டான்.

**தாந்தாமலை செல்லும் அடியார்கள் வீதியின் அழுக்கில் தோய்ந்து செல்லவேண்டிய நிலை**

படுவான் திசையில் பக்கத்துக்கான அனுசரணையாளர்
--------------------------------
அலையப்போடியார் நல்லரத்தினம்
ஸ்தாபகர் : அறிவாலயம் கல்வி மையம்
வாழ்நாள் நன்கொடையாளர்:
சக்தி மகளிர் இல்லம்



# மயிலந்தனை : யானைகள் கடக்கும் இடம்

கிரான் விஜய்

மட்டக்களப்பு – பொலன்னறுவை வீதியில், புணாணை புகையிரத நிலையம், அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்பவற்றைக் கடந்து சென்றால், "யானைகள் கடக்கும் இடமாகும்" என்ற வீதியோர அவதானிப்புப் பலகையைக் காணலாம். அதனைக் கடந்து தெற்குப் பக்கம் திரும்பினால் காடுகள் சூழ்ந்த கிறவல் வீதி வரும். அந்தக் கிறவல் வீதியில் ஒரு கிலோ மீற்றர் சென்றால் மயிலந்தனை கிராமம் வரும்.



மட்டக்களப்பின் இப்போதைய எல்லையோரக் கிராமங்களில் மயிலந்தனையும் ஒன்று.! மாலை பட்ட பிறகு யானைகள் அந்த வீதியில் நடமாடும். எனவே மாலை பட முன்னர் சென்று திரும்பவேண்டும்.

1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி இடம்பெற்ற படுகொலைகளால் குழந்தைகள் உட்பட 35 பேரைப் பலிகொடுத்த கிராமம் மயிலந்தனை. அச்சம்பவத்தையடுத்து அகதிகளாக இடம்பெயர்ந்து வாழைச்சேனை – பேத்தாளை அகதிமுகாமிலும், பின்னர் பண்டிமடு அகதி முகாமிலும் அகதிகளாக வாழந்தவர்கள். 17 வருடங்களின் பின் 2009 ஆம் ஆண்டில் மீண்டும் மீள் குடியேறியிருக்கிறார்கள். வழமைபோல வீடுகளைக் கட்டிக்கொடுத்து மீள்குடியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

அருகே சாலம்பச்சேனை என்ற 20 குடும்பங்களைக் கொண்ட சிறு கிராமம் அமைந்திருக்கிறது. அயலில் அணைக்கட்டு, முள்ளிவட்டுவான் என்ற கிராமங்கள் அமைந்திருக்கின்றன. வீதியின் தெற்குப் புறத்தில் அமைந்திருக்கிற இக்கிராமங்கள் கோறளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேச சபை எல்லைக்குள் அடங்குவன. ஆனால் வீதியின் வடக்குப் புறம் அமைந்திருக்கிற புணாணைக் கிராமம் மற்றும் பாடசாலை என்பன கோறளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேச சபை எல்லைக்குள் அமைந்திருக்கின்றன.

மயிலந்தனை ஒரு விவசாயக் கிராமம். மக்களின் தொழில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, நன்னீர் மீன்பிடி என்பவைதான். மாரி மழையை நம்பிய விவசாயம் செய்பவர்கள். விவசாயம் நெற்செய்கையும், சிறு அளவான சேனைச் செய்கையும் தான். அரும்புகள் பாலர் பாடாலை, ஒரு சன சமூக நிலையம், ஒரு சமூக நிலையம், வீட்டின் முன்பக்கத்தில் நடக்கும் ஒன்றிரண்டு கடைகள், முத்துமாரியம்மன் ஆலயம் என்பன கிராமத்தின் முக்கிய அம்சங்கள்.



மயிலந்தனை மக்கள், மட்டக்களப்பின் உள்ளமைந்த கிராமங்களுக்குரிய பிரச்சினைகளுடன் வாழ்க்கையைக் கொண்டு நடத்துபவர்கள். மாரியில் கிடைக்கும் மழையை நம்பிய விவாசயம்தான் பிரதான வாழ்வாதாரம். ஏனைய காலங்களில் பயிர்ச்செய்கைக்கான நீர் மட்டும் அல்ல, குடிநீருக்கும் தட்டப்பாடுதான். இத்தனைக்கும் அருகே வளமான மதுறுஓயா நதி ஓடுகிறது! ஆனால் அந்நீரைப் பெற்றுக் கொள்ள வழியேதும் இதுவரை கிடைக்கவில்லை. வரட்சிக்காலங்களில் பவுசர்களிளில் வழங்கப்படும் நீரைத்தான் குடிநீராகப் பயன்படுத்த வேண்டும்.

இருள் சூழ்ந்தபின் யானைகள் நடமாடத் தொடங்கிவிடும். வீடுகளில் வாழ்வதும், வீதியால் கிராமத்திற்குள் செல்வதும் கடுமையான காரியம்தான். தற்போது புழக்கத்தில் உள்ள காடு சூழ்ந்த கிறவல் வீதிக்கு மாற்றான வெட்டவெளியில் அமைந்துள்ள கிறவல் வீதி பாதுகாப்பானது என்றாலும் அந்த வீதியை அமைத்துக் கொள்வதிலும் பல தடைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

யானைகளின் தொல்லைகளை சமாளித்தாலும்,

**வசதியீனமும், யானைகளுடனான போட்டியும் கிராம மக்களின் அன்றாட வாழ்க்கை**

அத்தியாவசியத் தேவைகள் அனைத்திற்கும் பிரதான வீதிக்கு வந்து, 18 கிலோமீற்றர் கடந்து ஓட்டமாவடிக்கோ, வழைச்சேனைக்கோதான் செல்ல வேண்டும். அதுவும் யானைகள் வீதிக்கு வரமுன்னர் சென்று திரும்பவேண்டும். நோய் நொடி மற்றும் அவசரத் தேவை என்றால் நிலைமை மோசமே.

பிரதான வீதியில் அமைந்திருக்கிற புணாணை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 09 வரை கல்வி கற்கும் வசதியுண்டு. மொத்தமாக 45 மாவணர்கள் கல்வி கற்கிறார்கள். தரம் 09 இல் 02 மாணவர்கள்தான் கல்வி கற்கிறார்கள். இதற்கு மேல் படிப்பதற்கும் சிறந்த கல்வி வாய்ப்புக்களுக்கும் வாழைச்சேனைக்குத்தான் செல்ல வேண்டும். எந்த வகுப்பில் படிப்பதென்றாலும் ஊருக்குள்

**மயிலந்தனை படுகொலைகளை பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இன்னமும் அந்தக் கிராமம் அச்சுறுத்தலிலேயே நிற்கிறது**

இருந்து பிரதான வீதிக்கு நடந்து வந்தேயாக வேண்டும். புணாணை பாடசாலைக்கும் இரவில் யானைகள் வந்து போகிறது. வாரத்திற்கு ஒன்றிரண்டு பாம்புகளையாவது அடிக்க வேண்டியும் இருக்கிறது.

95 குடும்பங்களைச் சேர்ந்த 250 பேரளவில் மீள்குடியேறியிருக்கிற போதிலும், கல்வி மற்றும் பிற வசதிகளுக்காக பலர் இன்னமும் வாழைச்சேனைப் பிரதேசத்திலே வாழவேண்டிய தேவையிருக்கிறது. இந்த நிலைமை மட்டக்களப்பின் மீள்குடியேற்றக் கிராமங்களில் காணக்கூடிய ஒரு பொதுப்பிரச்சினையாகும். தொழில் வாய்ப்புக்களும் கல்வி மற்றும் பிற வசதிகளும் வளர்ச்சியடையாது போனால் இப்போது வசிப்பவர்களும் இடம்பெயர வேண்டி ஏற்படும்.

இவ்வளவையும் கடந்து இங்கு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பது கடும் மனோதைரியத்தையும் கடும் உழைப்பையும் மட்டும் நம்பிய விடயமே.

---

## சிறுகதை

## பயணியின் கதை

நசீம் ஹிக்மத்

பஸ்ஸில் ஏறி வாகான இருக்கை கிடைத்து அமர்ந்ததும் தெரிந்தவன் எவனும் அந்த பஸ்ஸில் ஏறிவிடக்கூடாதென்று எண்ணிக்கொள்வேன். தெரிந்தவன் அருகில் உட்கார்ந்து தொண தொணத்தால் நான் எப்படி தூங்குவதாம்?

பஸ் பயணத்தில் சயனிப்பதும் பாக்கியம்தான். நாரசமாக ஒலிக்கும் பாட்டு, கண்டக்டரின் முணுமுணுப்பு இத்தியாதிகளை இதனால் தவிர்க்கலாம். அன்று அருகில் உட்கார்ந்து என் சயனத்திற்கு சயனோரா சொல்ல வைத்தவன் தெரிந்தவனல்லன்.

'பலன்டக்கோ மஹத்தயா..' இப்படித்தான் பக்கத்தில் இருந்தவன் துவங்கினான். 'முப்பது ரூபா பெறுமதியான நிக்கல் மாலைக்கு முந்நூறு ரூபா விலை சொல்கிறான்.' என சிங்களத்தில் தொடர்ந்தான். பஸ்ஸில் எனது முக்கியமான கடமைக்கு இடையூறாக இருக்கிறானே என்ற ஃபீலிங்குடன் சுரத்தில்லாமல் 'உம்' கொட்டினேன்.

' கிராமத்தான் போன்ற எனது தோற்றத்தால் இந்த பேமண்ட்காரன் எல்லாம் என்னை ஏமாற்ற முடியும்' என நினைக்கிறான்.

அப்போதுதான் அவனை ஏறிட்டுப் பார்த்தேன். முப்பதுக்குள் வயதிருக்கும். நல்ல கறுத்த நிறம். இரு கண்களும் சமச்சீராக இல்லாமல் ஒன்று சற்று சிறிதாக இருந்தது. மொத்தத்தில் தனது மூஞ்சியைப் பற்றிய அவனது விமர்சனம் சரியெனவேபட்டது.

'இப்படித்தான் மஹத்தயா ஒரு நாள் பெட்டாவில் வீதியில் பெல்ட் விற்கிறவன் ஏமாற்றப் பார்த்தான். பெல்ட் விலை நூறு ரூபா என்றான். ஒன்றை செலக்ட் பண்ணி நான்கு ஓட்டைகள் போடு என்றேன். ஓட்டை போட்ட பிறகு இருநூறு ரூபா கேட்டான். பெல்ட்தான் நூறு ரூபாயாம். ஒரு ஓட்டைக்கு 25 படி நாலுக்கு நூறு. மொத்தம் இருநூறு என்று கணக்கு சொன்னான். போடா நீயும் உன் பெல்டும் என்று அதை போட்டுவிட்டு ஓடிவிட்டேன்' என்றான்.

இது வழைமையாக பெட்டாவில் நடக்கும் விளையாட்டுதான். ஆகவே அவன் சொன்னது புதிய விடயமல்ல. நான் கொழும்பான் என்பதைக் காட்டுவதற்காக ' இந்த பேமண்ட்காரன் எல்லாம் என்னிடம் வாலாட்ட மாட்டார்கள். என்னை எல்லாம் பார்த்தாலே அவர்களுக்கு நான் கொழும்பான் என்று விளங்கிவிடும்' என்றேன் நான்.

'மஹத்தயா நானும் பிறந்து வளர்ந்தது மாளிகாவத்தையில்தான். எனது அம்மாவும் அப்பாவும் சிறு வயதிலேயே இறந்து விட்டார்கள். நான் எனது ஆச்சியிடமே வளர்ந்தேன். அவ கிராமத்து மனுஷி என்பதால் என்னைப் பொத்திப் பொத்தியே வளர்த்தா. மாளிகாவத்தையில் இருந்தாலும் நல்ல பண்புகளுடனேயே வளர்ந்தேன். இதற்கு காரணம் ஆச்சிதான்'.

'பார்த்தாயா உன்னை கிராமத்தான் போல வளர்த்தாலும் நல்லாதானே ஆச்சி வளர்த்திருக்கிறா' என்றேன்.

'ஆனால் மஹத்தயா அப்படியும் வளர்க்கக் கூடாது. வெளியுலகமும். தெரிந்திருக்க வேண்டும். கூடாத விடயங்களையும் அறிந்திருக்க வேண்டும். ' என்றான்.

'ஆச்சி இருக்கிறாவா?' இது நான்.

'இல்லை மஹத்தயா. செத்துப் போனா. அவ இறந்த பிறகு எனக்கு பெரிய சுதந்திரம் கிடைத்தது. வெளியுலகம் தெரிந்தது. கெட்ட நண்பர்களின் சகவாசம். சிகரெட் பழக்கம். நண்பர்களால் ஜொயிண்ட் புகைக்கவும் பழகினேன். நான் மாறிப்போனேன். இந்த கெட்ட புகைத்தல் பழக்கங்களால் என் கன்னங்கள் குழி விழுந்து அவலட்ணமாக தெரிந்தேன். நாளுக்கு நாள் நிலைமை மோசமானது.'

அவன் கதையைக் கேட்க அவன் மீது அனுதாபம் ஏற்பட்டது. அவன் தொடர்ந்தான். 'எனக்கு ஒரு பால்ய நண்பன் இருந்தான். பல வருடங்களுக்கு பின்னர் என்னைச் சந்தித்த அவன் என் நிலைமையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தான். அவனைக் கண்டதும் எனக்கு அழுகை வந்தது. அழுதேன். தோளைத் தட்டிக் கொடுத்து தேற்றினான்.'
இதைச் சொல்லும்போது அவன் கண் கலங்கியது.
புறங்கையால் கண்களைத் துடைத்துவிட்டு தொடர்ந்தான்.

'மஹத்தயா எனது புகைத்தல் பழக்கங்களை நிறுத்த நண்பன் ஐடியா சொன்னான். உடனடியாக ஜொயிண்ட் புகைப்பதை நிறுத்திவிட்டு சிகரெட் மட்டும் புகை. அதையும் நாளைக்கு ஒன்றாக எண்ணிக்கையை குறைத்துக்கொள் என்று அவன் சொன்னபடி செய்து கடைசியில் ஒரு நாளைக்கு ஒன்று என்று பத்திக்கொண்டிருந்தேன். அப்போது என் பிறந்தநாள் வந்தது. அதற்கு முதல்

தொடர்ச்சி... (பக்கம் -21 )

கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா, சுவாமியே சரணம் ஐயப்பா.



# கொழும்பு அளுத்மாவத்தை
# அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானம்

## 15வது வருட வருஷாபிஷேக
## கொடியேற்ற தீர்த்த (ஆராட்டு)

**நாளை மறுதினம் ஆடி மாதம் 11ம் நாள்**

## 27-07-2018 வெள்ளிக்கிழமை

**மாலை 5.30 மணிக்கு**

# கொடியேற்றம்!

**ஆடி மாதம் 11ஆம் நாள் (27-07-2018) வெள்ளிக்கிழமை கொடியேற்ற தினம் முதல்**
**ஆடி மாதம் 20ஆம் நாள் (05-08-2018) ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா வரையுள்ள நித்திய நிகழ்வுகள்...**

| | |
|---|---|
| 27-07-2018 வெள்ளிக்கிழமை | அன்று காலை 6.00 மணிக்கு மஹாகணபதி ஹோமம், அஷ்டாபிஷேகம், மாலை 5.30 மணிக்கு கொடியேற்றம் (துவஜ ஆரோகணம்) |
| 28-07-2018 சனிக்கிழமை | அன்று காலை 9.00 மணிக்கு மகா மிருத்யுஞ்ஜ ஹோமம், கலச அபிஷேகம். |
| 29-07-2018 ஞாயிற்றுக்கிழமை | அன்று காலை 8.00 மணிக்கு ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு கலச அபிஷேகம், **திருவிளக்கு பூஜையுடன் லட்சார்ச்சனை,** பகல் 1.00 மணிக்கு லட்சார்ச்சனை நிறைவு தீபாராதனை |
| 30-07-2018 திங்கட்கிழமை | அன்று காலை 9.00 மணிக்கு சுதர்ஷன ஹோமம், கலச அபிஷேகம். காலை 11.00 மணிக்கு ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு கலச அபிஷேகம். |
| 31-07-2018 செவ்வாய்க்கிழமை | அன்று காலை 9.00 மணிக்கு அன்னை மஞ்சமாதாவுக்கு விசேட அபிஷேக ஆராதனை. |
| 01-08-2018 புதன்கிழமை | அன்று காலை 9.00 மணிக்கு நாகராஜப் பிரபுவிற்கு அபிஷேக ஆராதனை, காலை 11.00 மணிக்கு ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு கலச அபிஷேகம். |
| 02-08-2018 வியாழக்கிழமை | அன்று காலை 9.00 மணிக்கு விசேட அஸ்ட திரவிய கலப அபிஷேகம |
| 03-08-2018 வெள்ளிக்கிழமை | அன்று காலை 9.00 மணிக்கு **கருப்பசாமி, கடுத்தசாமி விசேட அபிஷேக ஆராதனை.** இரவு 8.00 மணிக்கு ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு கலச அபிஷேகம் |
| 04-08-2018 சனிக்கிழமை | அன்று காலை 4.00 மணிக்கு கலச அபிஷேகம், பஞ்ச புண்ணிய யாகம், **பள்ளிவேட்டை திருவிழா,** இரவு 8.00 மணிக்கு சுவாமி பள்ளி அறை பூஜை |

**ஆடி மாதம் 20ஆம் நாள் (05-08-2018) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு**

# தேர்த்திருவிழா 2018

**ஸ்ரீ ஆனந்த ஐயப்ப சுவாமி சித்திரத்தேரில் திருவீதி உலா - தீர்த்தவாரி (ஆராட்டு)**

**அன்று காலை 3.00 மணிக்கு மஹா கணபதி ஹோமம், சுவாமி திருப்பள்ளி எழுச்சி, கலச அபிஷேகம், காலை 8.00 மணிக்கு சுவாமி சித்திரத்தேரில் எழுந்தருளி, திருவீதி உலா வந்து (அளுத்மாவத்தை வீதி வழியாக சென்று, காக்கைதீவு கடற்கரை சங்கமத்தில்) தீர்த்தவாரி (ஆராட்டு) நிகழ்வுடன் நிறைபெறவுள்ளது. மாலை 3.00 மணிக்கு கொடி இறக்கம் (துவஜ அவரோஹணம்)**

- கொடியேற்ற ஆராட்டு நிகழ்வுகள் யாவும் ஸ்ரீ ஆனந்த ஐயப்ப சுவாமியின் கிருபையால், சபரிமலை பரம்பரை அதிஉயர் தந்திரி மோகன் அவர்களாலும் மற்றும் ஆலய மேல் சாந்திகளினாலும் இனிதே நடைபெறும்.
- அடியார்கள் மேற்படி அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்து, அன்னதானம் எனும் தர்ம காரியத்தில் தங்கள் பங்களிப்பை வழங்கி, ஸ்ரீ ஆனந்த ஐயப்ப சுவாமியின் அருள் சித்திக்க வேண்டுகின்றோம்.
- மாதாந்தம் வரும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் சகலவிதமான மந்திர தந்திர உபாதைகள் நீங்க நடைபெறும் அதிவிசேட கருப்பசாமி பூஜையும், ராகு கேது மற்றும் காலசர்ப்ப தோஷம் விலகவும், திருமண பாக்கியம், நீடித்த மாங்கல்யம், குழந்தை பாக்கியம் பெற ஆயில்ய நட்சத்திரத்தில் நாகராஜா பூஜையும் நடைபெற்று வருகின்றது.
- கருப்பசாமியை குலதெய்வமாக வழிபடும் அனைத்து சமுதாய மக்களும் கருப்பசாமியின்அதிதேவதையான ஐயப்பசுவாமியின் ஆலயத்தில் அவருக்கு நடைபெறும் பூஜை மிகவும் உயர்ந்த கருப்பசாமி வழிபாடு ஆகும்.
- கொடியேற்ற திருவிழாவில் நடைபெறும் விஷேட மஞ்சல் மாதா பூஜை ஸ்ரீ ஐயப்ப சுவாமியின்ஆலயத்தில் அன்னை ஆதிபராசக்தியின் அம்சமாக வீற்றிருக்கும் அன்னையை வழிபட்டால் மாங்கல்ய பாக்கியமும், மாங்கல்ய நீடித்த நிலைப்பும் கிடைக்கப்பெறும்.

**கொடியேற்றம் முதல் சித்திரத்தேர் திருவிழா வரை நிகழ்வுகள் அனைத்தும் ஸ்ரீ ஆனந்த ஐயப்ப சுவாமியின் திருவருளால் மிகச்சிறப்பாக நடைபெறவிருப்பதால், ஆன்மீகப் பெருமக்கள் அனைவரும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு, ஸ்ரீ ஆனந்த ஐயப்ப சுவாமியின் திருவருள் பெற்றுய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றோம்.**

சுவாமியே சரணம் ஐயப்பா...
ROBINSON
Robinson (Pvt) Ltd
176, Main Street, Colombo 11. Tel: 2422565, 2433426

சுவாமியே சரணம் ஐயப்பா...
RAKSHANA
IMPORTS & EXPORTS (PVT) LTD
181, Modera Street, Colombo 15.
SUN GEM & JEWELLERY (PVT) LTD
180, N.H.M Abdhul Carder Mawatha, Colombo 11. Tel: 2330664

சுவாமியே சரணம் ஐயப்பா...
Aruna's Uniforms
# 26A, Reclamation Road, Colombo 11.
Tel: 011 2447799 Fax: 011 2334797 Mob: 0710 347799
E-mail: arunasuniforms@yahoo.com

சுவாமியே சரணம் ஐயப்பா...
G & G CARGO AGENCY
Customs House Agents
Clearing & Forwarding - Sea & Air Cargo Imports & Exports
Head Office: 19, 8th lane, Nawala, Rajagiriya.
Branch: 490/1-1/1, Aluthmawatha Road, Colombo 15.
T: 011 2553170, 011 2527922
M: 0777 365 059 E: gngcargo@yahoo.com

**அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானம்: 478/67, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு 15. தொலைபேசி: 011 2540292**
E-mail: allceylon5@gmail.com Web: www.allceylonananthaayypadevasthanam.com FB: allceylonananthaayypadevasthanam





# ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய

திராவிட மரபு முகபத்திர சிற்ப மகா இரத வெள்ளோட்ட
பெருவிழா கணபதிஹோம விஞ்ஞாபனம் - 2018

## தேர் வெள்ளோட்டம் : 27.07.2018

வெள்ளிக்கிழமை மாலை 4.33மணி




**விளம்பர அனுசரணை:**
**அமரர்கள் பொன். வேணுதாஸ் மற்றும்**
**ஜமுனாதேவி வேணுதாஸ்**
**குடும்பத்தினர்**

களனி கங்கைக்கு சமீபமாக இருக்கும் கிராண்ட்பாஸ் பிரதேசம் மூவின மக்களும் செறிந்துவாழும் இடம் என்று முன்னைய அங்கத்தில் தெரிவித்திருந்தோம்.

அயல்நாடான இந்தியாவிலிருந்து விஸா கெடுபிடிகள் இன்றி எவரும் வந்துசெல்லக்கூடிய ஒரு பொற்காலம் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் இருந்தது.

பிரிட்டிஷாரால் இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட தமிழ் மக்கள், மலையகத்தை செப்பனிட்டு தேயிலை, இரப்பர், கொக்கோ பயிரிடுவதற்கு பயன்படுத்தப்பட்டனர். இந்தியாவின் தென்பகுதியில் வாழ்ந்த தமிழர்கள், தெலுங்கர்கள், கன்னடர், மலையாளிகள் வேலைவாய்ப்புத்தேடி, கடல் மார்க்கமாக இலங்கை வந்து தலைமன்னாரிலிருந்து தலைநகரத்தில் வந்து குவிந்தனர். அதேபோன்று வட இந்தியாவிலிருந்து இஸ்லாமியரும், அவர்களது மதத்தை பின்பற்றும் பாய் சமூகத்தினரும் வரத்தொடங்கினர்.

இது இவ்விதமிருக்க, இந்தியாவிலிருந்து வருகை தந்த செட்டிமார், மற்றும் திருவிளங்க நகரத்தார் சமூகத்தினர், கொழும்பில் வர்த்தகம் செய்யத்தொடங்கினர்.

அவர்கள் நகைத்தொழில், வட்டிக்கு பணம் கொடுத்தல், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம், சைவ ஹோட்டல் உட்பட பல தொழில்களில் மூலதனமிட்டு பலருக்கும் வேலைவாய்ப்புகளை வழங்கினர்.

இவர்களில் திருவிளங்க நகரத்தார் சமூகத்தினர் நல்லெண்ணை வர்த்தகத்தில் பெரிதும் ஆர்வம் கொண்டிருந்ததுடன், ஆலயங்களை அமைப்பதிலும் முனைப்புடன் செயல்பட்டார்கள். அவர்களால் உருவாக்கப்பட்ட ஆலயங்கள், பேலியாகொடை, கிராண்ட்பாஸ் பண்டாரநாயக்க மாவத்தை, மருதானை கப்பித்தாவத்தை ஆகிய பிரதேசங்களில் எழுந்தருளத்தொடங்கின.

பேலியாகொடையில் பூபால விநாயகர் ஆலயம், பண்டாரநாயக்கா மாவத்தையில் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், கப்பித்தாவத்தையில் பாலசெல்வவிநாயகர் ஆலயம் , கைலாசநாதர் ஆலயம் என்பன அவர்களால் உருவாக்கப்பட்டன.



'மஞ்சள் குங்குமம்' படத்தில் ஒரு நகைச்சுவைக் கட்டம். மணிமேகலை, மஞ்சுளா, இந்திரா ரொசாரியோ பீரிஸ், சிலோன் சின்னையா ஆகியோர். (1970)

பதித்திருந்தவர்கள்.

அக்காலத்தில் கிங்ஸ்லி செல்லையாவை கொழும்பில் தெரியாத தமிழ் - முஸ்லிம் சமூகத்தவர்கள் இல்லை என்றுகூடச் சொல்லமுடியும். அவர்

நீர்கொழும்பூர் முத்துலிங்கம் உட்பட மற்றும் பலர் நடித்தனர்.

வர்த்தகர் நாராயண சாமி அவர்களுக்குச் சொந்தமான அம்பாள் கபே என்ற பெயரில் பல சைவ ஹோட்டல்கள் தலைநகரில் இயங்கின. இன்றும் அந்தப்பெயரில் கிராண்ட்பாஸ் வீதியும் ஆமர் வீதியும் சந்திக்கும் நாற்சந்தியில் ஒரு ஹோட்டல் பிரசித்தமாக இயங்கி வருவதை பார்த்திருப்பீர்கள். நாராயண சாமி அவர்களுக்கு கிருலப்பனையில் கல்பனா என்ற திரையரங்கும் இருந்தது.

அதனையும் 1983 கலவர காலத்தில் இனவாத தீய சக்திகள் எரித்து சாம்பராக்கிவிட்டன.

கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் வாழ்ந்த சவாஹிர் என்ற இசைக்கலைஞர் தமிழ் - சிங்களப்படங்களுக்கு பின்னணி இசை வழங்கியிருக்கிறார். அவரது

# நடந்தாய் வாழி களனி கங்கை ..... அங்கம் 11

## கிராண்ட்பாஸ் கலைஞர்களும் மஞ்சள் குங்குமம் திரைப்படமும்



அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு முதலில் புகலிடம் வழங்கிய பிரதேசம் களனி கங்கை தீரம்தான். கிராண்ட்பாஸில் தொடங்கப்பட்ட வீரகேசரி நிறுவனத்தில் பல இந்தியத் தமிழர்கள் வேலைவாய்ப்புப் பெற்றனர்.

அங்கு ஆசிரிய பீடம், நிருவாக பீடம், விநியோக - விளம்பரப்பிரிவு, அச்சுக்கோப்பாளர் பகுதி முதலானவற்றில் பெரும்பாலும் இந்தியத்தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது.

மகாகவி பாரதியாரின் நெருங்கிய நண்பரும், மகாத்மா காந்தி சென்னை வந்த சமயத்தில் வாயில் காப்போனாக நின்றவரும் எழுத்தாளருமான வ.ரா. ( வ.ராமசாமி அய்யங்கார்) அவர்களும் வீரகேசரி பத்திரிகையில் ஆரம்பகாலத்தில் ஆசிரியராக விளங்கியவர்தான். அவரைத்தொடர்ந்து அங்கு ஆசிரியர்களாக பணியாற்றிய கே.பி. ஹரன், கே.வி. எஸ். வாஸ் ஆகியோரும் பின்னாட்களில் வீரகேசரி நிறுவனத்தின் இயக்குநர் சபைகளில் அமர்ந்தவர்களும் இந்தியத்தமிழர்கள்தான்.

இது இவ்விதமிருக்க, நாட்டுக்கோட்டை செட்டிமாரால் மேலும் சில கோயில்கள், ஜிந்துப்பிட்டி, செட்டியார் தெரு, பம்பலப்பிட்டி ஆகிய பிரதேசங்களிலும் தோன்றின. அவை அனைத்திற்கும் தனித்தனிவரலாறு எழுதப்பட்டுள்ளது.

இஸ்லாமியர் தவிர்ந்த ஏனைய சமூகத்தவர்களின் நம்பிக்கைக்குரிய தெய்வங்களாக இந்த ஆலயங்களில் குடியிருந்தவர்கள் விளங்கினார்கள். இலங்கையின் முன்னாள் அதிபர் ரணசிங்க பிரேமதாச கப்பித்தாவத்தை பால செல்வவிநாயகர் ஆலயத்திற்கு அடிக்கடி சென்று தரிசனம் செய்பவர் என்பது குறிப்பிடத்தகுந்தது.

கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் பல தமிழ் முஸ்லிம் கலைஞர்களும் வாழ்ந்திருக்கின்றனர். குறிப்பாக கிங்ஸ்லி செல்லையா என்ற ஒளிப்படக்கலைஞர், இசைக்கலைஞர் சவாஹிர் ஆகியோர் திரைப்படத்துறையிலும் கால்

ஒரு சிறிய கெமராவுடன் பொது நிகழ்ச்சிகளில் படம் எடுத்து அதனையே முழுநேரத்தொழிலாகவும் மேற்கொண்டவர்.

எனினும் அவரிடம் மற்றும் ஒரு ஆற்றலும் இருந்தது. அதாவது திரையரங்குகளில் திரைப்படம் காண்பிக்கும் ஒப்பரேட்டர் தொழில். கிங்ஸ்லி படமாளிகையில் இந்தத்தொழிலை மேற்கொண்டவாறு, வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளுக்கும் படங்கள் எடுத்துக்கொடுத்தார்.

தமிழக சினிமாத்துறையினருடனும் அவருக்கு நெருக்கமான உறவு நீடித்தது. மக்கள் திலகம் எம். ஜீ.ஆர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உட்பட பல தமிழ்த்திரையுலக கலைஞர்கள் இலங்கை வருகை தந்த சந்தர்ப்பங்களில் கிங்ஸ்லி

ரஸஞானி

செல்லையா மிகவும் சுறுசுறுப்புடன் இயங்கி, உடனுக்குடன் படங்கள் எடுத்து தாமதிக்காமல் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு வழங்குவார்.

அத்துடன் அவருக்கு தலைநகரில் வாழ்ந்த நாடகக்கலைஞர்களுடனும் நட்புறவு நீடித்தது. அதனால் ஆனந்தா புரடக்ஷன் என்ற நாடகக் குழுவையும் அமைத்து, பல நாடகங்களை தயாரித்தார். இந்த அனுபவங்களின் ஊடாக மஞ்சள் குங்குமம் என்ற திரைப்படத்தையும் தயாரிக்க முன்வந்தார். மஞ்சள் குங்குமம் முதலில் நாடகமாக தலைநகரில் பல தடவை மேடையேறியிருக்கிறது. அவருடைய முயற்சிக்கு நிதியுதவி (Financier) வழங்கியவர் நாராயண சாமி என்ற வர்த்தகப்பிரமுகர். மஞ்சள் குங்குமம் 1970 இல் வெளியானது. இத்திரைப்படத்தில் எம். உதயகுமார், ஸ்ரீசங்கர், மைக் செபஸ்தியன், ஹெலன் குமாரி, சிலோன் சின்னையா, ஏ. நெயினார், ஏ. எஸ். ராஜா, எம்.வி. பாலன், மஞ்சுளா, ருத்ராணி, மணிமேகலை,

பின்னணி இசையில் இலங்கையில் வெளியான இரண்டாவது திரைப்படம்தான் தோட்டக்காரி. அதன்பின்னர் அவரது இசையமைப்பில் மீனவப்பெண் வெளியானது. அவர் கொழும்பில் மேடையேறிய பல தமிழ்நாடகங்களுக்கும் பின்னணி இசை வழங்கியிருக்கிறார்.

இவரது மகனும் இசைக்கலைஞராவார். தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் நடந்த பல இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்.

கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய திரையரங்கு ஜெஸ ீமா. தமிழ், சிங்கள, ஆங்கில, ஹிந்தி திரைப்படங்களை இங்கு பார்த்து ரசித்த மூத்த தலைமுறை சினிமா ரசிகர்களின் நினைவில் குறிப்பிட்ட ஜெஸீமா திரையரங்கு இன்றும் தங்கியிருக்கும்.

அங்கு காண்பிக்கப்பட்ட பகல் காட்சிகளில் ( முக்கியமாக காலை 10 மணிக்காட்சியில்) பெல்கனியில் சந்தித்து சல்லாபித்த இளம் காதலர்களாலும் அந்த ஜெஸீமா திரையரங்கினை இலகுவில் மறந்துவிட முடியாது.

அந்தக்காதலர்களின் மகிழ்ச்சி அந்த மெட்னி ஷோவுடன் கலைந்ததா? அல்லது திருமண பந்தம் வரையில் தொடர்ந்து, இல்லற வாழ்விற்கும் ஆதார சுருதியாக விளங்கியதா என்பது சம்பந்தப்பட்ட காதலர்களுக்கே வெளிச்சம்...!!

அவ்வாறு தலைநகர் வாழ் அந்தக்கால காதலர்களுக்கும் ரசிகப்பெருமக்களுக்கும் பல ஜனரஞ்சகப்படங்களை காண்பித்த ஜெஸீமா திரையரங்கும் இன்று இல்லை.

அந்த திரையரங்கின் பங்குதாரர்களில் ஒருவரான திருமதி ஜெஸீமா என்பவரும் ஒரு சம்பவத்தில் குத்திக்கொலை செய்யப்பட்டார். இத்தகைய துன்பியல் நிகழ்வையும் அந்த ஜெஸீமா திரையரங்கு தனது வரலாற்றில் பதிவுசெய்துள்ளது.

(தொடரும்)



# மூதாதையரின் காலடிகள்

## கட்டைபறிச்சான் அம்மன் நகர் அம்மச்சி அம்மனும் சோழர்கால சான்றுகளுடனான பரிகல வேள்வியும்

அம்மச்சி அம்மன் கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் சோழ மன்னர்களால் இங்கு கொண்டு வந்து நிலை நிறுத்தப்பட்டதாக நம்பப்படுகிறது. சோழ மன்னர்கள் தங்கள் படையெடுப்புகளின் போது காளியை வழிபட்டே வெற்றிகளைப் பெற்றதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. அந்த வகையிலேயே அம்மச்சி அம்மனும் இங்கு வந்திருக்க வேண்டும்.

அம்மச்சி அம்மன் அமைந்திருக்கும் இடம் இயற்கை வனப்பு மிக்க பிரதேசம். உலவியாகுளம், செட்டியாவெளி குளம், கயமொந்தான் குளம், கயல்கொடி மலை, பாண்டியாண்டி மலை, சுவாமி மலை என வரலாற்று பகைப்புலம் கொண்டதாய் உள்ளது. இப் பிரதேசம் முன்பு ஒரு சிறிய இராசதனி உடையதாய் இருந்திருப்பதற்கான சான்றுகள் உள்ளன.

உலாவியன் என்ற மன்னன் பற்றிய கர்ண பரம்பரை கதைகள் மக்கள் மத்தியில்



காணப்படுகின்றன. அதற்கு சான்றாக உலவியா குளமும் அதை அடியொற்றிய தொல்லியல் மூலம் கொண்ட இடங்களும், இப் பிரதேசத்தின் பழைமையைச் சொல்லி நிக்கின்றன.

அம்மச்சி அம்மன் வந்த வரலாறு பற்றி வேறொரு சுவாரஸ்யம்மிக்க கதையும் உள்ளது.

சோழர் காலத்தில் ஒரு கப்பலொன்றில் ஏழு சிலைகள் ஈழத்துக்கு கொண்டுவரப்பட்டதாகவும் அப்படி கொண்டு வந்தவர்களிடம் அம்மன் கனவில் தோன்றி நான் விரும்பும் இடங்களில் கப்பல் தானாகவே தரை தட்டும் அந்த இடங்களில் ஒவ்வொன்றாக இறக்கும் படியும், அப்படி செய்தால்தான் கப்பல் நகரும் என்றும் முதல் சிலை இலங்கைத்துறை முகத்துவாரத்திலும் மற்றயது கட்டைப்பறிச்சான் பகுதியிலும் இன்னொன்று கடற்கரைச்சேனை வட்டத்துக் கடற்கரையிலும் தரை தட்டியது.

அந்த சிலை தற்போது தம்பலகாமத்து கள்ளிமேட்டில் உள்ளது. சம்பூரில் இறக்கப்பட்டதே இன்றைய சம்பூர் பத்திரகாளியாகவும், அடுத்தது திருகோணமலை பத்திரகாளி என்றும் பறையனாலங்குளத்து எல்லைக் காவல் பத்திரகாளியும் இந்த கதையோடு சேர்ந்த ஒன்றே என கர்ண பரம்பரைக்கதைகள் கூறுகின்றன.

“அக்கினிச் சுடர்சடை வலக்கையில் வல்லயம்

அம்பு வில்லு மணி வீரவாழும்

தக்கநல் இடக்கையில் தந்தன உடுக்கையும்
தடுத்திடும் கேடயம் கடகமுமே
உக்கிரப் பார்வையும் ஓங்கிய சூலமும்
உன்னி மிதித்த திருவடியும்
அக்கிரமன் தலை ஏறிநின்றே காளி
அம்மச்சியம்மையே காவல் கொண்டாய்!““

கவிஞர் சுந்தரலிங்கம் சிவசங்கரன் தன் கவியில் இப்படி வர்ணித்திருக்கிறார்.

இச்சடங்கு பற்றிய பதிவொன்றில் கொட்டிய ஆரன் இப்படிக் குறிப்பிடுவார்

“ ஊர்கூடி பத்ததி முறையில் செய்யும் அம்மச்சியார் பரிகலவேள்வியில்;

மடைப்பெட்டி எடுப்பு அபிடேகம்
கன்னிக்கால் வெட்டலும் கூடாரங் கட்டலும்

தேவதைகளை வரவழைத்தல், கும்பங்கள் தாபித்தல், மடைபரவுதல்



தீக்கிடங்கு காவல் செய்தலும் தீ வளர்த்தலும், பொங்கல், பரிகலமடை, கன்னிமார்கள் வைத்தல், துள்ளுமா இடித்தல்

குளிர்த்திக்குடம் வைத்தல், படையலிடல், சுற்றுமடை வைத்தல், பூசைகள்,



சாமியாட்டம், தீ மிதிப்பு, பரிகலப்பூசை, பரிகலத்திற்கு அரிசி எறிதல், கன்னிமார்கள் பூசை, பக்தர்களுக்கு படையல் வழங்கல், குளிர்த்தி பாடல், கும்பம் சொரிதல் எனப் பல நிகழ்வுகள் நடைபெறும். கிராமிய சம்பிரதாயங்களின் குளிர்ச்சியும் தமிழர் பண்பாட்டு மணமும் காவியப்பாடல்களும் இறைவாசமும் குறைவின்றி வீசும். அம்மச்சியாரின் பரிகலவேள்வி, எனது மண்ணின் தனித்துவமான ஓர் தெய்வீக அடையாளமாகும்“,



இலங்கையில் அம்மச்சி அம்மன் வழிபாட்டு சடங்கு இங்கு மட்டுமே உள்ளது.

இங்குள்ள சிலை பல்லவர்காலக் கடைசிக் கூறுக்கான தொல்லியல் பண்பு வாய்ந்ததாக உள்ளது. கிட்டத்தட்ட ஆயிரத்தி நூறு வருசங்கள் கடந்ததாக இருக்க வேண்டும்.

பன்னெடுங்கால பழமையான மரபு சார்ந்த நம்பிக்கைகளோடு இது இணைந்துள்ளது. பத்ததி முறையிலான பரிகல வேள்வி முறை இங்கு கையாளப் படுகிறது. இது இப்பிரதேசத்தின் தனித்துவமான பண்பாட்டு அடையாளமாகும்.

ஏழு கன்னிமார் நம்பிக்கை கரையல் கொடுத்தல் என்பன இங்கு சிறப்பம்சங்களாகும்.

தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் துர்க்கையை அம்மச்சி அம்மனாக வழிபடும் மரபு காணப்படுகிறது.

தமிழ் நாட்டில் மதுரை அருகில் கோயில் பாப்ப குடியூர் சோனைக் கர்ப்பண்ணாசாமி கோயில் உள்ளது. மூன்று நாள் திருவிழாவில் முதல்நாள் அம்மச்சி அம்மன் திருவிழாவாக கொண்டாடப்படுகிறது.

பால.சுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசாரப் புலம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

நாமக்கல் அடுத்த சின்னமுதலைப்பட்டியில், மற்றொரு அம்மச்சி அம்மன் கோவில் உள்ளது.

மதுரை சென்னகரம்பட்டியிலும் ஒரு அம்மச்சியம்மன் கோயில் பற்றிய செய்திகள் உள்ளன.

தமிழ் நாட்டில் அரச மரம் அம்மச்சி மரம் என அழைக்கப்படுகிறது.

கேரளாவில் மூத்த பெண்கள் தெய்வத் தன்மையுள்ள பெண்களை அம்மச்சி என அழைக்கும் மரபு காணப்படுகிறது.

கேரளாவில் கொல்லத்தில் அம்மச்சி வீடு என்னும் கோயில் உள்ளது. வெறும் பீடத்தை மட்டுமே வைத்து வழிபடுகின்றனர். அந்த பீடம் மகிசாசூரமர்த்தினி பீடமாக போற்றப் படுகிறது

(அம்மச்சி அம்மன் பரிகல வேள்வி கடந்த 25.07.2018 புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.)

# தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

# திருக்குறள் இன்பம்

திருக்குறள் ஓர் அறிவு நூல் மட்டுமல்ல, ஒப்பற்ற இலக்கிய நூலும் கூட. தெய்வப் புலவர் திருவள்ளுவர் எவ்வளவு நுண்ணிய கருத்துக்களை அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் கூறியுள்ளாரோ அவற்றைப்போலவே காமத்துப்பாலிலே மக்களின் உள்ளத்து உணர்வுகளை அப்படியே படம்பிடித்துக்காட்டியுள்ளார். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே எழுகின்ற காதல் உணர்வுகள், களிப்பூட்டும் உறவுகள், ஊடல் சலனங்கள், பிரிவுத் துயரங்கள், என்பவற்றைப் பற்றியெல்லாம் துல்லியமாகக் காமத்துப்பாலிலே எடுத்தியம்பியுள்ளார்.

முப்பாலில் மூன்றாவதாக வருகின்ற காமத்துப்பால் எனப்படுகின்ற இன்பத்துப்பால் முழுவதுமே அகத்திணை சார்ந்த இணையற்றதோர் இலக்கியமாகவே திகழ்கின்றது.

அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் வள்ளுவர் கூறுகின்ற அறக்கருத்துக்களும், அறிவுக்கருத்துக்களும் எவ்வாறு, காலத்தைக்கடந்து, தேசத்தைக் கடந்து, மொழியைக்கடந்து, இன வேறுபாடுகளைக் கடந்து எக்காலத்திற்கும், எந்த நாட்டினருக்கும், எந்த மொழியைப் பேசுகின்றவர்களுக்கும், பொருந்துவனவாக உள்ளனவோ அவ்வாறே, இன்பத்துப்பாலில் அவர் இலக்கணமிட்டுள்ள இலக்கியக் காட்சிகள் உலகத்தவர்கள் எல்லோருக்கும் எப்போதும் பொருந்துவனவாகவே உள்ளன.

அத்தகைய இலக்கியக் காட்சிகளையொத்த நிகழ்வுகள் நம் ஒவ்வொருவரதும் வாழ்விலே நடந்திருக்கலாம், இனிமேலும் நடக்கவிருக்கலாம். அவற்றில் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ள உணர்வலைகள் நம் ஒவ்வொருவரதும் உள்ளத்திலும் எழுந்திருக்கலாம், முட்டிமோதியிருக்கலாம், இனிமேலும் அப்படியெல்லாம் நடக்கலாம்.

அவ்வாறாக உள்ளங்களில் எழுகின்ற அற்புதமான உணர்வுகளை தெள்ளத் தெளிவாக உள்ளபடி உணர்த்துகின்ற திருக்குறள் தரும் இன்பத்தைச் சுவைத்துப் பருகும் வாய்ப்பை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதே குறள் இன்பம் கட்டுரையின் நோக்கமாகும். சரி, இப்பொழுது ஒரு குறளைப் பார்ப்போம்.

அது மங்கையா? மயிலா?
அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ?
கனங்குழை மாதர்கொல்? மாலுமென்
நெஞ்சு(1081)

காமத்துப்பாலில் முதலாவது இயல் களவியல். களவியலின் முதலாவது அதிகாரமான "தகை அணங்கு உறுத்தல்" என்ற அதிகாரத்தின் முதலாவது குறள் இது.

அதாவது, காமத்தப்பாலின் முதலாவது குறளே இதுதான்.

ஒருவன் வாழ்விலே எத்தனையோ பெண்களைக் காணுகின்றான். அவர்களில் ஒருத்தியைத் தனக்குத் தகுதியானவள், பொருத்தமானவள் என்று நினைக்கின்றான். அந்தப் பெண்ணை தான் அடையவேண்டுமே என்ற ஆர்வம் அவனது உள்ளத்தை உறுத்தும். அவ்வாறு தகைமையான பெண்ணை அடையவேண்டும் என்ற ஆர்வம் ஒருவனுக்கு நெஞ்சிலே உறுத்துகின்ற உணர்வுகளை எடுத்துக்கூறுவதால் இந்த அதிகாரத்திற்கு தகை-அணங்கு-உறுத்தல் என்பது பெயராயிற்று.

ஓரிடத்தில் பலபெண்கள் கூடியிருக்கிறார்கள். அங்கு வந்த ஒருவன் அவர்களைக் காண்கின்றான். அவர்களில் ஒருத்தி அவனது மனதை வெகுவாகக் கவர்ந்துவிடுகின்றாள். ஒரு பெண்ணை ஒருவனுக்குப் பிடித்துவிட்டால் அவனது உள்ளம் முழுவதையும் அவள் ஆக்கிரமித்து விடுவாள். அவனது எண்ணமெல்லாம் அவளைச் சுற்றிச் சுற்றியே வரும். இதயம் அவளது பெயரைச் சொல்லிச் சொல்லியே துடிக்கும். அவளின் கண்கள் தன்னையே தேடித்தேடி அங்கும் இங்கும் பார்ப்பதுபோல அவனுக்குத் தோன்றும். குறுகுறுத்தபடி அங்குமிங்கும் பார்க்கின்ற அவளின் கண்கள் மானின் கண்களைப்போல அவனுக்குத் தென்படும். அவளை மானே என்பான். அவளின் நடையிலே அவன் தனியழகைக் காண்பான். அது அன்னத்தின் நடைபோல அவனுக்குத் தோன்றும். அவளை அன்னமே என்பான். அசையாமல் அவள் நிற்கும்போது வண்ணப்பளிங்கினால் வடிவமைத்த சிலைபோல அவனுக்குத் தோன்றும். அழகுச் சிலையே என்பான். ஓரப்பார்வையால் அவள் ஒயிலாகப் பார்ப்பது அவனுக்கு ஓவியம்போலத் தோன்றும். வண்ணச் சித்திரமே என்பான். அவள் என்ன நிறமாக இருந்தாலும் அவனுக்குத் தங்க நிறமாகவே தோன்றுவாள். என் தங்கமே என்பான். அவளது கூந்தல் மயிலின் தோகைபோல அவனுக்குத் தோன்றும். அழகு மயிலே என்பான்.

அவ்வாறே, இங்கே தன் இதயம் கவர்ந்தவளைளைச் சுற்றவர எத்தனையோ அழகிய பெண்கள் இருந்தும்கூட அத்தனை பேரிலும் அவளே அவனுக்குப் பேரழகியாகத் தெரிகிறாள். மற்றெல்லோரையும் விட அவளிடம் மாற்றம் ஒன்று அவனுக்குத் தென்படுகின்றது. ஏனையவர்கள் எல்லோருமே வெறும் மானிடப் பிறவிகள் போலவும், அவள் மட்டும் தேவலோகத்தில் இருந்து தனக்காகவே வந்து பிறந்தவள் எனவும் அவனுக்குத் தோன்றுகிறது. அவளைப் பார்க்கும் ஒவ்வொரு கணமும் அவளின் ஒவ்வொரு அசைவும் அவனுக்கு மோகத்தைத் தருகிறது. அவளது உடலின் ஒவ்வொரு பாகமும் அவனுக்குத் தாகத்தைத் தருகிறது.

அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ?
கனங்குழை மாதர்கொல்?
மாலும்என் நெஞ்சு

இதன் நேரடிக் கருத்து: அதோ அங்கே நிற்கின்ற பெண் தேவலோகப் பெண்ணா? தோகை இல்லாத மயிலா? அழகிய கூந்தலையுடைய பெண்ணா? கண்டவுடனேயே என் உள்ளம் மயங்கித் தடுமாறுகிறதே!

காதலியின் பார்வை உயிரைக் குடிக்கும்!

அழகிய பெண்களைக் கண்டால் ஆண்களுக்கு ஆசைவருவது பொதுவானது. ஆனால் அந்த ஆசை பலவிதமானது. ஆசை நேர்மையற்றதாக இருந்தால், ஒழுக்கத்திற்குப் புறம்பானதாக இருந்தால் அது தவறு. அதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் ஆசை என்று இல்லாவிட்டாலும், இன்னும் ஒருதடவை அந்தப் பெண்ணைப் பார்க்கவேண்டும் என்றோ, அல்லது தொடர்ந்து பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும் என்றோ தோன்றலாம். அவ்வாறு ஒருவன் ஒரு பெண்ணைப்பார்க்கும்போது அவனை, அவள் ஒருமுறை, ஒரேயொருமுறை முறைத்துப் பார்த்துவிட்டால் உடனேயே அவன் நிலைகுலைந்து விடுவான். அதுவே சுட்டெரிக்கும் பார்வையாக இருந்துவிட்டாலோ அவன் பயந்து விடுவான். அவ்விடத்தைவிட்டு அகன்று விடுவான். தன்னை ஒருவன் ஆசையாகப் பார்ப்பதை அல்லது தன் அழகை இரசிப்பதை விரும்பாத ஒரு பெண் தன் பார்வையாலேயே அவனைத் திக்குமுக்காடச் செய்துவிடுவாள்.

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

பார்த்தவனுக்கு வேர்த்துவிடும். அந்த அளவுக்குப் பெண்ணின் பார்வைக்குப் பலம் உண்டு. இதனை எடுத்துக்கூறும் வள்ளுவரின் வாய்மொழி என்ன தெரியுமா?

நோக்கினாள் நோக்கு எதிர்
நோக்குதல் தாக்கு அணங்கு
தானைக் கொண்டன்னது உடைத்து
(1082)

காமத்துப்பாலில், களவியலில், தகை அணங்கு உறுத்தல் என்ற அதிகாரத்தில் இரண்டாவதாக வருகின்ற குறள் இது.

அவளைப் பார்த்துக்கொண்டு நின்ற என்னை அவள் பார்த்தாள். எனது பார்வைக்கு எதிராக அவள் பார்த்த அந்தப் பதில் பார்வை, நம்மை வருத்துவதற்கு வருகின்ற தேவலோகப் பெண்ணொருத்தி, பெரும்படையைத் திரட்டிக்கொண்டு வந்து பயமுறுத்துவது போல இருந்தது என்பது இந்தக் குறளின் கருத்து. அவளிடமிருந்து அவனைநோக்கி வெளிப்பட்ட அந்தப் பார்வையானது ஒரு பெரும்படை அவனை நோக்கி தாக்க வருவதைப் போன்ற அச்சத்தைத் தருகிறது.

இந்தப் பார்வை விரும்பாத ஒருவனை வெறுப்போடு பார்க்கின்ற கோபப் பார்வை. ஆனால் தன்னை விரும்பிப் பார்க்கின்ற ஒருவனை ஒரு பெண் விருப்போடு பார்க்கின்ற காதல் பார்வையை ஆண்மகனால் தாங்கிக்கொள்ள முடியாமல் இருப்பதையே இந்தக்குறள் சொல்லுவதாகக்கூட பொருளாகக் கொள்ளலாம்.

தேவலோகப் பெண்களின் கண்கள் இமைப்பதில்லை. எனவே விழித்த விழி பார்த்தவாறு, அவள் எதிர்ப்பார்வை பார்க்கிறாள் என்பது உணர்த்தப்படுகிறது. அந்தப்பார்வையின் அகோரம் வெறுமனே ஒரு பெண்பார்ப்பதைப்போலல்லாது, ஒரு பெரும்படையே எதிர்த்துவருவதற்கு ஒப்பானதாக உள்ளது.

இடம், பொருள், ஏவல் எதையும் கருதாமல் நடந்துகொள்ளும் தனது விருப்பத்திற்குரிய காதலனை ஒருத்தி பார்க்கும் பார்வையாகவும் இதனைக் கொள்ளலாம்.

இத்தகைய நிலைமையை வள்ளுவப் பெருந்தகை இன்னும் சிலகுறள்களிலேயும் கோடிட்டுக்காட்டியுள்ளார்.

பண்டு அறியேன் கூற்று என்பதனை
இனி அறிந்தேன்
பெண்தகையால் பேரஅமர்க் கட்டு
(1083)

இன்றுவரை நான் கூற்றுவனை நேரில் பார்த்ததில்லை. கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்று, பார்த்துவிட்டேன். அது பெண்தன்மையுடன், மிகப்பெரிய போரைத்தொடுக்கவல்ல கண்களைக் கொண்டது என்பது இக்குறளின் பொருள்.

பெண்ணின் பார்வையை உயிர்குடிக்க வரும் இயமனுக்கு ஒப்பிடும் இக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுவது என்ன? காதல்வயப்பட்ட பெண்யொருத்தியின் காதல் பார்வையானது காதலனையே விழுங்கிவிடுவதுபோல இருக்கும். அவ்வளவு சக்தி காதலுக்கு உண்டு என்பதுதான்.

ஆனால் அதேவேளை, விரும்பாத பெண்ணானால், தன்னை அடையும் எண்ணத்துடன் பார்க்கும் ஒருவனை நோக்கி அவள் வீசும் கோபப் பார்வை கூற்றுவனது வருகைக்கு ஒப்பானது. அவனுக்கு உயிரைப் பறிக்கும் அச்சத்தை உண்டுபண்ணக்கூடியதாக அது இருக்கும் என்றும் பொருள் கொள்ளலாம். இதே கருத்தினை ஆதரித்து இதற்கு அடுத்ததாக வருகின்ற குறள் இன்னும் வலிதாகச் சொல்கிறது. அதையும் பார்ப்போம்.

கண்டார் உயிர்உண்ணும்
தோற்றந்தான் பெண்தகைப்
பேதைக்கு அமர்த்தன கண்
(1084)

தன்னைக்காணுகின்ற ஆண்களின் உயிரையே குடித்துவிடக் கூடிய ஆற்றல்வாய்ந்தவைதான் இந்தப் பெண்ணுக்கு அமைந்திருக்கும் கண்கள் என்பது இந்தக் குறளின் பொருள்.

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம் இம் மூன்றும் உடைத்து
(1085)

என்னை விழுங்கிவிடுவதைப்போலப் பார்க்கும் இந்தப் பெண்ணினுடைய கண்கள், இயமனின் விழிகளா? அல்லது சும்மா பார்க்கும் விழிகள்தானா? அச்சம் கொண்டமைப்போல அடிக்கடி மருட்சிகொள்வதால் மான்விழிகளா? இந்த மூன்றுவகையையும் உடையனவாயிருக்கின்றனவே என்பத

தொடர்ச்சி... (பக்கம் -23 )

**தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.**





புலயவெளி பேச்சியம்மன் ஆலய கணனி கற்கை நிலையம்
தகவல் தொழில் நுட்பத்துறையில் காலடி எடுத்து வைப்பவர்களுக்கான கணனி பயிற்சி
COURSES
INFORMATION AND COMMUNICATION TECHNOLOGY
தொடர்புகளுக்கு : 0771516203
அனைத்து வயதினருக்குமான படிப்படியான நேரடிப் பயிற்சி நெறி
ஆர்வம் உள்ளவர்களுக்கு மாத்திரம்



(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

# தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய வரலாறும், வழிபாடும்



மீனினங்கள் கவிபாடும் மட்டக்களப்பின் நெற்களஞ்சியமாம் படுவான்கரையில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஒரு எல்லையிலும்; கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து 10 மைல் கல் தொலைவில் அமையப்பெற்றுள்ள இடமே தாந்தாமலை அங்கு எழுந்தருளி, அருள் மழை சொரியும் முருகப் பெருமானின் கோயில் வரலாறு தொன்மை வாய்ந்தது.

இவ்வாலயத்தின் வரலாறு கூத்திகன் - சேனன், உலகநாச்சி, ஆடகசௌந்தரி, குளக்கோட்டன், ஆகியோருடன் தொடர்பு பட்டு நிற்பதை வரலாற்றுச் சான்றுகளும், கர்ணபரம்பரைகதைகளும் சான்று பகிர்கின்றது. ஆதியில் ஆதிதிராவிடர்களின் மரவழிபாட்டுடன் தொடர்புடையதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் வழிபாடும் திறந்த வெளிக்கோயிலாக தாந்தாமலையும் இருந்ததாக கர்ண பரம்பரைகதைகளுடாக அறியமுடிகின்றது. தாந்தாமலையின் உச்சியில் சிலந்தி மரம் ஒன்றும் அதனடியில் பிள்ளையார் ஒன்றும் இருந்தன என்பதை அறியக் கூடியதாகவுள்ளதோடு கதிர்காம யாத்திரியர்களின் வழிபாட்டு தலமாக தாந்தாமலை இருந்துள்ளது.

ஆடகசௌந்தரி தனது ஆட்சி காலத்தில் தாந்தாமலை ஆலயத்தை தரிசித்ததாகவும் மாளிகை அமைத்து தங்கியும் இருந்ததாகவும் கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றது இதற்குச் சான்றாக இன்றும் இராசதானி அமைந்திருந்த தடயங்களும் கற்றூண்களும் மற்றும் சிற்பவேலைப்பாடுகள் சிதைந்து அழிந்த கற்களும் காணக்கிடக்கின்றன. இப்பிரதேசத்தில் அதிகளவான மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர். அதனடிப்படையில் மழை இல்லாத காலத்தில் மலைப்பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பூசை செய்தால் மழை பொழியும். இதில் இன்புற்ற வரலாறுகள் உள்ளதுடன் அது இன்றும் வழக்கத்தில் உள்ளதை காணமுடிகின்றது.

1956க்கு பின் தாந்தாமலை வழிபாடு

----------------------------------------------------------------

1956ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தால் தமிழ் மக்களால் பாரம்பரியமாக வழிபட்டு வந்த கதிர்காமத்தீர்த்த யாத்திரை பெரும் சங்கடத்தையும், தடையையும் கண்டது. இதனால் கதிர்காமக் கந்தனை தாந்தாமலையில் கண்டு வழிப்பட்டதாகவும் கூறப்படுவதாடு இன்னோர் பக்கம் தாந்தாமலை ஆலயம் கவனிப்பார் அற்று காடு சூழ்ந்து இருந்தபோது அங்கிருந்த கட்டிடங்களும் வழிபாட்டு இடங்களும் அழிந்திருந்தன. அத்தோடு வழிபாடு இல்லாமல் இருந்த

பட்டிப்பளை நிருபர்

சூழ்நிலையில் முனைக்காட்டினைச் சேர்ந்த கா.பாலிப்போடியார் எனும் அன்பருக்கு கனவிலே தோன்றிய முருகப் பெருமான் தாந்தாமலை எனும் இடத்தில் அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் தான் அமைந்திருப்பதாகவும் அந்த காட்டை வெளியாக்கி துப்பரவு செய்து, ஆடித்தீர்தோற்சவத்தை செய்யுமாறும் கூறி மறைந்தாரம்.

இத்தகையதொரு நிலையில் தான் தாந்தாமலை காட்டினை முனைக்காட்டுக் கிராமத்தைச் சேர்ந்த க.மாமங்கபிள்ளை, கு.வ.சின்னத்தம்பி, கா.பாலிப்போடி வைத்தியர், தா.பிள்ளையாப்போடி, பெ.பொன்னம்பலம், சீ.பூபாலபிள்ளை, முதலைக்குடாவைச் சேர்ந்த வ.வி. வெ.கனகசபைப்போடி ஆகிய அன்பர்கள் காட்டினை வெட்டி வெளியாக்கினார்கள் அதனைத் தொடர்ந்து மகிழடித்தீவைச் சேர்ந்த அன்பர்களான வே.உ.குமாரசிங்கம், கதிரவேலாப்போடி, ந.கனகசபை ஆகியோரும் அப்பணியில் இணைந்திருக்கின்றனர். அதன் பின் தொடர்ச்சியாக திருவிழாக்கள் இன்றுவரை நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றன. தாந்தாமலையை சாந்தமலை, தாண்டவகிரி, பொக்கிசமலை என்றும் அழைப்பர்.

ஆலய அமைப்பு

----------------------------------------------------------------

ஆலயம் ஆரம்ப காலத்தில் மலைக் கோயிலாகவும் பின்னர் கொத்துப்பந்தலாகவும் அமைந்திருக்கின்றது. பின்னர் அக்கால ஆலயங்கள் அழிந்தன. பிற்பாடு மலையடிவாரத்தில் முருகன் ஆலயம் அமைக்கப்பட்டது. அதனை சுற்றி நாகதம்பிரான் ஆலயம், தெய்வானை அம்மன் ஆலயம், விஸ்ணு ஆலயம், வள்ளியம்மன்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# உறக்கம் வராத சுடலைமாடன் கதை–1

## மலையக மக்களின் வழிபாடுகளில் ஒன்று



சுடலை மாடன் வில்லுப்பாட்டுப் பார்க்க அன்று பின்னேரம் என்னை அதிபர் ராஜகோபால் வேனில் காகல மடவல டிவிசன் நலந்தன்ன எனும் மலைக்கு அழைத்துச் சென்றார். பின்னேர இளவெயில் சூழ, மலைகள் வளைந்து வளைந்து செல்லும் மலைப்பாதையூடாகச் சென்ற வேன் ஓரிடத்தில் நின்றது. நின்ற இடத்திலிருந்து மேல் நோக்கிச்சென்ற படிக்கட்டுகளுடே ஏறிச் சென்று மிகச் சிறிய ஒரு கோவிலை அடைந்தோம். என் கைபிடித்து மேலே கவனமாக அழைத்துச் செல்ல மாணவர்கள் ஆயத்தமாக நின்றனர். “நானும் உங்களைபோன்ற ஒருத்தன் தானடா“என்று கூறிவிட்டு படிகளில் மள மள என ஏறி மேலே கோவில் இருந்த திசைக்குச் சென்றேன். மாணவர்கள் நான் கீழே விழுந்து விடக் கூடாது என்ற அக்கறையுடன் என் பின்னால் வந்தனர், என்னை விழ விடாத மாணவர்கள். அக்கோவில் ஒரு பெரிய அகன்ற வாகை மரத்தின் கீழ் அமைந்திருந்தது. அக்கிராமச் சனங்கள் எங்களை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். கோவில் விக்கிரகங்களாகக் கன்னங்கரேல் என்ற இரு உருவங்கள் இருந்தன. அது ஒரு மாடசாமி கோவில். கோவிலின் முன் வில்லுப்பாட்டுக்குரிய



ஒரு பெரிய வில் இருந்தது. எங்களுக்கு வணக்கமுரைத்தார்கள் வில்லுப்பாட்டுப் பாடப்போகும் பாடகர்களும் வாத்தியக் காரர்களும். முதலில் கோவிலுக்கு அழைத்துச் சென்றார்கள்; திருநீறு, சந்தணம் வழங்கப்பட்டது.

“சுடலைமாடன் பிணம் தின்னும் ஒரு தெய்வம். சுடலைக்குச் சென்று புதிய பிணங்களைத் தோண்டியெடுத்து அப்பிணங்களின் உடலைப் பிழந்து பிணத்தின் குடலை மாலையாகப் போட்டபடியும், பிணத்தின் உள்ளுறுப்புகளைச் சாப்பிட்டுக்கொண்டும் வந்து தன்னை அது மக்கள் மத்தியில் நிரூபித்துக்கொள்ளும்“ என ஒருத்தர் கூறினார்.

“21 வகையான மாடன்கள் இருக்கிறார்கள்“ என்று சுடலை மாடன் பற்றி எனக்கு விளக்கம் அளித்தார். என்னருகில் இருந்த இன்னொரு பெரியவர்“ பல மாடன்கள் உண்டு சப்பாணி மாடன், நொண்டிமாடன், சுடலைமாடன் என மாடன் வகையியினை ஒரு பட்டியல் தந்தார் இன்னொரு பெரியவர்.

“முன்னாளில் எங்களின் இந்த ஊரில் மாடன் திருவிழா ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்துக்கு முன் ஒரு பிணம் கட்டாயம் விழும் அப்புதுப் பிணத்தின் குடலைத்தான் மாலையாகப் போட்டுக்கொண்டும் பிணத்தின் உள்ளுறுபுக்களைச் சாப்பிட்டுக்கொண்டும் மாடசாமி இக்கோவிலுக்கு வருவார்“என்றார்“ இன்னொருவர். “மாடனை இந்த மடச் சனங்கள் அன்று கேள்வி கேட்கப்போய் இந்த ஊருக்கு ஒரு பெரும் கொள்ளை வந்தது. நிறையச் சனம் செத்தது. பின் தமது தவறை உணர்ந்து மக்கள் மாடசாமியிடம் மக்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள, அப்பெரும் கோள்ளை நோய் நீங்கியது“ என்று இன்னொருவர் கூறினார். “பின்னாளில் மக்கள் பக்தியுடன் மாடசாமியிடம் பிணத்தின் குடலை மாலையாகப் போட்டுக் கொண்டு வருவதைக்காணப் பெண்களும் பிளைகளும் பயங் கொள்கிறார்கள், எனவே பிணத்தின் குடலோடு வர வேண்டாம் என வேண்ட பிணத்திற்குப்பதிலாக மாடசாமி கோழியின் குடலை போட்டுக்கொண்டு வருவதும், கோழியின் உள்ளுறுப்புகளைச் சாப்பிட்டுக்கொண்டு வருவதும் வழக்கமாயிற்று“என்றார் இன்னொருவர்.

மாடசாமிபற்றி மக்கள் நம்பிக்கையின் புற உரு இவ்வாறு எனக்கு அவர்களால் தரப்பட்டது. அச்சாமி பற்றி எனக்குள்ளும் ஒரு படிமம் உருவாகியது.

மாடசாமி வில்லிசைக் குழு பற்றியும் என்னைப்பற்றியும் ஒரு அறிமுக உரையினை ராஜகோபாலும் அங்கிருந்த ஒருவரும் நிகழ்த்தினர். வில்லுக்கு பக்தியோடு தூப தீபம் காட்டப்பட்டு, அதுவும் ஒரு



தெய்வநிலையில் வைத்துப் பூஜிக்கப் பட்டது. பங்கு கொள்ளும் அனைவருக்கும்




வில்லுப்பாட்டுக்குழுத் தலைவர் திருநீற்றை நெற்றியில் இட்டார். பக்தியோடு அவர்கள் அதனைப் பெற்றுக்கொண்டனர். நம்பிக்கையும், பக்தியுமே அங்கு மேலோங்கி நின்றது. மதம் என்பது நமிபிக்கைதானே வில்லிசைக் குழுவினர் பெரிய வில்லைச் சுற்றி அமர்ந்தனர். உடுக்கடிக் கலைஞர்கள் இருவர், குடம் வாசிபோர் ஒருவர், தபேலா வாசிக்க ஒருவர், பிரதான பாட்டுக்காரர், அவருடன் பாடப் பக்கப்பாட்டுக்காரர்கள் சிலர் என ஒரு பெரும் குழாம். சுடலை மாடன் கதை வில்லுப்பாட்டு ஆரம்பமாகியது. பிரதான கதை சொல்லி மருதை என்பவரின் குரல் ஓங்கி ஒலித்தது. பாக்கியநாதன் என்பவர் தன் முழு உடலையும் அசைத்து அசைத்து ஆடியபடி உடுக்கு அடித்தார். 14 பேர் வில்லைச் சூழ அமர்ந்திருந்து பக்கப்பாட்டுப்பாடினர். பிரதான பாடகர் பாட இவர்கள்

ஆம் ஐயா,ஆம் ஐயா என்று தொடர் குரல் எழுப்பினர்.

அனைவரின் இணைவும் குரல் ஓசையும், உடுக்கு ஒலியும், பாடல் மெட்டும் ஒருவித லய உணர்வைத் தந்து கொண்டிருந்தன. அந்த லயத்துக்குள் நாம் அனைவரும் ஈர்க்கப் பட்டோம். எமது உடல்களும் தாள லயத்துக்கு அசைந்தன. திடீரென ஒருவருக்கு பெரும் உரு வந்து விட்டது. இரண்டு கைகளையும் தரையில் அடித்து புரண்டு தவழ்ந்து ஆடியபடி அவர் கோவிகுக்குள் சென்று மாடசாமி உடை அணிந்து, வெளியில் வைத்திருந்த மணிகட்டிய பெரும் தண்டமொன்றைக் கையில் எடுத்துக்கொண்டு, நீண்ட சாட்டைக் கயிறொன்றைத் தனது தோழைச் சுற்றிப் போட்டுக்கொண்டு, தாளத்துக்கு ஏற்ப காலடி வைத்து ஆடியபடி கோவில் வீதியில் கம்பீர நடை பயில ஆரம்பித்தார்

(இன்னும் வரும்)

**சிறுநீரகம் தேவை**

மட்டக்களப்பு நகரில் வசிக்கும், 42 வயதுடைய ஆண் சிறுநீரக பாதிப்பினை எதிர்கொண்டுள்ளார். அவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபருக்கு ஓ(O+) இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகமொன்றை வழங்கக்கூடிய நபரிடமிருந்து உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு : 0771837646



# காலனித்துவக் கடல் கொண்ட சுதேசிய வாழ்வறிவை அகழ்வு செய்த ஒரு மாநாடு

## சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் சர்வதேச ஆராய்ச்சி மகாநாடு 2018




இன்றைய உலகத்தில் மூன்றாம் உலக அரசுகள் அல்லது வளர்முக அரசுகள் என அழைக்கப்படும் அரசுகளும், தேசங்களும் பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து மேற்கு ஐரோப்பிய நாடுகளின் காலனித்துவ ஆக்கிரமிப்பிற்குள் அகப்பட்டு அக்காலனித்துவம் வடிவமைத்து வலிந்து திணித்த முறைமைகளால் பல்வேறு தாக்கங்களை எதிர்கொண்டு முன்னேறுவதில் இடர்படும் தேசங்களாக இயங்கி வருகின்றன.

காலனித்துவத்தின் இறுதி இலக்கு காலனித்துவ ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்படும் தேசங்கள் யாவற்றையும் ஒற்றைத் தன்மையுள்ள நுகர்வுப் பண்பாட்டிற்குரியவைகளாக மாற்றுதலே ஆகும். பழைய காலனித்துவம் நுகர்வுப் பண்பாட்டிற்கான அடித்தளத்தை வடிவமைத்து அதனை முன்னெடுத்த நிலையில் இன்றைய நவ காலனித்துவம் ஏகாதிபத்திய வணிகத்தை முன்னிறுத்தி அதனை மேலும் வளர்த்துச் செல்லும் நோக்குடன் இயக்கம் பெற்று வருகின்றது.

இத்தகைய உலகச் சூழலில் வளர்முக அரசுகளிலும், தேசங்களிலும் காலனித்துவம் வடிவமைத்த நுகர்வுப் பண்பாட்டிற்கு இட்டுச் செல்லும் கட்டமைப்புக்களை மாற்றியமைத்து காலனித்துவ நீக்கம்

து. கௌரீஸ்வரன்

பெற்ற புதிய சுயசார்புப் பண்பாடுகளை மீளுருவாக்கம் செய்யும் முயற்சிகள் உலகந் தழுவி முன்னெடுக்கப்பட்டு வருவதனைக் காண முடிகின்றது.

மாற்றுக் கலாசாரச் செயற்பாட்டாளர்கள், பெண்ணிலைவாதிகள், விளிம்பு நிலைச் சமூகங்களின் விடுதலைக்காக இயங்கும் செயற்பாட்டாளர்கள், பழங்குடியினங்களின் நலன்களுக்கான செயற்பாட்டாளர்கள், சூழலியலாளர்கள் எனப் பல்வேறு நிலைகளில் காலனித்துவச் சிந்தனைகளிலிருந்து விடுதலை பெறும் நோக்கில் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் தனியாகவும், குழுக்களாகவும், அமைப்புக்களாகவும் உலகந்தழுவி இயக்கம் பெற்று வருகின்றன.

இந்த வகையில் காலனித்துவச் சிந்தனைகளின் ஆக்கிரமிப்பிலிருந்து எமது சுதேசிய வாழ்வறிவை மீட்டெடுத்து, புதிய சவால்களை எதிர்கொள்ளத்தக்க வகையில் மீளுருவாக்கம் செய்வதற்கான ஆய்வு அறிவு அனுபவங்களைப் பகிர்ந்து ஆக்கபூர்வமாகக் காரியங்களை முன்னெடுப்பதற்கான சர்வதேச ஆய்வு மாநாடாக கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் ஆய்வு மகாநாடு மூன்றாவது தடவையாக நடந்தேறியுள்ளது.

கடந்த 15 ஆந் திகதி தொடக்கம் 18 ஆந் திகதி வரை மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலுள்ள அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நடைபெற்ற மூன்றாவது ஆய்வு மாநாட்டின் தொனிப் பொருள் “உள்ளூர் அறிவு முறைகள் மற்றும் தொட்டுணராப் பண்பாட்டின் மரபுரிமைகளைப் பிரதானப்படுத்துவதன் முக்கியத்துவம்“ என்பதாக இருந்தது. இம்மாநாட்டில் உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வறிவாளர்கள் பலர் பங்குபற்றித் தமது ஆய்வறிவு அனுபவங்களைச் சிறப்பாகப் பகிர்ந்தார்கள்.

“தமிழர் தத்துவ மரபுகளும் அழகியல் மரபுகளும்“, “தமிழர் ஆடல் மரபுகள்“, “தமிழர் இசை மரபுகள்“, “தமிழர் இசைக் கருவி மரபுகள்“, “தமிழர் மரபுக் கல்வி முறைமைகள்“, “கதைகள், கதைப் பாடல்கள், சமூக அசைவியக்கம்“, “தமிழர் அரங்க மரபுகள்“, “பண்பாட்டு மரபுரிமை, உள்ளூர்த் தொழில் முனைவுக்கூடாக இயற்கைச் சாயம்“, “அருகி வரும் வெண்கலப் பாவனைப் பொருட்களின் சமூக அரசியலும் அழகியலும்“, “கலைகளும் உளவியலும்“, “ஊடகவியல்“, “விழாக்களும் அரசியலும்“, “சமூக மாற்றத்துக்கான அரங்காகக் கூத்து மீளுருவாக்கம்“, “உணவுசார் வழக்காறுகளும் உள்ளூர் அறிவுச் செயற்பாடுகளும்“, “கலைகளும் விளிம்பு நிலைப்படுத்துதலும்“, “உள்ளூர் கலை முறைமைகளும் தொழில் முனைவோரும்“, “பொன்னர் சங்கர். மகிடி ஆற்றுகைகளும் சமூக உறவுகளும்“, “கலைகளின் ஆற்றுப்படுத்தும் வகிபாகம்“, “ உள்ளூர் கட்டுமானக் கலை மரபுகள்“, “இசையும் இயங்கு நிலைகளும்“, “மொழி பெயர்ப்பின் அரசியல்“,எனும் இருபத்தி மூன்று தலைப்புக்களின் கீழ் இருபத்தி மூன்று அமர்வுகளாக இந்த ஆய்வறிவு ஆற்றுகை நடைபெற்றது.

இவ்வமர்வுகளை பேராசிரியர் இ.முத்தையா, பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் தயா சோமசுந்தரம், பேராசிரியர்.சி.ரவீந்திரன், பேராசிரியர் எலிசபெத் ஹேமன், பேராசிரியர் செ.யோகராசா, பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் வ.மகேஸ்வரன், கலாநிதி ஜெகநாதன் அரங்கராஜ், கலாநிதி. சி.ஜெயசங்கர், கலாநிதி வ.இன்பமோகன், கலாநிதி ரகுராம், கலாநிதி கிரன் ஹிறிவல், திருமதி வாசுகி ஜெயசங்கர், வைத்திய கலாநிதி ஜூடி ஜெயக்குமார், கலாநிதி சாந்தினி ஆகிய ஆய்வறிவாளர்கள் தலைமையேற்று நெறிப்படுத்தியிருந்தார்கள். 140 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த ஆய்வரங்கானது புள்ளிகளுக்காக ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தல் என்பதற்கும் அப்பால் சமூக அக்கறையுடன் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை மையப்படுத்திய ஆய்வறிவு ஆற்றுகை அரங்காக அமைந்திருந்தது. மிகப் பெரும்பாலான ஆய்வு முன் வைப்புக்கள் இந்த வகையில் அமைந்திருந்தமையினைக் காண முடிந்தது. அதாவது சமூக அக்கறையுடன் காலனித்துவ மனோபாவங்களிலிருந்து விலகி மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு எண்ணக்கருவாக்கமும், கோட்பாட்டுருவாக்கமும் வழங்கும் நோக்கத்துடன் பல ஆய்வுகள் முன் வைக்கப்பட்டிருந்தன. காலனித்துவச் சிந்தனைகளின் பிடியிலிருந்து விடுதலை பெறுவதற்கு அடிப்படையாக உள்ளூர்க் கண்டுபிடிப்புக்களுக்கு எண்ணக்கருவாக்கமும், கோட்பாட்டுருவாக்கமும் வழங்க வேண்டியது அவசியமாகும் இதனைச் சாத்தியமாக்க முனையும் அர்த்தமுள்ள ஆய்வு மாநாடாக இது முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்த ஆய்வு மாநாட்டின் மற்றொரு முக்கியத்துவம் அது ஒழுங்கமைக்கப்பட்டிருந்த முறைமை மற்றும் அதில் பரிமாறப்பட்ட பொருட்கள், உணவு முதலியவையாகும்.
நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சி.ஜெயசங்கரின் தலைமையில் கல்விசார் உத்தியோகத்தர்களும், கல்விசாரா பணியாளர்களும், மாணவர்களும் நேர்த்தியான பொறி முறையுடன் கூடிய வேலைத்திட்டத்தினூடாக கச்சிதமாக இயங்கினார்கள்.

இங்கு பரிமாறப்பட்ட உணவு வகைகள் அனைத்தும் உள்ளூர் உணவு முறைமையினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மாநாட்டில் பங்கு கொண்டவர்களுக்கு வழங்கப்பட்ட பயன்பாட்டுப் பொருட்கள் குறிப்பாக புத்தகப் பை, கோவை, ஆய்வாளர்களுக்கான அடையாளப்படுத்தல் முதலியன யாவும் சூழலுக்கு நட்பான, உள்ளூர்ப் பண்பாட்டையும் கலைத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் ஆய்வு மாநாட்டின் தொனிப்பொருளைச் சாத்தியப்படுத்தும் வகையிலான முன்னுதாரணமான செயற்பாடுகளாகவே ஒழுங்கமைப்பும் பொருட்களின் பயன்படுத்துகையும் அமைந்திருந்தது.

உலகத் தமிழ் அறிஞர்களுள் ஒருவரான சுவாமி விபுலானந்தர் பன்மொழி ஆற்றல் மிக்கவர், கணிதத்தில் மீத்திறன் பெற்றவர், கலைகளில் அக்கறை செலுத்தியவர் இத்தகைய தனது வித்துவங்களைத் தமிழப் பண்பாட்டின் முற்போக்கான செழுமைக்காகப் பயன்படுத்தியவர் அத்தகைய பேராளுமையின் பெயரில் உள்ள அழகியற் கற்கைகள் நிறுவகம் அதன் வரலாற்றில் சுவாமியவர்களின் ஆய்வறிவுத் தேடல்களுக்கும் அவர் முன்னெடுத்த செயற்பாடுகளுக்கும் உரிய கௌரவத்தையும், மாண்பையும் வழங்கும் விதத்தில் மூன்று சர்வதேச ஆய்வு மாநாடுகளைச் சிறந்த திட்டமிடல் ஒழுங்கமைப்புடனும், உலகத் தரத்திலான ஆய்வறிவு அனுபவங்களுடனும் நடத்தியுள்ளமை பெருமைக்கும் பாராட்டிற்கும் உரியதாகின்றது.


# கடுகுக்கதை

## அணைந்து போன செருக்கு

ஓர் ஓலைக்குடிசையில் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. அருகே ஒரு வாளியில் தண்ணீர் நிறைந்திருந்தது. “என்னைப்பார்.... என் அழகைப்பார்“ என்று கர்வத்தோடு கலகலவென்று சிரித்துக்கொண்டு சொன்னது தீ. “பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றேன் நண்பா“ என்று சலசலத்தது நீர்.

“நான் இல்லாமல் இந்த மனிதர்களால் ஒன்றும் செய்ய முடியாது. நான் இல்லையேல் அவர்கள் இல்லை“ என்றது தீ.

‘மேலும் உணவை சமைக்கவும், சூடான தேனீரை பருகவும், உலோகங்களை வளைக்கவும், நகைகளைச் செய்யவும், ஏன்? புகையிரதத்தை ஓட்டுவதற்கும் நான் தேவை. என் உதவி இல்லாவிட்டால் மனிதர்களால் உயிர்வாழ முடியாது. நான்தான் அவர்களுக்கெல்லாம்“



“ஆமாம் நீ சொல்வதெல்லாம் உண்மை“ என்று ஏலாவாளி போல் ஆமோதித்தது நிறைவாளியாக இருந்த வாளித் தண்ணீர்.

அப்போது..

பலமான காற்று வீசியது. காற்றில் சிறு தீப்பொறி பறந்து ஓலைக்குடிசையின் மீது பட்டது. சடுதியாக குடிசை தீப்பற்றியது.

தரையில் அமர்ந்தபடி வலை பின்னிக்கொண்டிருந்த குடிசையின் சொந்தக்காரரான மீனவன் அமிர்தநாயகம் தலையில் அடித்தபடி, தன் குடிசை எரிவதைக் கண்டு, மறுகணம் இருந்த இடத்தை விட்டு எழுந்து, பக்கத்தில் இருந்த நீர் நிறைந்த வாளியை எடுத்து எரிந்துகொண்டிருந்த குடிசையின்மேல் கூற்றினான்.

தீ மெல்ல மெல்ல அணைந்தது. “ம்“ என்ற முனகல் சத்தம் தீயிடம் இருந்து வந்து கொண்டிருந்தது.

“நெருப்பே! மனிதர்களுக்கு எல்லாமே நான்தான் என்றாய் அல்லவா? உன்னிடமிருந்து அவனையும் அவனது உடமைகளையும் காப்பாற்றியது தண்ணீராகிய நான் அல்லவா?“

“உன்னை எரியவிடாமல் தடுக்கும் சக்தியும், உன்னை அணைக்கும் சக்தியும் எனக்கிருக்கிறது. என்பது இப்போதாவது உனக்கு புரிகிறதா?“ கேட்டுவைத்தது எஞ்சியிருந்த வாழித்தண்ணீர்.



“ஆம்“ என்ற சத்தத்தோடு தீயின் கர்வமும் சேர்ந்து அணைந்து போனது.

**கலகலத்த நெருப்பின் செருக்கு**
**சலசலத்த நீரினால் தணிப்பு**
**வல்லவனுக்கு வல்லவனின் இருப்பு**
**வைகத்தில் உண்டென்பதே படிப்பு**

# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ் :

*புதிய கலை, இலக்கிய, ஊடகத்துறை மாணவர் பரம்பரையை உருவாக்கவேண்டியவர்!*

----------------------------------------------------------------

பல்கலைக்கழகங்களில் பயின்று பட்டங்கள் பெற்று, பின்னர் பல்கலைக்கழகங்களிலேயே தொழில் வாய்ப்பு பெற்று மாணவர்களுக்கு விரிவுரையாற்றிவரும் எழுத்தாளர்கள் பலரை நன்கறிவேன்.

அவர்களில் பலர் கலை, இலக்கியவாதிகளாகவும் விமர்சகர்களாகவும் திறனாய்வாளர்களாகவும் திகழ்கின்றனர். அவ்வாறு நான் அறிந்த ஒருவர்தான் (கலாநிதி) அம்மன்கிளி முருகதாஸ்.

1983 தொடக்கத்தில் எமது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பாரதி நூற்றாண்டு விழாக்களை நாடுதழுவிய ரீதியில் கொண்டாடிய வேளையில் தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் எம்மிடம் அம்மன்கிளி பற்றி குறிப்பிட்டார்.

ராஜம் கிருஷ்ணனின் படைப்புகளை ஆய்வு செய்திருக்கும் அம்மன்கிளி முருகதாஸ் அவர்களை முதல் முதலில் 2005 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கிழக்கு பல்கலைக்கழகத்தில்தான் சந்தித்தேன்.

அச்சமயம் அவர் அங்கு தமிழ்த்துறையில் விரிவுரையாளராக பணியிலிருந்தார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தமிழை சிறப்புப்பாடமாகப்பயின்று தனது இளங்கலை, முதுகலை கலாநிதிப்பட்டங்களை பெற்றவர். இவரது பல்கலைக்கழக ஆசான்கள் இவரை இலக்கிய திறனாய்வாளராக்கி பெருமை பெற்றவர்கள்.

பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மாணவியான இவர், தனது ஆசான் எழுதிய Drama in Ancient Tamil Society என்னும் ஆய்வு நூலை தமிழாக்கம் செய்தவர். இந்நூலுக்கு, தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறையினால் பிறமொழிகளில் இருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள் எனும் வரிசையில் பரிசு கிடைத்துள்ளது.

இந்தத் தகவலை இன்றைய தலைமுறை பல்கலைக்கழக மாணவர்களுக்கு சுட்டிக்காண்பிக்க விரும்புகின்றோம்.

சமகாலத்தில் பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறையில் பயிலும் மாணவர்களுக்கு சமகால இலக்கியம் குறித்தோ, தற்பொழுது வெளியாகும் இலக்கிய இதழ்கள் பற்றியோ எதுவுமே தெரியாத ஒருவகை சூனியம் தென்படுவதாக பரவலாகப் பேசப்படுகிறது.

சில வருடங்களுக்கு முன்னர் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு சென்று தமிழ்த்துறையைச் சேர்ந்த மாணவர்களுடன் கலந்துரையாடியபோதும் குறிப்பிட்ட தேக்கநிலை சூனியமாகவே எனக்கு தென்பட்டது.

அங்கிருந்த ஒரு பேராசிரியர் கவலையுடனும் ஏமாற்றத்துடனும் தெரிவித்த செய்தியால் சற்று அதிர்ச்சியடைந்தேன்.

அங்குள்ள நூலகத்தில், ரவீந்திரநாத் தாகூர் பற்றிய தகவல்களை மேலதிகமாகத் தெரிந்துகொள்வதற்குச் சென்று, அவர் பற்றிய ஒரு நூலை எடுத்துப்பார்த்தாராம்.

குறிப்பிட்ட நூலை சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் யாரோ ஒரு மாணவர் எடுத்துச்சென்று மீண்டும் ஒப்படைத்திருக்கும் திகதிகள் பதிவாகியிருந்ததாம்....!!! அதாவது சுமார் 25 வருடகாலமாக அந்த நூல் அங்கிருந்து நகரவேயில்லை என்பதுதான் இதிலிருக்கும்




அதிர்ச்சியான செய்தி.

ஒரு காலகட்டத்தில் பல தமிழ் மாணவர்கள், இலங்கை பல்கலைக்கழகங்களிலிருந்து எழுத்தாளர்களாக, விமர்சகர்களாக, கலைஞர்களாக, ஊடகவியலாளர்களாக வெளியேறி குறிப்பிட்ட துறைகளில் பிரகாசித்து தமிழுக்கும் சமூகத்திற்கும் வளம் சேர்த்திருக்கிறார்கள்.

அவ்வாறு வளம் சேர்த்தவர்களில் குறிப்பிடத்தகுந்த ஒருவர்தான் அம்மன்கிளி முருகதாஸ்.

கிழக்குப்பல்கலைக்கழகத்தில் பயின்ற சில மாணவர்களின் குடும்பத்தினர் 2004 ஆம் ஆண்டு இறுதியில் கிழக்கை பெரிதும் பாதித்த சுநாமி கடல் கோள் அநர்த்தத்தின் பாதிக்கப்பட்டிருந்தனர். குறிப்பிட்ட மாணவர்களை சந்திப்பதற்காக அவுஸ்திரேலியாவில் இயங்கும் எமது இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் சார்பில் சென்றிருந்தேன்.

அச்சமயம் அங்கு விரிவுரையாற்றிக்




கொண்டிருந்த அம்மன்கிளி முருகதாஸ் அவர்கள், என்னை அழைத்து, புலம் பெயர்ந்தோர் இலக்கியம் என்னும் தலைப்பில் உரையாற்றச் சொன்னார்.

மற்றும் ஒரு சந்தர்ப்பத்தில் 2011 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நாம் கொழும்பில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு நடத்திய காலப்பகுதியில், மட்டக்களப் பிற்கும் பயணமாகியிருந்தோம். அவ் வேளையிலும் குறிப்பிட்ட மாநாட்டின் நோக்கம் பற்றிய உரையை தமது மாணவர்களுக்காக நிகழ்த்துமாறும் அழைத்திருந்தார்.

அவர், தான் யாழ். பல்கலைக்கழகத்தில் தனது விரிவுரையாளர்களினாலும் பேராசிரியர்களினாலும் எவ்வாறு வழிநடத்தப்பட்டாரோ அவ்வாறே சமகாலத்தில் தன்னிடம் பயிலும் மாணவர்களும் வழிநடத்தப்பட வேண்டும் என்ற சிந்தனை வயப்பட்டவராக எமக்குத் தென்பட்டார். சில மாணவர்கள் கொழும்புக்கு வருகை தந்து எமது மாநாட்டின் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டனர்.

அம்மன்கிளி அவர்கள், ஈழத்து தமிழ் நாடக அரங்கப் பாரம்பரியம், சங்கக் கவிதையாக்கம் - மரபும் மாற்றமும் பண்டைய தமிழ்ச்சமூகத்தில் நாடகம் முதலான நூல்களையும் வரவாக்கியிருப்பவர். தாலாட்டுப்பாடல்கள் பற்றியும் ஆய்வுகளை எழுதியவர்.

பெண்களும் வர்க்கமும் தொடர்பாக சங்க இலக்கியங்களை மையமாகக்கொண்ட ஆய்வுகளை மேற்கொண்டிருக்கும் அம்மன்கிளி முருகதாஸ் யாழ்ப்பாணம் அல்வாயிலிருந்து வெளியாகும் ஜீவநதி இதழில் மகாகவி பாரதியையும் விரிவாக

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

ஆய்வு செய்துள்ளார்.

ஜீவநதியில் இவர் எழுதியிருக்கும் 1950 வரையான காலகட்டத்து நவீன தமிழ்க் கவிதை என்னும் ஆய்வு குறிப்பிடத்தகுந்தது. பாரதியை ஆராயப்புகுமிடத்து, நவீன கவிதை பற்றிய இவரது அறிமுகம் இவ்வாறு தொடங்குகிறது:

" எமக்குக்கிடைத்துள்ள தமிழிலக்கியம் ஏறத்தாழ இரண்டாயிரத்து இருநூறு வருடப்பழைமை வாய்ந்தது. இந்த நீண்ட காலப்பிரிவில் தோன்றிய இலக்கியங்களுள் தொண்ணூறு வீதமானவை கவிதைகளே. இக்கவிதைகளிற் பெரும்பாலானவை அரசரையும் பிரபுக்களையும் கடவுளரையும் பொருளாகக் கொண்டு அரசவைகளிலும் கோயில்களிலும் பாடப்பட்டவையாகும்.

தமிழ்நாட்டில் பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சமூக அரசியற் பின்னடைவு அதைச் சந்தர்ப்பமாகக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிய மேனாட்டதிகாரம் போன்றன தமிழ்நாட்டு வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தின.

இந்தியாவை ஆங்கிலேயர் ஆட்சி செய்வதை அடியோடு வெறுத்தவர். தன்னாட்டுச் செல்வங்களை வெள்ளையர் கொண்டு செல்வதைப் பார்த்து உள்ளம் கொதித்தவர். அன்றைய இந்திய விடுதலைப் போராளிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர். கப்பலோட்டிய தமிழன் எனப் பேசப்பட்ட வ.உ.சி - சுப்பிரமணிய சிவா போன்றோர் அவரது நெருங்கிய நண்பர்களாவர். பாரதியின் கவிதைகள் தன்கால சமூகத்தின் மீதுள்ள கோபம் ஆத்திரம் அன்பு போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. எந்த நேரத்திலும் தன் நாட்டின் கீர்த்தி பற்றியே அவர் சிந்தித்தார். காளிதேவியிடம் வரம் வேண்டும் போது கூட நாட்டைப் பற்றியே சிந்தித்தார். அதற்காகத் தான் உழைக்க வேண்டும் எனக் கருதினார்.

அவர் சொன்னபடியே தன் கவிதைகளை இயற்றத் தொடங்கினார். அதனால் அவர் நவீன கவிதையின் முன்னோடியானார்.

தன்னால் இயற்றப்பட்ட கவிதைகளால் தமிழுக்குப் புதிய வளம் சேர்ந்ததென கூறியுள்ளார். இவ்வாறு பாரதியைப்போன்று ஈழத்திலும் கவிஞர்கள் தன்னம்பிக்கையுடன் எழுதவேண்டும் என்பதே அம்மன்கிளி முருகதாஸின் எண்ணம் என்பதையும் ஜீவநதியில் வெளியான குறிப்பிட்ட ஆக்கம் கூறி நிற்கிறது.

அம்மன் கிளி அவர்களிடம் ஒரு பாரிய பொறுப்பு இருப்பதாகவே கருதுகின்றோம். தம்மிடம் கற்கும் மாணவர்களிடம் கலை, இலக்கியப்பிரக்ஞையையும் வாசிப்பு பழக்கத்தையும் அவர் ஏற்படுத்துவதற்கு மேலும் தீவிரமாக இயங்கவேண்டும்.

இந்தப்பதிவு வெளியாகும் கிழக்கிலிருந்து வரும் "அரங்கம்" வார இதழ் பற்றிய அறிமுகத்தை பல்கலைக்கழக தமிழ்த்துறை மாணவர்களிடம் ஏற்படுத்தல் வேண்டும். எதிர்கால ஈழத்து தமிழ் கலை, இலக்கிய, ஊடகத்துறைக்கு அம்மன்கிளி போன்று பலர் அறிமுகமாக வேண்டும். அம்மன்கிளி முருகதாஸ் அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

(தொடரும்)

## வடக்குக் கிழக்கின் பிரச்சினைகள் என்ன?

தொடர்ச்சி...

இதைத் தீர்ப்பதற்கான எந்த வகையான நம்பிக்கை அளிக்கும் முயற்சிகளும் இல்லை.

நாளைய நிலைமை இதைவிட வடக்கிலும் "யாழ்ப்பாணம் – வன்னி" என இன்னும் வேற்றுமைகள் உருவாகக் கூடிய சாத்தியங்களே அதிகமாகத் தெரிகின்றன. இதெல்லாம் தமிழர்கள் "ஒற்றுமை, ஓரணியில் திரள்வோம்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே நிகழ்ந்தன. நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

அப்படியென்றால், இந்த ஒற்றுமைக் குரலுக்குரிய பெறுமானம் என்ன?

இதுவரையான ஒற்றுமைக்கோரிக்கையும் ஒற்றுமைக்குரலும் சாதித்தது என்ன?

இந்தக் கேள்விகளுக்கான விடையைக் காண்பது தமிழர் அரசியலின் அடுத்த கட்டத்துக்குரிய தவிர்க்க முடியாத பணியாகும்.



# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 22

இந்தப்பதைப்புக் கெல்லாம் அவன்ர பாசமான கவனிப்பும் கண்டிப்பான வழிநடத்தலுந்தான் காரணம்; "அய்யோ அண்ணா " எண்டு கதறவும் வழியில்லாம கிடக்குது. அப்பிடியே ஒரு இடத்தை தெரிவு செய்து அவனை அடக்கம் பண்ணின பிறகுதான் பாத்தா இன்னும் ரெண்டு பேர் சோந்து படுத்திருக்கிறாங்கள். என்னடா வயித்தால போகுது, சத்தியும். கூடவே போன வைத்தியன் ஒருத்தன் ஓடிப்போய் எல்லாரையும் எச்சரிக்கிறான்.

"வந்திருக்கிறது "கொலரா"போல இருக்கு. வருத்தக்காறரோட மற்றாக்கள் கலந்து இருக்க வேண்டாம்" எண்டவன் யோசிச்சான். தடுப்பு மருந்தும் கிடையாது. வெளியில தகவல் அனுப்பி அங்கயிருந்து ஆக்கள் முடிவெடுத்து வாற வரைக்கும் மற்றவைக்கும் பரவாம இருக்கோணுமே. கிருமியளுக்கு பயந்து அந்த இடத்தை கைவிட்டிட்டு மாறி வேறடம் போகயுக்க பொம்பிளைப்பிள்ளையளும் ரெண்டு பேர் வயித்தால போகுதெண்டு சொல்லிச்சினம். எல்லாப்பிள்ளையளயும் கூப்பிட்டு விருந்து வைச்சு அனுப்பின அம்மாவின்ர மகள் நிரோஜா முதல்பலியாகினாள்.

கலையும் வசந்தியும் மலவாசலை படுகட்டையில வைச்சு நெரிச்சுப்பாக்கினம். ஆனா கீழால போறது நிக்கயில்லை. இதுக்குள்ள மருத்துவப்போராளி கையிருப்பில கிடந்த வயிற்றோட்டத்துக்கான மாத்திரைகளை எல்லாருக்கும் குடுத்தான். சாப்பாடுமில்லாம கழிஞ்ச ரெண்டுநாளும் முடியப்போற நேரம் அவை ஒரு சேத்து வயலடிக்கு வந்திட்டினம். நடக்க முடியாத அளவில பாதிக்கப்பட்டவைய சாக்கில தடியத்திணிச்சு படுக்கை செய்து ஆரம்பிச்சிட்டுதுகள். மருத்துவப்போராளி எதுவும் செய்ய மாட்டாம நிண்டான். கொணந்து போட்டதிலும் ரெண்டு பேர் உயிரை விட்டிருந்தினம். .

ஒருவழியா தகவல் வந்துட்டுது எல்லாரையும் உடனடியா திரும்பி வரச்சொல்லி.

பின்ன என்ன கூப்பிடுதூரந்தானே கடந்து வந்தது. எப்பிடி திரும்பப்போறம் எண்டதிலதான் எல்லாருக்கும் கவலை. ஆனா நல்ல வேளையா கட்டவுட் போட்டு எல்லாரையும் படகில திரும்ப ஏற்பாடு செய்தாச்சு. கடக்கரைக்கு வரக்கதான் இன்னொரு செய்தி கேள்விப்பட்டினம் மன்னார் மாவட்டத்தில "கொலரா" பரவிவருதெண்டு. எட மன்னார் எங்க முள்ளியவளை எங்க, ஆனா விசயத்தை பெரிசா வெளியால கசியவிடாம உள்ளுக்கயே ஒரு டீம் கூட போகுது. இப்ப இவைக்கு இன்னொரு கண்டம் மழைநாள் துவங்கி எங்கயோ பெய்த மழை வெருகலாத்தில வெள்ளத்தை கொணந்திட்டுது. மூதூருக்கு வந்து காட்டுக்காயளையும். திண்டிட்டு கிடைச்ச மீனுகளை அவரவரே பிடிச்சு சுட்டுத்தின்னவும் போதிய நேரத்தை ஆமி குடுத்திருந்தான். அதாவது அவை கடக்கவேண்டிய பெருவீதியில அவங்கட பிழக்கம் இருந்துது. அதால காட்டுக்க பம்மிக்கிடந்திட்டினம்.

வெருகலாத்தில பயங்கரமா முதலையள் சுத்தி திரியும். ரெண்டு கயித்தைமரத்துக்கு மேலால ஓடி...அதில ஓண்டப்பிடிச்சுக்கொண்டு மற்றதை




**தமிழ்க்கவி**

அவன்ர கவலை அவனுக்கு வெளியால போய் உயரமான மரத்தில ஏறி, யாகி கட்டி தகவலை அனுப்பிற்று காத்திருக்கினம். தகவல் வர தாமதமாகுது.

ஆனா கொலரா தாமதிக்கயில்லை பொழுதுபட்ட கொஞ்சநேரத்துக்க மூண்டு பெடியள் சரிஞ்சிட்டாங்கள். (ஸ்ட்ரெச்சர்) மற்றாக்கள் தூக்கிக் கொண்டு நடக்கினம். அவயளாலயும் முடியேல்ல. சேத்து வயல்ல தண்ணியக்கண்டதுதான் தாமதம், அந்த சேத்திலயே தூக்கிக் கொணந்தவையப்போட்டிட்டு பாஞ்சுபோய் அந்தசேத்துதண்ணியக் குடிக்க அடக்கிவைச்சிட்டு விடுதலைப்புலியள் மருத்துவப்பிரிவு மளமளண்டு வேலையில இறங்கிச்சு.

திரும்பிவந்தவைய தனிப்படுத்தி வைத்தியம் செய்ததோட அவை இஞ்ச இருக்கேக்க பிழங்கின முகாமெல்லாம் சீல் வச்சிட்டினம்; நானும் அதுக்குள்ள அடக்கம். உடனடியா எங்களுக்கெல்லாம் தடுப்புமருந்து தந்ததோட கேற்றுக்கு வெளியால போகவோ வெளியால இருந்து ஆரும் உள்ளுக்கு வரவோ தடை போட்டாச்சு. வைத்திசாலையிலயிருந்து ஒருவர் தினசரி வந்து எல்லாரும் சரியா இருக்கினமோ எண்டு விபரம் எடுப்பார்.

சரியா எங்களுக்கு பத்துநாள் தடை மன்னார் மட்டுமில்ல தமிழீழப்பகுதி முழுதுமே "கொலரா" அழிக்கப்பட்டுது. உலகமே பாராட்டினதுதான், அதுக்குமுதல் பதின்மூன்று போராளியள் இதில சாவடைஞ்சுபோனது வருத்தமான செய்தி.

இந்த மட்டக்களப்பு டீம் மறுபடியும் பயணம் செய்யத்தானே வேணும். ஒரு ரெண்டு மாதம் ஓய்வில போட்டிட்டு பயண ஏற்பாடுகள் தொடங்கி மறபடியும் நடக்க ஆரம்பிச்சபோது திருக்கணாமலைக்கும் காலுக்கை மிதிச்சு கடக்கவேணும் கீழ முதலை வாயப்பிழந்து கொண்டு இவையத் துரத்தும் அதைப்பாராம கடக்க வேணும். இது பயிற்சிபெற்ற போராளியள் எண்டதால போச்சு. ஆனா அங்கயிருந்து புதிய போராளியள கொண்டரேக்க, முதலைவாயில தடுக்கிவிழுந்த சம்பவம் ஒண்டுமிருக்கு. மட்டக்களப்பில பயிற்சியெடுத்து அங்கயே போராடாம இஞ்ச வந்த சில பெண் போராளியளின்ர நோக்கம் வேற எதிர்பார்ப்புகள் வேற அதை அவையளே சொல்லியிருக்கினம்.

"நாங்கள் இப்பிடி ஒரு நகரம் இருக்கு இங்க கார் பஸ் எல்லாம் ஓடுது. நீங்கல்லாம் சைக்கிள ஓடுறீங்க. இப்பிடி ஒரு வசதியான மக்கள் நிறைய உள்ள இடத்தை இஞ்ச வந்துதான் கண்டன்" என்று வியந்த சாரதா. திரும்பவும் மட்டக்களப்புக்கு போகவே மாட்டன் எண்டாள். சொன்னது போலவே அவள் இங்கேயே ஒருவரை காதலித்து கலியாணம் செய்துகொண்டாள். அதை பிறகு பாப்பம்.

## சிறுகதை

தொடர்ச்சி...

நாள் என்னை சந்தித்த அவன் நாளை நீ முக்கியமான முடிவை எடுக்க வேண்டும். என்ன என்று நான் கேட்கவும் சிகரெட்டை இனி தொடுவதில்லை என்று உறுதி எடுக்க வேண்டும் என்றான்'

கதை சுவாரஸ்யமாக ' உறுதி எடுத்தாயா' என்று நான் கேட்டேன்.
'ஆம் மஹத்தயா. மூன்று நாட்கள் சமாளித்தேன். நாலாவது நாள் முடியவில்லை. அவனுக்கு கோல் எடுத்தேன். பத்து டொபி வாங்கி வைத்துக்கொள் சிகரெட் தாகம் ஏற்படும்போது அதிலொன்றை எடுத்து சுவைத்துக்கொள் என்றான். அப்படியே செய்தேன். இந்த நாசமாப்போன பழக்கங்களைவிட்டு ஐந்து வருடமாகிறது. இப்போது என்னைச் சுற்றி இருப்பவர்கள் பத்தினாலும் எனக்கு புகைக்க வேண்டும் என்று தோன்றுவதில்லை' என்றான்.

'அந்த நண்பன் அத்துடன் விடவில்லை. என்னை அவனுக்குத் தெரிந்த ஒரு அமைச்சரிடம் கூட்டிச் சென்று நான் ஒரு அநாதை எனவும் எனக்கு ஒரு ஜொப் கொடுக்குமாறும் வேண்டினான். எனது நிலைமையை கண்டு அனுதாபப்பட்ட அமைச்சர் மிருகக் காட்சி சாலையில் வேலை எடுத்து தந்தார்.
இப்பவும் அங்குதான் வேலை செய்கிறேன் மஹத்தயா. நீங்கள் ஸூவுக்கு வந்தால் என்னை சந்திக்க வேண்டும். என் பெயர் சுசந்த' என்றான்.

'திருமணம் ஆகிவிட்டதா' என்று கேஷுவலாகக் கேட்டேன்.'மஹத்தயா அது பெரிய கதை' என்று பீடிகையுடன் ஆரம்பித்தான்.
'நான் ஒரு அழகிய பெண்ணைக் காதலித்தேன்.' என்றதும் எனது சீட்டில் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.
'அவளிடம் சென்று அவளை விரும்புவதாகவும் என்னை மணம் செய்கிறாயா என்றும் கேட்டேன். அவள் என்னிடம் கேட்ட முதல் கேள்வி நீ தண்ணி அடிப்பாயா, சிகரெட் புகைப்பாயா ? அதற்கு நான் இல்லை என்றேன் '

'உனக்குத்தான் அந்தப் பழக்கங்கள் இல்லையே. அப்போ. உன் லவ் சக்கஸஸ்தான்' என்றேன் நான்.

'இல்லை மஹத்தயா. என்னை பிடிக்கவில்லை என்று சொல்லி விட்டாள்'

'நீ பொய் சொல்வதாக அவள் நினைத்திருக்கக் கூடும்'

'அப்படியில்லை. நான் குடிக்காமலும்

## பயணியின் கதை

புகைக்காமலும் இருப்பதால்தான் அவள் என்னை ஏற்க மறுத்தாள். பின்னர் என்னுடன் வேலை செய்த ஒருவனை மணந்தாள். அவன் மொடா குடிகாரன். குடித்து விட்டு தெருவில் விழுந்து புரளும் கேஸ்.'

'நல்லவனான உன்னை வேண்டாம் என்று சொன்னதற்கு அவளுக்கு இது வேண்டும் ' என்று நான் கூற, ' நீங்கள் அவளைப் புரிந்துகொள்ளவில்லை மஹத்தயா' என்றதும் நான் கமெண்ட் செய்து பல்பு வாங்கிக்கொண்டு இருப்பது தெரிந்தது.

அவன் தொடர்ந்தான், ' அவள் ஒரு லட்சியவாதி'
'என்னது அவள் லட்சியவாதியா? பட்ட குடிகாரனை முடிப்பதா லட்சியம்?'
'அதே தான்.'
நான் வாங்கிக்கொண்டு இருப்பது கன்பர்ம்.

'தன் வாழ்க்கையில் ஒரு குடிகாரனையாவது திருத்த வேண்டும் என்பதே அவள் லட்சியம். நான் போதைப் பழக்கத்தை கைவிட்டு திருந்தியவன். ஆகவே என்னை திருத்த முடியாது. அதனால் என்னை அவள் முடிக்கவில்லை'.

'அவள் லட்சியத்தை சாதித்தாளா? மொடா குடிகாரன் எங்கே திருந்துவது' இது நான்.
'தவறு மஹத்தயா. அவனை அவள் திருத்தினாள். அவன் இப்போது மது வாடையையே வெறுக்கிறான். இருவரும் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர்'.
எனக்கு ஆச்சரியத்தில் விழி பிதுங்கி வெளியே விழாத குறை. பெண்ணியம் பேசும் எத்தனையோ பேரைவிட அவள் சிறந்த ஆளுமையாக தெரிந்தாள்.

'மஹத்தயா எனக்கொரு கவலை என்றான்' அவன்.
'அவர்கள் நல்லா இருந்தா உனக்கென்னப்பா கவலை?' என்று வினவினேன்.
'நான் அவசரப்பட்டு திருந்திவிட்டேன். அவளிடம் என்னை மணம் முடிக்கிறாயா என்று நான் கேட்டபோது நான் திருந்தாமல் இருந்திருக்க வேண்டும். அவளுடன் வாழும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கும்'.

நான் இறங்கும் ஸ்டாப் வந்தது. விடை பெற்றேன்.
பஸ்ஸில் தூங்காமல் விழித்துக்கொண்டு வந்திருந்தால் இது போல் இன்னும் எத்தனை கதைகளை எழுதி இருப்பேனோ?

# கட்டிளமைப் பருவ உளநலம்
## சிறுவர் இல்லங்களில் கட்டிளமைப்பருவத்தினர்கள்

மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கை என்பது பெற்றோர் பிள்ளைகள், உறவினர்கள், அயலவர்களுடன் பிணைந்தது. யுத்தம், அனர்த்தங்கள், குடும்ப பிரச்சனைகள் தற்கால குடும்பங்களில் பல்வேறு பிளவுகளை ஏற்படுத்தி அதன் முடிவாக தற்கொலை, கொலை, உயிரிழப்பு, குடும்பப் பிரிவினை, தனிக்குடும்பம், பிள்ளைகள், உறவினர்களுடன், இவ்வாறாக குறிப்பிட்டளவு சிறுவர்கள், பெற்றோர், பாதுகாவலர் இல்லாத நிலையில் சிறுவர் இல்லங்களில் விடுபடுகின்றார்கள். இவ்வாறு விடப்படுகின்ற சிறுவர்கள் கட்டிளமைப் பருவத்தை அடையும் போது அவர்களில் பல்வேறு மாற்றங்கள், உளவியல் தாக்கங்கள், நான் யார் என்ற கேள்வியும், ஏன் இங்கு விடப்பட்டேன் என்ற கேள்வியும், மேலோங்கி அதற்கு தகுந்த பதில் அளிக்க முடியாத நிலையில் இருக்கின்றனர் நிர்வாகிகள்.

பதினெட்டு வயதின் பின் சமூகத்துடன் மீள இணையும் போது ஏற்படுகின்ற பிரச்சனைகள், பொருத்தமான வாழ்வாதாரத்தை தேடிக்கொள்வதில் ஏற்படுகின்ற பிரச்சனைகள் என அவர்களில் பலவேறு உளவியல் சார்ந்த நெருக்கீடுகளும், அவை ஏற்படுத்துகின்ற நெருக்கீட்டு விளைவுகளும் மாறுபடுகின்றன.

சிறுவர்கள் வாழ்வதற்கான இல்லிடம்

--------------------------------------------------------------

பிள்ளைகள் தமது பெற்றோருடன் தமக்குரிய வீட்டுச்சூழலில் பிறந்து வளர்வது அவர்களை பல்திறன் ஆளுமையுடையவர்களாகவும், மகிழ்ச்சிகரமானவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும், நல்லது கெட்டது அறிந்து நடக்கக் கூடியவர்களாகவும், தமது தேவைகளை உரிமையுடன் பெற்றோரிடம் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாகவும்



தமது சகோதர சகோதரிகள், உறவினர், அயலவருடன் ஒத்திசைந்து வாழக் கூடியவர்களாகவும், குடும்பத்தின் தாக்கங்கள், இடர்கள், பிரச்சினைகளை நேரடியாக அறிந்து அதற்கு ஏற்றாற்போல் நெகிழ்ந்து வாழக்கூடியவர்களாகவும், தமது விருப்பு வெறுப்புகளை வெளிப்படையாக தமது பெற்றோருடன் பகிர்ந்து வாழவும், பல்வேறு பிரச்சனைகளிற்கு முகம் கொடுத்து, பிரச்சனைகளை தீர்த்து வாழக்கூடியவர்களாகவும், பெற்றோர், சகோதர, சகோதரிகளின், உறவினர்களின் அன்பு, அரவணைப்புடன் வாழக்கூடியவர்களாகவும், தமது விருப்பு, வெறுப்புக்களை வெளிப்படையாக தமது பெற்றோருடன் பகிர்ந்து வாழவும், பல்வேறு பிரச்சினைகளிற்கு முகம்கொடுத்து, பிரச்சனைகளை தீர்த்து வாழக்கூடியவர்களாகவும், அவர்களது வாழ்க்கை அமைகிறது.

தமது உறவுகள் சரியாக இருக்கக் கண்டு அவர்களுடன் ஒத்திசைந்து வாழக்கூடிய சூழல் இருக்கிறது. தமக்குரிய உணவு, உடை, பொருட்களை பெற்றோர் மூலம் உடன் நிறைவேற்றக் கூடியதாக அல்லது தமக்கு ஏற்படும் நோய், நொடிகளை உடனடியாக பெற்றோர் மூலம் நிவர்த்தி செய்யக் கூடியதாகவும், பெற்றோர் தமது பிள்ளைகளின் தேவையை உடனடியாக பூர்த்தி செய்யமுடிகிறது. திறந்த தொடர்பாடல், கருத்துக்களிற்கு செவிமடுத்தல், தர்க்க ரீதியாக சிந்தித்தல் அவர்களின் சுய முன்னேற்றத்தில் அதிக கவனம், அக்கறை, சரியான கண்காணிப்பு, தட்டிக் கொடுத்தல், சுற்றுலா, கேளிக்கை, விழாக்களிற்கு அழைத்துச் செல்லுதல் உட்பட பல்வேறுபட்ட பயனுடைய செயற்பாடுகள் வீட்டில் தமது பிள்ளைகளிற்காக பெற்றோரால் செய்யப்படுகின்றன. பெற்றோரிற்கும் பிள்ளைகளிற்குமிடையில் உள்ளது உயிரியல் பிணைப்பாகும். அதனை வேறு எந்தவொரு நபராலும் பிரதியீடு செய்யமுடியாது. எனவே பிள்ளைகள் வளர்வதற்கு பொருத்தமான, பொதுவான இடம் வீடாகும். குறிப்பிட்டளவு பிள்ளைகளை பராமரிப்பதுவே மிகப்பாரிய சவாலாக பெற்றோர்களுக்கு அமைகிறது.

சிறுவர் இல்லங்கள்

--------------------------------------------------------------

நிர்வாகி, பிள்ளைகளை பராமரிப்பவர்கள், சமயற்காரர்கள், காவலர், நலன்விரும்பிகள், என மிகச்சிறிய அளவில் குறைந்தது 50-100 வரையான பல்வேறு வயதுள்ள பிள்ளைகளை பராமரிக்கும் ஒரு செயற்கையான நிறுவனமே சிறுவர் இல்லங்களாகும்.

ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள் என அவர்கள் தனித்தனியாக பராமரிக்கப்படுவார்கள். அந்தச் சிறுவர் இல்லத்தை பராமரிக்கும் நிர்வாகிகளான (ஆண் / பெண்) போன்றேரை எல்லாப் பிள்ளைகளும் பொதுவாக அம்மா, அப்பா என்பவர்கள் ஏனைய உறவு முறைகள் பெரும்பாலும் தெரிந்திருக்காது. யாரோ வெளியார் பணம், பொருள், சேவை கொடுக்க அதன் மூலம் அங்கு வளர்கின்ற பிள்ளைகளிற்கான உணவு, உடை, பாடசாலை செலவுகள், கல்விச் செலவுகள் செய்து கொடுக்கப்படும். நீண்ட மண்டபங்களில் படுக்கை வசதிகள், அதே அளவான மண்டபங்களில் கல்வி கற்றல், ஏனைய செயற்பாடுகள் அமையும். குளியலறை, கழிவறை பொதுவாக அமையப் பெற்றிருக்கும். குறித்த ஒழுங்கில் மூவேளை உணவு பொதுவாக கொடுக்கப்படும் பாடசாலைக்கு குழுவாக சென்று வருவார்கள். இவ்வாறாகவே பெரும்பாலான சிறுவர் இல்லங்களின் பொதுவான செயற்பாடுகள் அமையும். பெண் பிள்ளைகள் உள்ள இடங்களில் பூப்புனித நீராட்டு விழா ஒரு வருடத்தில் குறிப்பிட்ட நாளில் அந்த வருடத்திற்குரிய அனைத்து மகளிருக்குமான சடங்காக நடைபெறும்.

கொண்டாட்டங்களும் பொதுவாகவே நடைபெறும். அங்குள்ள பிள்ளைகளின் தனிப்பட்ட பிரச்சனைகளை கேட்டல், தனியான கவனிப்பு, கண்காணிப்பு பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்த்தல் என்பன அச்சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை, ஆளுமையுள்ள நிர்வாகிகள், பணியாளர்களின் திறனிலும், அக்கறையிலுமே தங்கியுள்ளது. இரண்டு பிள்ளைகளைக் கொண்டு நடாத்துவதே எவ்வளவு கடினமெனில் 50 பிள்ளைகள் உள்ள சிறுவர் இல்லத்தை எவ்வாறு கொண்டு நடாத்துவது? இது பொருத்தமா?

**டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்**
**உளநல மருத்துவர்**
**வாழைச்சேனை மருத்துவமனை**

இதன் இறுதி விளைவுகள் எவ்வாறாக அமையும்?

பிள்ளைகள் ஏன் சிறுவர் இல்லங்களில் விடப்பட வேண்டும்?

--------------------------------------------------------------

30 வருட யுத்தம், 2004- சுனாமி என்பன ஏற்படுத்திய அழிவுகளால் பெற்றோர்களை இழந்த மற்றும் உறவினர்கள், பராமரிப்பாளர்கள் இல்லாதபோது இருவரது திருமணத்தின் பின் விவாகரத்து, திருமணத்திற்கு முந்திய கர்ப்பம், பெற்றோர்களால் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட பிள்ளைகள், துஸ்பிரயோகத்திற்கு உட்பட்ட பிள்ளைகள், சிறுவர் பிள்ளைகள், (இதில் ஒரு பெற்றோரல்ல இருவருமே இறந்திருக்கலாம்). மறுதலையாக சிறுவர் குற்றவாளிகள் என நீதிமன்றத்தால் இனங்காணப்பட்டவர்கள், பாடசாலை இடைவிலகியவர், பலதார திருமணத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் என பல்வேறு பிரச்சனைகளுடன் உள்ள பிள்ளைகள் நீதிமன்றத்தினாலும் காவல்துறையாலும், சிறுவர் நன்நடத்தை / சிறுவர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களால் சிறுவர் இல்லங்களில் விடப்படுகின்றனர். யுத்த காலத்தில் யாரும் சிறுவர் இல்லங்களை தொடங்கலாம், நடத்தலாம். இலாபம் அடையலாம் என்ற நிலைமைகளில் தற்போது நிறைய மாற்றம் ஏற்பட்டுள்ளது. சிறுவர் இல்லங்களில் விடப்படுவது கட்டுப்படுத்தப்பட்டு அவை உரிய முறையில் கண்காணிக்கப்படுவது மிக வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

பிள்ளைகள் வளர்வதற்கு சிறுவர் இல்லம் எந்த அளவில் பொருத்தமானது?

பெற்றோருக்கும் பிள்ளைகளிற்குமான தொடர்பு "மின்வலுப் பிணைப்பு" போன்றது இதனை யாராலும் பிரதியீடு செய்ய முடியாது. நல்ல பெற்றோரின் அரவணைப்பில் கூட்டுக்குடும்பமாகப் பிறந்து, ஒன்றாக வாழ்ந்த பிள்ளைகளில் கல்வி, விளையாட்டு, சமூக செயற்பாடுகள், ஆன்மீக செயற்பாடுகள், என்பவற்றில் சிறந்து விளங்குவதை காண்கிறோம். மிருக வளர்ப்பிலிருந்து பிள்ளை வளர்ப்பு, பராமரிப்பு முற்றிலும் வேறுபடுகின்றது.

குறிப்பிட்ட வயது வரை பெற்றோரின் நேரடி கண்காணிப்பு அரவணைப்பில் பிள்ளைகள் வளர்வது மிகப் பொருத்தமானது. குடும்ப வருமானம், குடும்ப பொருளாதார நிலைமைகள், உறவினரின் உதவிகள், அரச உதவிகள் இவற்றைக்கொண்டு குடும்பத்தை நிர்வகிப்பது, குடும்பத்தில் ஏற்படுகின்ற பிரச்சனைகள் அவற்றை பெற்றோர் கையாளும் விதம், உறவினர் அயலவருடன் முரண்பாடுகள் ஏற்படுவதும் அவற்றை கையாள்வது, நல்ல நாட்கள், பெருநாட்களை கொண்டாடுவது, திருமணம், பிறந்த தினம், பூப்புனித நீராட்டு விழா என்பவற்றை குடும்ப உறவினர் ஒழுங்குபடுத்தி அவற்றை செய்யும் முறைகள். ஒருவருக்கு நோய் நொடிகள் ஏற்படும் போது ஏனைய உறுப்பினர்கள் அவர்களிற்கு உதவி செய்வது, குடும்பத்தில் ஒருவர் இறந்தால் அதனால் ஏற்படும் கவலைகள், மரணச்சடங்கு அதனுடன் தொடர்புடைய ஏனைய சடங்குகளை செய்யும் முறைகள், விருப்பமான உணவுகளை சமைத்து உண்பது, குடும்பமாக கோவில், திருமணச்சடங்குகள், உறவினர் வீடுகளிற்குச் சென்று வருவது, தேவையான பொருட்களை பெற்றோரின் உதவியுடன் வாங்கிக்கொள்வது, பெற்றோரின், உறவினரின், ஆசிரியர்களின் வழிகாட்டலில் கல்வி கற்பது போன்ற பல்வேறு விடயங்களை வீட்டுச்சூழலில் நேரடியாக கற்றுக்கொள்கின்றனர். அத்துடன் சகோதரர்களிற்கு இடையில் ஏற்படும் பிணக்குகளை அவர்களே தீர்த்து கொள்கின்றனர். இவையாவும் தனித்து வாழும் காலங்களில் பல்வேறு வழிகளில் அவர்களிற்கு பிரச்சனைகளிற்கு முகங்கொடுக்க உதவுகிறது. எனவே அவர்களது வாழ்க்கை சமனிலையாக அமைகிறது. சிறுவர் இல்லங்களில் உள்ள பிள்ளைகளிற்கு இவ்வாறான சூழ் நிலைகள் தெரிவது மிகக் குறைவு. மீண்டும் அவர்கள் சமூகம் நோக்கி திரும்புகையில் அவர்கள் பிரச்சனைகளிற்கு முகம் கொடுப்பதில் பல்வேறு இடர்களை அடைகின்றனர்.

சிறுவர் இல்ல கட்டிளமைப் பருவத்தினர்

--------------------------------------------------------------

ஆண், பெண் இருபாலாரும் கட்டிளமைப் பருவத்தை அடையும் போது அவர்களில் ஏற்படுகின்ற பல்வேறு உடல், உள பருவ மாற்றங்களிற்கு எற்ப, ஏற்படுகின்ற காதல், பாலியல்சார் பிரச்சினைகள், நவீன தொடர்பு சாதனங்கள் மீதான மோகம் என்பவற்றை சரியாக அறிந்து அவர்களிற்கு உதவி செய்யும் பராமரிப்பாளர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். அவர்களது பிரச்சனைகளை சரியான முறையில் அறிந்து உதவி செய்வது மிகப்பொருத்தமானது. அத்துடன் மீண்டும் சமூகம் நோக்கி செல்கையில் அவர்களை அதற்கு தயார்படுத்துவது என பெரியதொரு தயார் படுத்தல் செய்முறை தேவைப்படுகின்றது.

உண்மைச் சம்பவம்

--------------------------------------------------------------

கிழக்கிலங்கையிலுள்ள மிகப்பெரிய சைவ சிறுவர் இல்லம் ஒன்றில் இருந்து பல்கலைக்கழகக் கல்விக்குப் பிறகு திருமணம் செய்து கொண்ட இளைஞன் திருமணமாகி ஒரு வருடத்துக்குள்ளேயே விவாகரத்துப் பெற்றுக்கொண்டான். இங்கு இருவரினுடைய வாழ்க்கை துணை பொருத்தமாக அமையாதது விவாகரத்துக்குக் காரணமாகின்றது. மேற்படி

தொடர்ச்சி... (பக்கம் -23 )



தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

## திருக்குறள் இன்பம்

தொடர்ச்சி...

இக்குறளின் கருத்து.

இந்தக் குறள்கள் எல்லாமே இடம்பெற்றிருப்பது. தகை அணங்கு உறுத்தல் என்ற அதிகாரத்திலேதான். தகை அணங்கு உறுத்தல் என்றால், தனக்குத் தகுதியானவளை, பொருத்தமானவளை ஒருவன் காணும்போது, அவளை அடையவேண்டும் என்ற எண்ணம் அவனின் மனதிலே உறுத்தும். அத்தகைய உறுத்தல் ஏற்பட்டுவிட்ட ஒருவனின் உள்ளத்து உணர்வுகளைத்தான் இந்த அதிகாரத்திலே வள்ளுவர் சித்தரித்துள்ளார். எனவே, இந்த அதிகாரம் காதல் வயப்பட்ட தலைவன் தலைவிக்கிடையிலான விடயங்களை மட்டுமே கூறுவதாகப் பொருள் கொள்ளக்கூடாது. ஆண்மகன் ஒருவன் ஒரு பெண்ணைப் பார்த்தபோது அவள் தனக்குப் பொருத்தமானவள் என்று நினைக்கின்றான் என்றால், அதேபோல அந்தப்பெண்ணும் அவனைத் தனக்கு ஏற்றவன் என்று நினைக்கிறாள் என்றோ அல்லது நினைப்பாள் என்றோ கொள்ள முடியாது. எனவே, ஓர் ஆணின் எண்ணத்திற்கு இசையாத பெண்ணொருத்தியின் பார்வையின் பாங்குகளே இக்குறள்களில் பெரிதும் புலப்படுத்தப்படுகின்றன என்றுகூடச் சொல்லலாம். அதேவேளை, உச்சக் காதல் உணர்வுகளில் முழுமையாக ஆழ்ந்துவிட்டவர்களுக்கும் இவற்றில் சொல்லப்படும் பெண்ணின் விழிகள் தரும் தாக்கம் மிகவும் பொருத்தமானதே. காதல் வயப்பட்டவர்கள் திடீரென்று எங்கோ ஒருவரையொரவர் காண நேரும்போது, அதுவும் எதிர்பாராத சந்தர்ப்பமாக இருந்துவிட்டால், இருவரின் கண்களும் சந்திக்கும்போது ஏற்படும் இதயத் துடிப்பு இருக்கிறதே அது உயிரைக்கொல்லும் மார்படைப்பு நிலைமைக்கே இருவரது உணர்வுகளையும் கொண்டுசெல்லும் என்பது காதல்வாழ்வில் அனுபவம்மிக்கவர்கள் ஒப்புக்கொள்கின்ற உண்மையாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்க முன்னரே திருவள்ளவர் அதனைத் துல்லியமாகச் சொல்லியிருக்கிறார் என்றால், பண்டைத் தமிழ் மக்களின் காதல் வாழ்வின் மகத்துவத்தை எண்ணி வியப்புறுவதிலிருந்து நம்மால் விடுபட முடியவில்லை.



தொடர்ச்சி...

# கட்டிளமைப் பருவ உளநலம்
## சிறுவர் இல்லங்களில் கட்டிளமைப்பருவத்தினர்கள்

இளைஞனால் தனது சைவ பாரம்பரிய வாழ்க்கை முறையில் இருந்து மாற முடியவில்லை அதனையே தனது துணைவி செய்ய வேண்டுமென்ற ஒரு தலையான முடிவும் இருவரும் நீண்ட நாட்கள் திருமண வாழ்வில் நிலைத்து நிற்க முடியவில்லை. ஆன்மீக ரீதியான சிறுவர் இல்ல நிர்வாகிகள் தமது கடும் கட்டுப்பாடுகளில் இருந்து ஓரளவிற்கு விலக்கழித்து தற்காலத்திற்கு ஏற்ற வகையில் பிள்ளைகளை பராமரிப்பது மிகப்பயனுடைய இடையீடாகும்.

மாற்று வழிகள்

--------------------------------------------------------------

செயற்கை பெற்றோர், உறவினர், அயலவர்களுடன் ஐந்து வெவ்வேறு வயதுடைய பிள்ளைகள் தனியான வீடுகளில் வளர்க்கப்படும் முறை ஒன்றுள்ளது. மிகச் செலவு கூடியது, பொருத்தமான பெற்றோர், உறவினர், அயலவர்களை பெற்றுக்கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் "விடுதலைப்புலிகளால்" செஞ்சோலை, காந்தரூபன், அறிவுச்சோலை, இவ்வாறான இல்லங்கள் நடாத்தப்பட்டன. அங்கு வளர்ந்த பிள்ளைகள் சாதாரண பிள்ளைகள் போலவே நல்ல உடல், உள, சமூக, ஆன்மீக நலனுடன் கல்வி, விளையாட்டு, திறன் சார்ந்த செயற்பாடுகளில் நன்றாக சிறந்து விளங்கினார்கள். இங்கு வீடுகள் அடுத்து அடுத்து அமையும். அவர்கள் பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பா, சித்தி, மாமா, மாமி என்ற எல்லா உறவுகளையும் அறிந்திருப்பார்கள். அவர்களது தேவைகளும் நல்ல முறையில் இனங்காணப்பட்டு பூர்த்தி செய்யப்படும். குழந்தையில்லாத தம்பதியினர், சமூக ஆர்வம் உள்ளவர்களை கொண்டு இவ்வாறு சிறிய குடும்பங்களை உருவாக்கி அங்கு பிள்ளைகள் வளர்க்கப்படும் மாற்று வழிமுறைகள் கட்டிளமைப்பருவ சிறுவர் இல்ல பிள்ளைகளில் பல்வேறு பிரச்சனைகளை கையாள்வதற்கான மாற்று வழியாக அமையலாம்.

இணையத்தில் வந்த சின்னக் கதைகள்

--------------------------------------------------------------

வட அமெரிக்காவில் ஒரு பறவை இனம் அழிந்து வந்தது. அதை பாதுகாக்க அந்த நாட்டு அரசாங்கம் முடிவு செய்தது. அதற்காக உயிரியல் பூங்காவில் தனியாக ஒரு அறை அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டது. அந்தப்பறவைக்கு தனிப் பாதுகாவலர், தனி உணவு அதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் கொடுக்கப்பட்டது. கோடை காலத்தை சமாளிக்க தனியாக குளிரூட்டப்பட்ட அறைகளும் உருவாக்கப்பட்டன. பறவை இனம் பெருகியது. பின்னர் வெளி உலகிற்கு சுதந்திரமாக விடப்பட்டது. அதற்கு தன் எதிரிகள் யார் என்று தெரியவில்லை எதிரிகளிற்கு உணவானது. மின் கம்பங்களில் எப்படி அமர்வது என்று தெரியவில்லை. பறவைகள் அழியத் தொடங்கின. (எதிரிகளிற்கு உணவாகி, மின் கம்பங்களில் கருகி, வண்டிகளில் மோதியும்) எந்த இனம் அழியக் கூடாது என்று எடுக்கப்பட்ட முயற்சி அந்த இனம் அழியக் காரணமானது. அதே போல்தான் நம் பிள்ளைகளும். நமக்கு கிடைக்கவில்லை என்று சொல்லி பெரும் வசதிகளை நமது பிள்ளைகளிற்கு கொடுத்து அழகு பார்க்கின்றோம். அழிவிற்கு உறுதுணையாய் இருக்கின்றோம். பூங்காவில் இருக்கும் விலங்கிற்கு வேட்டையாடத் தெரியாது. அதேபோல அதிக செல்லம், அன்பு, அரவணைப்பு கிடைக்கும் பிள்ளைகளால் தோல்விகளை தாங்க முடியாது. பிள்ளைகள் வெளி உலகத்தை அறிய தானாக வழி விடுங்கள். நல்லது, கெட்டதுகளை தானாகக் கற்றுக் கொள்ளட்டும். நீங்கள் கற்றுக் கொடுக்க மறந்த இந்தப் பாடத்தை இந்தச் சமூகம் மற்றும் இயற்கை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும்.

# தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய வரலாறும், வழிபாடும்

தொடர்ச்சி...

ஆலயம், மலை உச்சியில் பிள்ளையார் ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளன.

திருவிழா

--------------------------------------------------------------

ஒவ்வொரு வருடமும் ஆடிப்பூரணையில் திருகோண நட்சத்திரத்தில் இடம்பெறும் தீர்த்தோற்சவத்தையும் திருவிழாக்களின் எண்ணிக்கையையும் மையமாகக் கொண்டு உற்சவம் இடம்பெறும்.

நிருவாக அமைப்பு

--------------------------------------------------------------

முதலாவது செயற்குழு 1956ம் ஆண்டு ஆடிமாதம் ஆரம்பிக்கப்பட்டது. 1956ம் ஆண்டு மார்கழி மாதம் 9ம் திகதி நிருவாகசபை தெரிவு செய்யப்பட்டது. அதன்பின் பல தடவைகள் நிருவாகம் அமைக்கப்பட்டும் இடையில் தான்தோன்றீஸ்வரர் ஆலய நிருவாக சபையின் கீழும் இயங்கி வந்த நிருவாக அமைப்பானது மீண்டும் 1981ம் ஆண்டு தொடக்கம் பரவலான நிருவாக அமைப்பின் கீழ் தாந்தாமலை ஸ்ரீ முருகப்பெருமான் ஆலய நிருவாகம் தொடர்ந்து மும்மூன்று வருடங்களுக்கொரு முறை தெரிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நித்திய நைமித்திய பூசைகளும் விழாக்களும்

--------------------------------------------------------------

தினமும் மதியத்தில் நடைபெறும். விசேட காலங்களில் விசேட பூசைகள் நடைபறும்; அவை தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம்,சிவராத்திரி, சித்திரைவருடப்பிறப்பு, சித்திரைக்கதை, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிமகம், தீபாவளி, கந்தசஸ்டி, விநாயகர்காப்பு,திருவெம்பாவை போன்றவை இவ்வாலயத்தில் இன்றும் மிகச்சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

தீர்த்தோற்சவம்

--------------------------------------------------------------

வருடந்தோறும் முருகன் கோயிலில் கொடியேறி ஆடிப்பூரணையில் திருகோண நட்சத்திரத்தில் தாந்தாமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள தீர்த்தக் குளத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது. இத்தீர்த்தத்தில் தீர்த்தமாடியினால் எம்மை பீடித்துள்ள நோய்கள்,துன்பங்கள் நீங்கிவிடும்.

இவ்வருடத்திற்கான மகோற்சவம் ஆரம்பிக்கப்பட்டு திருவிழாக்கள் நடைபெறுகின்ற நிலையில், எதிர்வரும் 27.07.2018ம் திகதி இறுதித் திருவிழா நடைபெற்று, அன்றுகாலை 06மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

# கதிர்காமம் யாருக்குச் சொந்தம்?

தொடர்ச்சி... **சீலைக்குப் பின் சிலை? – 'திரை'க்கதை சொல்லும் தெய்வானை!**

பழைய கொடியேற்ற நாளா என்ற ஐயமும் வலுக்கிறது.)

தெய்வானை அம்மன் கோவிலில் மட்டும் ஒரு அதிசயம் நிகழும். ஒரே ஒரு நாளில், தன் மணவாளன் ஆடிப்பூரணையில் தீர்த்தமாடி மகிழ முதல்நாள், தன் திரைச்சீலை விலக்கி முகம் காட்டி அருள்வாள் தெய்வானை அம்மை. அந்த ஒருநாள் தரிசனத்தையும் அடுத்து வரும் தீமிதிப்பையும் எண்ணியபோது, விழாக்காலத்தில் மட்டும் தம் 'கதவு திறந்து' காட்சி நல்கும், அடியவர் தீப்பாய்ந்து பணியும் கிழக்கிலங்கையின் அம்மன்கள் (அம்மன் வழிபாடு), ஒரு கணம் நினைவில் மின்னி மறைந்தார்கள்!

கதிர்காமத்துக்கும் கிழக்கிலங்கைக்கும் உள்ள பிரிக்கொணாத உறவை அறிந்தவர்களுக்கு இங்கு ஒரு ஐயம் எழவேண்டும். ஏன் கதிர்காமமும் விழாக்காலங்களில் மட்டும் கதவு திறந்து வழிபடப்பட்ட கோவிலாக இருந்திருக்கக்கூடாது? கதவுக்கு முன் அங்கு ஏன் திரைச்சீலை இருந்திருக்கக்கூடாது? மூலவர் விக்கிரகம் கிளர்ச்சிக்காலத்தில் காட்டில் மறைக்கப்பட்டபின், ஏன் கல்யாண மடத்துக் குருதேவர் தம்மிடமிருந்த எந்திரப்பேழையை மூலவர் இடத்தில் அமர்த்தியிருக்கக்கூடாது? சிலையை மீட்கும் வரை வேறு வழியின்றியோ, அல்லது பெரிய கோவில் நிர்வாகம் கல்யாண மடத்திடமிருந்து கப்புறாளைகளால் கைப்பற்றப்பட்டபின்னோ, கருவறை ஏன் திரைச்சீலைகளால் நிரந்தரமாக மறைக்கப்பட்டிருக்கக் கூடாது?

கருவறைத் திரைச்சீலைக்கு முன் செதுக்குவேலைப்பாடுகள் கொண்ட கல்லாலான கைப்பிடிச்சுவரை காணலாம். தொன்றுதொட்டே மூடிய கோவில் என்றால், இதெல்லாம் எதற்கு? பெரிய கோவிலுக்கு வெளியே வந்து நின்று கருவறையைப் பார்த்தால், கருவறையைச் சுற்றிச் செல்லும் கூரையிடப்பட்ட சிறு பிரகாரமும் தென்படும். அது அடியவர்கள் சுற்றிவந்து வழிபடக்கூடிய அமைப்பில் தான், கருவறை கட்டப்பட்டிருக்கிறது என்பதற்கான சான்று. ஆனால் இன்று சுவர் எழுப்பப்பட்டு அது நிரந்தரமாக மூடப்பட்டிருக்கிறது. அந்தப் பாதையை அடைக்க அனுமதித்தவன், திரைச்சீலையையும் என்றென்றும் மறைக்க அனுமதித்தவன், ஒருவேளை காட்டிலும் மறைந்திருப்பவன், உள்ளே அமைதியாகத் தான் அமர்ந்திருக்கிறான். எது உண்மை, என்ன நடந்தது என்று அவனுக்கு மட்டுமே தெரியும். எனவே நாமும் அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசாமல் கதவை சாத்துவோம்..

ஏய், ஏய், கதிர்காமம் யாருக்குச் சொந்தம் என்று தலையங்கம் போட்டுவிட்டு எங்கே ஓடப்பார்க்கிறாய்? ஒழுங்கு மரியாதையாகப் பதில் சொல்லிவிட்டுப் போ என்று தானே முறைக்கிறீர்கள். கதிர்காமம் யாருக்குத் தான் சொந்தம்? மூன்று கிழமை இத்தனை விடயங்களை அறிந்த பின்னும், இன்னுமா பதில் தெரியவில்லை? இல்லை என்றால், அருணகிரி நாதரைப் பிடித்துக்கொள்ளுங்கள். அவர் வேறொரு விதத்தில் தான் பதில் சொல்கிறார். கதிரகாமக்கிரிப் பெருமாள் யார் யாருக்கு சொந்தமில்லை என்று சொல்கிறார் அவர். என்னவென்று? "சரியையாளர், கிரியையாளர், யோகர்கள் எல்லோருக்கும் எட்ட அரிதானவன், சமயபேதத்தினுக்கு அணுக ஒண்ணாத மெய்ப்பொருள்" என்கிறார் அவர். என்றால்? அவன் உண்மை அடியார்க்கு மட்டுமே சொந்தக்காரன். கதிர்காமம் அவர்களுக்கு மட்டுமே சொந்தம்!

பிறகென்ன?"கதிரமலைல வைச்ச விளக்குப் போல வாழுங்கோ" என்று வாழ்த்தி நானும் விடைபெறுகிறேனே! பிறகு சந்திப்போமா?

(முற்றும்)




மட்டக்களப்பு மாநிலத்தில் மூன்று மலைக்கோவில்கள் உள்ளன. தாந்தாமலை சங்குமண்கண்டிமலைஉகந்தமலை ஆகியன.இவற்றுள் மிகவும் தொன்மைவாய்ந்தது உகந்தமலை.இது 2000ஆண்டுகள் பழைமைவாய்ந்தது. முருகனுக்கு உகந்த மலை உகந்தமலை என்பர். மலை உச்சியில்ஏழு வற்றாதநீர்ச்சுனைகள் இருப்பது இவ்வாலயத்திற்கு மேலும் வனப்பூட்டுபவையாக உள்ளன. இராவணன்பூகாரம்பம் செய்து பாவம் தீர்த்த ஆலயம் இது. இங்கு தலவிருட்சமாக வெள்ளைநாவல் மரம் உள்ளது. கிழக்கே ஆர்ப்பரிக்கும் கடல் சூழ அடர்ந்த வனாந்தரம் நீர்நிலைகள். மத்தியில் கிறங்கவைக்கும்மலைத்தொடர். சதா விடாது வீசும் தென்றல். இத்தகைய மனோரம்மியமான சூழலில் அமைந்துள்ளஉகந்தமலையில் வடிவேல் குன்றமும் நீர்ச்சுனைகளும் மக்களை கவர்ந்திழுக்கின்றன. குன்றம் எறிந்த குமரவேல் தனது உடல் பெருக்கி வாழ்வு உயர்த்திநின்ற அவுணகுல மன்னனைஉரங்கிழித்தபின்னர் எறிந்த வேலானது பல்பொறிகளாகியதென்றும் மீண்டுவந்த
அத்தகையவேற்படைக்கதிர்களில் முதன்மையானது இங்கே (உகந்த) தங்கிற்று என்று ஐதீகம் கூறுகின்றது.

அப்படிப்பட்டபெருமைவாயந்த உகந்தமலை ஸ்ரீ முருகனாலயத்தின் ஆடிவேல்விழா உற்சவம் கடந்த 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நாளை (28) சனிக்கிழமை தீர்தோற்சவம் நடைபெறுகின்றது.






**அனுசரணை :**
**திரு.பெருமாள் பார்த்தீபன் (ஜே.பி)**
**பிரபல சமூகசேவையாளர்.**
**(உப தவிசாளர் பொத்துவில் பிரதேசசபை)**



திரு பெ.பார்த்தீபன் அவர்களின் ஏற்பாட்டில் பொத்துவில் அறுகம்பையில் புதியதொரு உல்லாசவிடுதி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

Prop. Mr. P.Parthipan(J.P.) SURFCABANA, Whiskypoint,Urani,pottuvil.

